என். கே. துரைசிங்கம்




# உயிர்




# உயிரி

சிறுகதைத்தொகுதி


என். கே. துரைசிங்கம்



வெளியீடு:
இலக்கியா வெளியீட்டகம்
கைதடி,
யாழ்ப்பாணம்.




| | |
|---|---|
| பெயர்: | உயிரி (சிறுகதைத்தொகுப்பு) |
| ஆசிரியர்: | என்.கே. துரைசிங்கம் |
| பதிப்பு : | 2014 |
| அளவு : | A5 |
| பதிப்புரிமை: | திருமதி வனிதா துரைசிங்கம் |
| பக்கம்: | xxii = 82 |
| வெளியிடுவோர் : | இலக்கியா வெளியீட்டகம் |
| | கைதடி. |
| | யாழ்ப்பாணம். |
| அச்சிட்டோர்: | நோபிள் பிறின்ரேர்ஸ் |
| | #817. ஆஸ்பத்திரி வீதி. |
| | யாழ்ப்பாணம். |
| விலை: | |

# என்னுரை



"ஒரு மனிதன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பது தான் பெருமை" என்ற வரிகள் பல தடவைகள் என்னுள் வந்துபோனதை நான் அனுபவித்திருக்கிறேன். கதை முடிந்தது. இனி மீட்சியே இல்லை சுபம் போடலாம் என்று நினைத்தபோதெல்லாம் அடுத்த நிமிடமே நிமிர்ந்து நிற்க முடிகிறது. முற்றுப்புள்ளி போடவேண்டிய இடங்களில் எல்லாம் ஆச்சரியக்குறி போட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாவேன். இதற்கு நம்பிக்கையின் பலமே காரணமாகிறது. அதற்கு மேலும் துணையாக இருப்பவை நூல்களே என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்ற வாசகமே என்னுள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியது. வாசிப்பு பழக்கம் தான் என்னுடைய பலம். ஆனால் புத்தகம் எழுதும் எண்ணம், வெளியிடும் துணிவு ஒரு துளிகூட இல்லாமல் இருந்தேன். அவ்வாறு நினைத்திருந்தால் மாணவ பராயத்திலே அதனைச் செய்திருக்கலாம் அதுபற்றி முடிவு செய்யவில்லை. ஆனால் இப்பொழுது சில நாட்களாய் உள்ளத்திலிருந்து இந்த விடயம் தொடர்பாக சிந்திக்கத் தொடங்கினேன். இதன் விளைவுதான் இந்த சிறுகதை தொகுதி. ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்த கதைகள்

கையெழுத்து பிரதிகள் என என்னிடமிருந்தவை கைவசமில்லை. ஆனாலும் அவற்றை திருப்பி திருத்தி எழுதி நண்பர்களிடம் காட்டினேன். இவற்றை புத்தக வடிவில் கொண்டுவர வேண்டும் என உற்சாகப்படுத்தினார்கள். எனது நம்பிக்கைக் கரங்களே நண்பர்கள்தான். இத்தகைய முயற் சிக்கு அன்றே வித்திட்டவர் மைத்துனர் திரு. ச. தங்கராசா. இன்றுகூட "அகல்விளக்கு" பத்திரி கையை வாசித்துவிட்டு பத்திரிகை தரம்தான் இதனைவிட புத்தகம் எழுதினால்தான் எனக்கு திருப்தியளிக்கும் என்றார். அப்போதுகூட இதுபற்றி சிந்திக்கவில்லை.

எனது பள்ளித் தோழர்களான சுவி ஸில் உள்ள திரு வாவி பாஸ்கர் பிரான்ஸிலுள்ள உதயகுமார் போன்றோர் என்னோடு கதைக்கும் போதெல்லாம் உனது எழுத்துக்களை பதிவு செய்ய புத்தகங்களை வெளியிட வேண்டும் என்று அன்புரிமையுடன் ஆலோசனை கூறுவார்கள். இவர்களின் கோரிக்கை இப்பொழுதேனும் நிறை வேறுவது சற்று ஆறுதல்தான். "உயிரி" வெளி யீடு என்பது என்னைவிட இந்த மூவருக்கும் மகிழ்ச் சியை அளிக்கும் என்று நம்புகிறேன் - இந்த துறை யில் என்னை ஊக்கப்படுத்திய உற்சாகமளித்த இந்த மூன்று உள்ளங்களுக்கும் நன்றிகள்.

நான் கதை எழுதுவதற்கான களம் எனது வீட்டிலே ஆரம்பமானது. மழலை பருவத்தில் தந்தையார் இரவு பொழுதுகளில் எல்லாம் கதை கதையாய் சொல்லுவார். உபகதைகள், நீதிக் கதைகள், சரித்திரக் கதைகள் என அவை விரி

வடைந்து செல்லும். அவை அந்த நேரத்தில் சுவையாக இருக்கும். அந்த கதை சொல்லும் வித மும் எமக்கு பிடித்துப்போயிருக்கும்.

"வந்தாளை கட்டினியோ வாழைப்பழும் உலக்கை எங்கே", "வண்டுகுண்டன் அப்பிட்டு கொண்டான்" என்று அந்த கதைகளில் வருகின்ற பாத்திரங்கள் இன்றும் அந்த நாட்களை நினை வூட்டும். "அரிச்சந்திரா மயான காண்டம்", "ஏழு பிள்ளை நல்லதங்காள்", "காத்தவராயன்", "பூதத் தம்பி" போன்ற நாடகங்களுக்கு கூட்டிச்செல்வார். பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றை விளக்கமாக சொல்லுவார். காத்தவராயன் பாடல் களை பாடிக்காட்டுவார். வி.வி. வைரமுத்துவின் கலாரசிகன் அவர். புராண, இதிகாச கதைகள் எல்லாம் தந்தையிடமே கற்றுக்கொண்டோம். பின் நாளில் அவைதான் கலை இலக்கியத்தில் என்னையும் ஆர்வம் கொள்ள தூண்டினதோ. எனது தந்தைக்கும் நன்றிகள்.

இத்தகைய முயற்சி பற்றி எனது தர்மபத்தினி யிடம் கூறியபொழுது என்னுள் உற்சாக மாத்தி ரைகள் போட்டாள். பிள்ளைகள் கூட இருந்து உத வினார்கள்.

புத்தக வெளியீட்டில் கூடிய பங்கெடுத்த பலன் எதனையும் எதிர்பாராத தம்பி சி.நிஷாகரன், புத்தகம் வெளியிடும் முயற்சிக்கும் தோள்கொடுத்த ராதையன் அண்ணா, எனது இலக்கிய செயற் பாடுகளுக்கு அன்று முதல் இன்றுவரை பல மாய் இருக்கும் மக்கள் வங்கி முகாமையா- ளர் க. சிறீதரன், ஓய்வுநிலை அதிபர் திரு

பா. செல்லத்துரை ஆகியோருக்கும். எனது இத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய மதிப்பிற்குரிய பிரபல எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களுக்கும் கருத்துரை வழங்கிய நட்புக்குரிய மூத்த பத்திரிகையாளர் எஸ். பெருமாள் அவர்களுக்கு என் நன்றிகள். வெளியீட்டுரை, ஆய்வுரை வழங்கிய அனை வருக்கும் நன்றிகள்.

"பொங்கல்" என்ற சிறுகதை 1984 லில் கைதடியில் முதலில் இடம்பெற்ற ராணுவச் சுற்றிவளைப்பை மையமாகக் கொண்டது. இது அப்போது ஈழநாடு வாரமலரில் வெளிவந்தது.

இதுபோன்றே இதிலுள்ள பல கதைகள் உண்மை சம்பவங்களின் பாதிப்பு. நான் பார்த் ததை அனுபவித்தவற்றை களமாகக் கொண்டே கதைகளை புனைந்துள்ளேன். இங்குள்ள பாத் திரங்கள் யாவும் எம்முடன் வாழ்ந்த வாழும் பாத் திரங்கள் ஆகும்.

யாழ்ப்பாணத்தில் யுத்தம் தீவிரமடைந்த போது நான். ஒரு பத்திரிகையாளராக கடமையாற்றி னேன். வாழ்வதற்கான சூழலே அற்றுப்போன நிலை எந்தவேளை எதுவும் நடக்கலாம். காலை யில் வீட்டில் இருந்து புறப்பட்டால் மாலை வீடு திரும்புவோமா என்பதே கேள்விக்குறிதான்.

ஷெல்வீச்சு, குண்டுவீச்சு, ஹெலிதாக்குதல், துப்பாக்கிச்சூடு என கொலைக்களத்தில் நின்று கடமையாற்றினேன். இன்று நினைத்தாலும் நெஞ்சம் பதற்றமடைகிறது. இந்தச் சம்பவத்தை மையப்படுத்தி "செய்தியாளரே செய்தியானார்"

என்ற தலைப்பிட்டு ஒரு சிறுகதையை எழுதி னேன். அச்சிறுகதையை ஈழநாடு வாரமலரில் பிரசுரிப்பதற்கு அன்று ஈழநாடு வாரமலர் ஆசி ரியர் புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் கதை அருமையாக இருக் கிறது என்று கூறி சரி பார்த்துவிட்டு அச்சகம் பகுதிக்கு கொடுத்தார். நல்ல படமும் போட்டு ஒரு பக்கத்தில் கதை வெளியாகி இருந்தது. கதை வந்த பக்கத்தை எனது பார்வைக்கு அனுப்பி வைத்தார். அடுத்த ஞாயிறு வாரமலரில் தயாராகிக் கொண்டிருந்தபொழுதுதான் 1988 பெப்ரவரி 29ஆம் திகதி பகல் 1 மணியளவில் ஈழநாடு குண்டுதாக்குதலினால் தகர்க்கப்பட்டு தடை செய்யப்பட்டது. அதனால் ஈழநாடு சிலகாலம் வெளிவரவில்லை இந்தக் கதையின் கதையும் முடிந்தது.

இக்கதை இப்பதிப்பிலும் வெளியாகவில்லை அடுத்த பதிப்பில் வெளியிடுவேன். இக்கதையின் உண்மைச் சம்பவம் நண்பர் நிமலராஜனுக்கு நடந்தது. ஆம் நிமலராஜன் ஒரு சுயாதீன செய்தியாளர் யுத்த நெருக்கடிக்குள் நின்று செய்தியாளராக கடமையாற்றியமையினால் கதை யின்படி "செய்தியாளரே செய்தியானார்" இவ்வா றாக ஒவ்வொரு கதைகளிற்கும் ஒரு பின்னணி இருக்கிறது.

அன்புடனும் நன்றியுடனும்

என்.கே. துரைசிங்கம்
பிரான்ஸ்.
10.08.2014

## உயிரி தொகுப்பிலுள்ள

### கதைகள் தொடர்பான சில கருத்துப் பகிர்வுகள்

உள்ளூரில் படித்து பட்டம் பெற்று பதவிகளில் இருப்பவர்களுக்கு தம் ஊரைப்பற்றி ஊரின் சிறப்புகள், ஊரிலுள்ள கலைஞர்கள், பெரியவர்கள் மற்றும் கலை கலாசார அம்சங்கள் பற்றிய அறிவும் அக்கறையும் இருப்பதைவிட வெளியூரில் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் அல்லது அங்கு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உள்ள அக்கறையும் அறிவும் அதிகம் என்றுதான் தோன்றுகின்றது. அவர்கள்தான் தம் ஊர்களுக்கு தேவையான விடயங்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். தம்மாலான உதவிகளை அனுப்புகிறார்கள். அவ்வளவு ஏன் அங்குள்ளவர்கள் நல்ல சில இலக்கிய படைப்புக்களையும் படைத்து அசத்தி வருகிறார்கள் என்பது பாராட்டுக்குரியது. இன்னும் வசதிபடைத்தவர்கள் இங்குள்ளவர்களின் இலக்கிய மற்றும் தொழில் துறைசார்ந்த ஆக்கங்களை சிறப்பாகவும் சரியாகவும் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிய மகிழ்ச்சியாக விருக்கிறது.

அண்மையில் தம்பி துரைசிங்கம் எழுதி வெளியிடவுள்ள அவரது சிறுகதைகளை வாசித்தபோது இவ்வாறு என் சிந்தனை ஓடலாயிற்று. நான் இலக்கியவாதியுமல்ல இலக்கிய விமர்சகனும் அல்ல. பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக இருப்பவன். அந்த முறையில் ஒரு நல்ல வாசகன் என்று சொல்லலாம். அந்த வகையில்தான் அவரது கதைகளை வாசித்தேன். அவை பற்றிய என் கருத்துக்களை இங்கு சொல்வதில் மகிழ்வுண்டு.

துரைசிங்கத்தை ஈழநாடு பத்திரிகையில் பணி யாற்றும் காலத்திலேயே அறியக் கிடைத்தது. செய்தி நிருபராக பணியாற்றிய அக்காலத்திலேயே அவர் சிறுகதைகளையும் எழுதியிருந்தார். இயல்பாகவே அடக்கமும், மூத்தவர்களை மதிக்கும் பண்பும் கொண்ட இளைஞராக அவர் விளங்கினார். ஒரு 15 வருட காலத்திற்குப் பிறகு என்று நினைக்கிறேன் அவரை நேரில் காணாதுபோனாலும் அவர் எழுதி யுள்ள கதைகள் மூலம் மீண்டும் அவரைக்காண முடி கின்றது. அவரது பல கோணங்களிலான தோற்றமும் ஆளுமையும் புலனாகின்றது. துரைசிங்கத்தின் ஆரம்பகால சிறுகதைகளுக்கும் தற்கால சிறு கதைகளுக்குமிடையில் நிறையவும் மாற்றங்கள், வளர்ச்சியின் வெளிப்பாடு, சிந்தனைச் சிறப்பு மற்றும் கதை சொல்லும் பாங்கிலும் ஒரு முதிர்ச்சியைக் காண முடிகிறது.

இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஒவ்வொன்றிலும் அவர் வாழ்க்கை, கிராமம், கிராமத்தின் மக்கள், அவர் களின் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றார்.

இத்தொகுப்பில் வரும் சில கதைகளில் அவர் என்ன சொல்லவருகிறார் என்பதை உடனடி யாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. கதையின் கருவை வெளிப்படுத்துவது சிலசமயம் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் சாதாரண வாசகன் ஒரு கதையை இரண்டுமுறை வாசிப்பான் என்று எதிர்பார்க்கமுடியாது. அதை விமர்சன போக்கில் வாசிப்பவர்களே சொல்வார்கள். நான் பார்த்த அள வில் துரைசிங்கத்தின் கதைகள் சிறு நீரோட்டம்போல தடங்கலின்றி ஓடுகின்றன. அவ்விதமாக அவரது நடை இழுத்துச்செல்கின்றது. அதுவே பெரிய வெற்றி என்பேன் நான். கதையை வாசிக்கத் தொடங்கு

பவனை கடைசிமட்டும் இழுத்துச் செல்வது பெரிய காரியம்.

வெளிச்சத்தைநோக்கி என்ற கதை 84ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது என்று தெரிகின்றது. துரைசிங்கத்தின் எழுத்துத்துறையில் ஆரம்பகால கதை என்றாலும் படித்துப் பட்டதாரியான இளைஞன் வேலைதேடியலைந்து களைத்துப்போய் இருக்கும் நிலையில் தனக்காக வாழ்ந்த தன் தாயின் துன்பங்களை துடைக்க படித்தவன் உடல் உழைப்பில் இறங்குவதை அந்த வகையில் வைராக்கியமான உறுதிப்பாட்டை விளக்குகிறது.

ஆசிரியரிடம் நகைச்சுவைக்கும் குறை வில்லை. குறட்டை என்ற கதையில் அவரை நகைச் சுவைக்காரராகக் காணமுடிகின்றது. குறட்டையா னது மனிதனை என்னவிதமாகவெல்லாம் ஆட்டிப் படைக்கும் என்பதை மிக நகைச்சுவையுடன் கூறுகி றார். பிறந்த ஊரில் இருந்து கொழும்பு வழியாக வெளிநாடு சென்று நிலைபெற்ற பிறகும் குறட்டை படுத்தும்பாடு - அதைப்பற்றிய ஆய்விலும் அவரை அழுத்திவிடுகின்றது.

தொகுப்பில் காணப்படும் பலகதைகளில் கண்கள் என்ற கதை உண்மையில் ஒரு வித்தியாசமான கதை. ஒரு தந்தையின் பாசத்தை கடைசிவரை எடுத் துச்செல்லும் ஆசிரியர் கடைசியில் வாசகனுக்கு ஒரு திருப்பத்தை வழங்கி உணர்ச்சியூற்றுகிறார். பொது வில் ஓஹென்றி என்ற ஆங்கிலக் கதையாசிரியரின் பாணியில் இது அமைந்திருக்கின்றது என்று கூறலாம்.

ஒன்றுகூடல் சமூகத்துக்காக உண்மையாக உழைக்கும் ஒருவருக்கு ஏற்படும் அனுபவத்தை கதை விளக்குகின்றது. நல்லது செய்து மக்கள் மனங்களை வெல்பவர்கள் மீது பிறருக்கு ஏற்படும் பொறாமையை

அருமையாக சித்தரிக்கிறார் ஆசிரியர். தமிழ் சினிமா பாணியில் அனைவரும் தவறை உணர்ந்து கொள்கிறார்கள்.

தொகுப்பில் வரும் சிலகதைகள் ஆசிரியரின் கதை சொல்லும் பாணிக்காகவே காத்துக் கொண்டிருக்கின்றன.

நம்பிக்கைக் கரங்கள் சற்று நீண்ட கதை போல் தோன்றினாலும் ஒரு நண்பனின் திறமைகள் பற்றிபேசப்படுகிறது. சலிப்பில்லாமல் படிக்க முடிகின்றது.

தந்தையின் தாலாட்டு இதுவும் ஒரு நண்பனின் கதை. அதில் மனைவிமீது அவன் வைத்திருந்த அன்பு வெளிப்படுகின்றது.

இந்தத் தொகுப்பில் எனக்கு ஒரு வாசகன் என்ற முறையில் மிகப் பிடித்த கதையொன்று இருக்கிறது. பிடிக்காத கதையும் உண்டு. படித்த கதையை மட்டும் இங்கு சற்று பார்க்கலாம். இது விமர்சனமல்ல என்னை இக்கதை ஏன் அதிகம் கவர்ந்தது என்பதற்கான கருத்து மட்டுமே.

கதையின் பெயர் ஆச்சி எல்லாருக்குமே ஆச்சிமார் இருந்திருப்பார்கள். இருக்கவும் செய்கிறார்கள் ஆசிரியர் காட்டும் இந்த ஆச்சி எல்லா ஆச்சிமார்களிலும் காணப்படக்கூடிய எல்லா அம்சங்களின் தொகுப்பு எனலாம்.

கதையில் ஆச்சியைப் பற்றிய வர்ணனைகளை விடுங்கள். அவர் வாழும் கிராமம், குறிச்சி மற்றும் வீட்டு மனை பற்றிய வர்ணனை உண்மையில் துரைசிங்கம் நன்றாகவே தன் கிராமத்தில் ஊறித் திளைத்தவர் என் பதை காட்டுவதாகும்.

**ஆச்சியைப் பற்றி அவர் கூறுவது**

ஓடி ஓடி உழைத்துக்கொண்டிருக்கும் ஆச்சி ஒரு நிமிடமாவது ஓய்வெடுக்கவில்லை. நோய்

நொடியென்று படுத்ததை நான் பார்த்ததில்லை. ஓயாத உழைப்பும் நல்ல உள்ளமும்தான் அவரை ஆரோக் கியமானவராக வைத்துள்ளது. தம்பி, தங்கச்சி, அப்பு, ராசா, மோனை என்றுதான் ஆச்சி எங்களை அழைப்பார். கல்லடித்து காயப்பட்டால்கூட என்னப்பு செய்யுது என்று ஆச்சியின் கையினால் தடவினாலே வலி தணிந்துவிடும்.

ஆச்சி வாழ்ந்த வீட்டின் சூழல் ஆசிரியரால் வர் ணிக்கப்படுவதை பார்ப்போம்.

சமையல் வீடு, பெரிய வீடு, தலைவாசல் என்று பனை ஓலையால் வேயப்பட்ட மூன்றுவீடுகள் ஆச்சியின் வளவிற்குள் அமைந்திருந்தன. அப்பு விவசாயியாக இருந்ததால் மாட்டுவண்டில் விடுவதற்கென ஒரு கொட்டிலும் புகையிலை பரவி விடுவதற்கென புகைக் குடிலும் அந்த வளவின் முற் பக்கத்தில் இருந்தன. மிளகாய் செய்கையின்போது தோட்டத்திலிருந்து ஆய்ந்துவரப்பட்ட சிவத்த மிள காய்கள் வீட்டு முற்றத்திலே காயப்போட்டிருக்கும் குரக்கன், சாமை, பனங்கிழங்கு, புழுக்கொடியல் என காலத்துக்குக் காலம் அவர்களது வீட்டுமுற்றத்திலே காய்ந்துகொண்டிருக்கும். இத்தகைய சூழலில் ஆச்சி பிறர் தேவைகளையும் நிறைவேற்றினார் என்றால் ஆச்சரியப்படத்தானே வேண்டும் என்கிறார் அவர். ஆச்சிமாரின் அரவணைப்பை அறிந்தவர்களுக்கு இன்னொரு சுவையான அனுபவத்தையும் ஆசிரியர் பகிர்ந்துகொள்கிறார்.

"முதல் நாள் சமைத்த பழைய சோறு, கறிகள், எல்லாம் போட்டு ஆச்சி தனது கையால் குழைத்து உருண்டையாக தருவார். கையிலே சாறு ஒழுக ஒழுக அதைச் சாப்பிட்டால் குஷியோகுஷிதான். குத்தரிசி சோற்றுடன் கத்தரிக்காய், பாகற்காய்,

பருப்பு வாழைக்காய், பூசணி, பயற்றங்காய், உரு ளைக்கிழங்கு, தக்காளிப்பழம் அத்தனை மரக்கறி களும் குழைத்து ஆச்சி தருவார். அத்துடன் மிளகாய் பொரியலும் கடித்துக் கடித்துச் சாப்பிட..."

உண்மையில் வாய் ஊறும் வர்ணனைதான். இப்படியான ஆச்சியை விடுத்து வெளிநாட்டில் போய் இருப்பவர்களுக்கு வருத்தமாய்த்தான் இருக்கும் - என்ன செய்யலாம் காலத்தின் கோலம் - தேவை யும்கூட.

தம்பி துரைசிங்கத்திற்கு என் பாராட்டுக்கள் - இன்னும் இதுபோன்ற படைப்புகள் பலவும் அவரிட மிருந்து வெளிவரவேண்டும் என்று வாழ்த்துவதில் மகிழ்ச்சியுண்டு.

எஸ். பெருமாள்

10.08.2014 முன்னாள் ஈழநாடு - ஆசிரியர்

# முன்னுரை

1982 - 1992 காலப்பகுதியில் நான் யாழ்ப் பாணம் கச்சேரியில் பணியாற்றினேன். அப்போது யாழ்ப்பாணத்தில் வெளியான சகல பத்திரிகைகளின் ஆசிரியர்களின் அறிமுகமும் நட்பும் எனக்கு இருந் தது. அதனோடு சேர்ந்து அந்த பத்திரிகைகளில் பணி புரிந்தவர்களின் நட்பும் கிடைத்தது.

கிருஷ்ரிசஞ்சன், விவேக், விமல்ராஜன், இ. பாரதி, எஸ். குகநாதன், ராஜ்குமார், என்.கே. துரை சிங்கம், ஏ.வி. மாணிக்கம் போன்ற சிலர் அதில் முக்கியமானவர்கள். வேறு சிலரின் நினைவு மட்டும் உள்ளது. பெயர்களை மறந்துபோய் விட்டேன்.

என்.கே.துரைசிங்கம் அப்போது ஈழநாட்டில் பணிபுரிந்தார். செய்தி தேடலின் காரணமாக மாவட்டச் செயலகத்திற்கு வருவார். செய்தி வழங்கக்கூடிய தகுதியில்லாத ஒரு எழுதுவினைஞர் பதவியில் நான் இருந்தபடியால் எங்கள் தொடர்பு வெறும் நட்பு மட்டு மானது.

இப்போது உள்ள மாதிரியான நவீன இலத் திரனியல் தொடர்பு சாதன வசதிகள் அப்போது இல்லாத படியால் எந்தத் தேவைக்கும் ஆட்களை நேரிலேயே சந்திக்கவேண்டிய கட்டாயம் அப்போது இருந்தது.

மேற்குறித்த காலப்பகுதியின் புறநிலையையும் அதன் சூழ்நிலையையும் அக்காலப்பகுதியில் வாழ்ந்த வர்களால் உணர்ந்துகொள்ளமுடியும். விடுதலைப் போராட்டம் உயர் கொதிநிலையில் இருந்த காலப்பகுதி என்பதைவிட எல்லாவற்றுக்குமான ஆரம்ப கால கட்டமாகவும், பிற நாட்டு அடக்குமுறையாளரின் கீழ் வாழ்ந்தால் எப்படி இருக்கும் என்பதை உணர்த்திய காலப்பகுதியாகவும் அது இருந்தது.

கால ஓட்டத்தில் சகலரும் எதிர் எதிர் திசைகளில் வெவ்வேறு காரணங்களால் வேறு வேறாகிவிட்டோம்.

இப்போது நண்பர் துரைசிங்கம் பிரான்சில்

நண்பர் துரைசிங்கத்திற்கு நீண்டகால ஊடக பணி அனுபவம் உண்டு. இங்கு ஈழநாடு, உதயன் பத்திரிகைகளில் பணியாற்றிய பட்டறிவு உள்ளது.

பின்னர் பிரான்ஸ் சென்ற பின்னரும் "பரிஸ் ஈழ நாடு" பத்திரிகையில் இணைந்து செயற்பட்டவர்.

இயல்பாகவே எழுத்துத் துறையில் அவருக்கு ஆர்வம் இருந்தது. அது காரணமாக பத்திரிகைப் பணிக்கு வரமுன்னர் 1980களில் "அன்பு" என்ற கையெழுத்து சஞ்சிகையினை தொடர்ச்சியாக வெளி யிட்டு இருந்தார்.

இதுதவிர தான் வாழும் சமூகத்தின் மீது தீராத பிடிமானம் கொண்டவர். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் - தன் சூழலில் வாழ்ந்த மக்களின் மேம் பாட்டுக்கு எப்போதும் பாடுபட்டு வந்தார்.

1983ல் சிங்கள இனவாதம் தமிழ் மக்கள்மீது திணித்த இனவாதப் போரினால் இடம்பெயர்ந்து வந்த மக்களை கைதடி சித்த மருத்துவத்துறை வளாகத்தில் வைத்து பராமரிப்புப் பணியில் ஈடுபட்ட பலருள் முதன் மையான ஆளாக நின்று செயற்பட்ட பெருமை இவ ருக்கு உண்டு.

அதற்கும் மேலாக பல்வேறு காரணங்களால் நலிந்து பொருண்மிய மேம்பாடும் இல்லாமல் கஸ்டப்படும் தனது மக்களை கல்வியிலும், பொருண் மியத்திலும் மேம்பாடு அடையச் செய்யவேண்டும். அதற்காக புதியதோர் சிந்தனைப் போக்கு உருவாக வேண்டும் எனவும் தீவிரமாகப் பாடுபட்டவர்.

இத்தகைய சிந்தனையை வெளிப்படுத்தக்கூடிய நாடகங்கள் இவற்றினை தானே எழுதி தயாரித்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் அப்போது

மேடையேற்றி பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர் என்பதை கவனத்திற் கொள்வோமாக.

அந்தக் காலம் முதலே அவருக்கு சிறுகதை எழுதும் ஆர்வம் இருந்தது. அவரது ஆரம்ப காலச் சிறுகதைகள் ஈழுநாடு பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன.

எழுதிப் பிரசுரமாகாத கணிசமான சிறுகதைகள் இருந்தன. பல்வேறு புறச் சூழ்நிலைகளால் அவர் எழுதிய சிறுகதைகள் ஒரு நூலாக தொகுத்து வெளியிட அவரால் முடியவில்லை.

எனினும் இப்போது அவை தொகுக்கப்பட்டு "உயிரி" என்னும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பாக வெளிவருகிறது.

எழுத்தை ஆழ்பவன் எழுத்தாளன். அவனது எழுத்து வலிமை மிக்கது. வலிமை மிக்கது மாத்திரம் அல்ல. அந்த எழுத்தைப் படிப்பவனுக்கும் புதிய அனுபவத்தை உந்தித்தள்ளும் ஊக்கத்தினை உளக் கிளர்ச்சியை புதிய சிந்தனைப் போக்கினைப் பெறும் வல்லமையை உருவாக்கிவிடும்.

ஆனால் இத்தகைய இயல்புகள் வாசகனுக்கு உன்னதமாக கிடைக்க படைப்பாளியின் படைப்புத் திறனும் உன்னதமாக இருக்கவேண்டும்.

எனினும் படைப்புக்களைப் படைக்கும் படைப் பாளிபோல படைப்புக்களைப் படிக்கும் வாசகர்களும் வெவ்வேறு தரங்களில் உள்ளனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உயர்ந்த படைப்பாற்றல் உள்ள ஒரு படைப் பாளியாலேதான் வேகமும் தாகமும் கொண்ட வாசகர்களைத் திருப்திப்படுத்த முடியும்.

இந்த முரண்நிலையாலேயே படைக்கப்படும் படைப்புக்களைப் பார்த்து கேலியாகச் சிரிக்கவும் கொடுப்புக்குள் சிரிக்கவும். சாதாரண வாரவெளியீட்டுக்

கதைகள் எனவும் வெறும் குப்பைகள் எனவும் இலக்கிய தரம் அற்ற கதைகளாக உள்ளன என்ற விமர்சனங்கள், உயர் படைப்புத்திறனுடன், உன்னத இலக்கியங்கள் படைக்கின்றோம் என்ற பெரும் நினைப்புக் கொண்டவர்களால் முன்வைக்கப்படு கின்றன.

படைப்பானது தொடர்ச்சியான செல்நெறியி னால்தான் வளர்த்தெடுக்கப்படுகிறது. உச்சப்படுத்தப் படுகிறது. இதற்குத் தேவை இடைவிடாத ஒறுநிலை வாசிப்பும், அதனோடு இணைந்த எழுத்துப் பயிற்சியும் முயற்சியும்தான்.

தமிழகத்தில் எழுத்தையும் வாசிப்பையும் முழுநேரத் தொழிலாகவும் கடலில் மூழ்கி முத்தெடுக் கும் செயற்பாடு போல நாளும் பொழுதும் அதே முயற் சியில் உள்ள ஏராளமான இலக்கியப் படைப்பாளிகள் உள்ளனர். அது காரணமாக அவர்கள் தத்தமது துறை களில் ஒளி வீசுகின்றனர்.

ஆனால் இத்தகைய சீரிய முயற்சி எங்கள் பகுதிகளில் மிகமிகக் குறைவு. ஒரு சிலர் தான் அவ் வாறான முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

முழுநேர எழுத்துப் பணியிலோ, முழுநேர இலக் கியப் பணியிலோ இங்கு யாரும் இல்லை. வேலைக்குப் போவது போல, சாப்பிடுவது போல, உறங்குவதுபோல எழுத்தும் ஒரு குறுகிய நேர முயற்சியே.

எனினும் உன்னத இலக்கியங்கள் படைக்க முனைவதாகக் கூறும் எங்கள் படைப்பாளிகள் பலர் எங்கள் வாழ்வுநிலை, எங்கள் அரசியல் நிலை, எங்கள் பொருண்மிய நிலை, மொத்தத்தில் அதளபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும், எங்களது அரசியல் பொருண்மிய சமூக நிலைகளை கருத்தில் கொள்ளாமல் எங்கேயோ நிற்கின்றன.

இன்று உச்சம் பெற்றுள்ள பின்னவினத்துவம் என்னும் போக்கில் பல்வேறு வகையான பிரிவுகள் வகுக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் நான் இங்கு குறிப்பிடவில்லை.

ஆனால் நடைமுறைக்கு முரணாக ஆண், பெண் உறவு பற்றியும், ஆண், பெண் உறவுக்கு மாறான ஓரின உறவு, சகோதரன் சகோதரிக்கு இடையிலான முறையற்ற உறவு போன்ற மனித வாழ்வில் புறநடையாகப் பார்க்கப்படுகின்ற பல் வேறு விடயங்களைப் பற்றியும் படைப்புக்கள் படைக்கப்படு கின்றன.

இது தவிர சக படைப்பாளிகள் கீழ்மைப்படுத்து கின்ற அவர்களின் சொந்த வாழ்க்கையை காயப் படுத்துகின்ற படைப்புக்கள் படைக்கப்படுகின்றன.

மனித உறவுகளில் புறநடையானவற்றை இலக்கியமாக்கலாமா? வேண்டாமா? என்பது பற்றி இங்கு விவாதிக்க வரவில்லை. ஆனால் எமது சமகாலச் சூழ்நிலையில் இவற்றைவிட முன்னி லைப்படுத்தவேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன.

இதுதான் இன்றைய நிலை. இத்தகைய படைப் பாளிகளே தங்கள் திறமைமிக்க படைப்புக்களுக்காக எந்த சக்தியின் செயற்பாடுகளுக்குக் கீழ் இருந்து அரசியல் பொருண்மிய விடுதலை கிடைக்காது கஸ் டப்படுகின்றோமோ, அத்தகைய சக்திகளிடம் இருந்து பட்டமும் பதக்கமும் இலக்கிய விருதுகளும் பெற்று மனம் மகிழ்கின்றனர் / மகிழப்போகின்றனர்.

இவ்வாறு தாய் பிச்சை எடுக்க அறுபத்தி மூவ ருக்கு பூசை செய்யும் படைப்பாளிகளோடு சாதாரண படைப்பாளிகள் எவ்வாறு ஒப்பீடு செய்யமுடியும்.

1905ல் வ.வெ.சு. ஐயரின் "குளத்தங்கரை அரசமரம்" என்னும் சிறுகதையுடன் ஆரம்பித்த

தமிழ்ச் சிறுகதை வரலாறு எத்தனையோ படைப் பாளிகளையும் இசங்கள், வாதங்கள் என்ற இலக்கிய கோட்பாடுகளையும் கண்டுவிட்டது. இவை எல்லாவற் றையும் கடந்துதான் சிறுகதை இலக்கியம் தன் பயணத்தைச் செய்கிறது.

எத்தனையோ வகையான சிறுகதைப்படைப் பாளிகள் இந்தப் பயணத்தில் சங்கமித்துள்ளார்கள். தொடர்ந்தும் வந்து கொண்டும் உள்ளனர். இதில் சிலபேர் சிலகாலம் பேசப்படுவார்கள். பிறகு கரைந்துபோய்விடுவார்கள். எப்போதும் பேசப்படுபவர் கள் ஒருசிலர்தான். ஆனால் அவர்களால் மாத்திரம் சிறு கதை வளர்க்கப்படுவதில்லை. வெல்லப்படுபவர்கள் மாத்திரம் அல்ல தோற்பவர்களும் இணைந்துதான் இலக்கிய வரலாற்றை உருவாக்குகின்றனர்.

சென்னை மெரினா பீச்சை கதைக்களமாகக் கொண்டு ஆரம்பித்த எங்கள் ஈழத்து சிறுகதைகள் இலங்கை தேசியம் பேசும் கதைகளாக பரிணமித்து மிகக் கஸ்டப்பட்டுத்தான் எங்கள் மண்ணில் எங்கள் மக்கள் எங்கள் வாழ் கருப்பொருளாகக் கொண்ட கதைகளாக மாறின.

மீண்டும் இப்போது அவை தடம்புரள முனை கின்றன.

எத்தனை படைப்பாளிகள் வந்தாலும் எத் தகைய இலக்கிய கோட்பாடுகள் வந்தாலும் எங் கள் வாழ்வு நெறிக்கும் பொருத்தமான எங்கள் வாழ் வனுபவங்களை வெளிப்படுத்தக்கூடிய படைப்புக்கள் வெளிவரவேண்டும். அதுவே தேவையும்.

துரைசிங்கம் அவர்களின் 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளன. இவை சிறந்த சிறுகதை களாக உண்மையான அனுபவத்தைத் தருகின்ற னவா. என்றெல்லாம் கேள்வி கேட்கலாம். இவை

பற்றிக் குறிப்பிட நான் இந்த இடத்தில் விமர்சக பணி ஆற்றவில்லை.

அவை அல்ல பிரச்சனை? உண்மையில் துரைசிங்கம் அவர்களின் மனநிலை. அவர் தான் சிறுகதை என நினைத்து எழுதிய இந்தப் படைப்புக் கருவால் அவர் கூறவரும் செய்தி என்ன?

அதனையே இங்கு சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன்.

வாழ்க்கையின் அடியாகவோ அல்லது பிரச்சி னையின் அடியாகவோ தோன்றும் ஒரு மனநிலை அல்லது உணர்வுநிலையே சிறுகதைக்கு முக்கியம் என்பார் பேராசிரியரன் கா. சிவத்தம்பி அவர்கள்.

துரைசிங்கம் அவர்களின் படைப்பு வேர் அவரது சொந்த மண்ணில் ஊடுவிட்டு பரவி யுள்ளது என்பதையும் அவர் தன் மண்ணின் மக்களிலும் அவர்கள் வாழ்வுச் சூழல் மீதும் தீராத பற்றுக்கொண்டவர், என்பதையும் அவரது படைப் புக்கள் சுட்டி நிற்கின்றன.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
இணுவில்.
01.08.2014.

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வெளிச்சத்தை நோக்கி | .... | 1 |
| 2. | பொங்கல் | .... | 7 |
| 3. | குறட்டை | .... | 13 |
| 4. | கண்கள் | .... | 19 |
| 5. | ஆச்சி | .... | 23 |
| 6. | உயிரி | .... | 29 |
| 7. | ஒன்றுகூடல் | .... | 34 |
| 8. | கூவாத குயில் | .... | 40 |
| 9. | நம்பிக்கைக் கரங்கள் | .... | 45 |
| 10. | மணம் மாறாத பூக்கள் | .... | 53 |
| 11. | எங்கிருந்தாலும் வாழ்வோம் | .... | 59 |
| 12. | ஆஸ்பத்திரியும் அந்த ஏழு நாட்களும் | .... | 64 |
| 13. | துடக்கு | .... | 71 |
| 14. | தந்தையின் தாலாட்டு | .... | 77 |

# சமர்ப்பணம்



அன்புத் தந்தைக்கு...

# வெளிச்சத்தை நோக்கி

அதிகாலையே நித்திரை விட்டெழுந்த ஞானம் பல் துலக்கி, முகம் கழுவிக்கொண்டு தனது இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டான் "முருகா இன்றைக்குப் போற 'இன்ரர்வியூ' வெற்றியாக முடிந்திட்டால்... கடவுளே... நீதான் துணை". என மீண்டும் கடவுள் மீதே பழியைப் போட்டுக்கொண்டு தனது பழைய உடைகளை எடுத்து 'ஸ்த்திரிகை' போட்டு பத்திரமாக மினுக்கி எடுத்தான்.

"ஓ துரையர் உடுப்போ மினுக்கிறர் இஞ்சை, நானொருத்தன் இருக்கிறன் உழைச்சுத்தாறதுக்கு. சாப்பிட்டுப்போட்டுத் திமிர் எடுக்கத்தான் தெரியும்" ஞானத்தைக் கண்டதும் அவனது அப்பா கந்தையர் பாடும் வழமையான பல்லவி அது.

"தகப்பனுக்கும் மகனுக்கும் ஒரே கிரகம். அதுதான் ஞானத்தைக் கண்டால் தகப்பனுக்குப் பிடிக்காது. இருவரும் நெருப்பும் பஞ்சும்" மாதிரி. இவ்வாறு கந்தையற்ற தாய் அடிக்கடி சொல்வதுண்டு.

தகப்பனின் பேச்சிற்குக் காதுகொடுக்காமல் தனது வேலை யிலே கவனமாக இருந்தான் ஞானம். '...ம் எல்லாத்துக்கும் ஒரு

காலம் வரும் தானே" என தனக்குள்ளே யோசித்தவாறு ஞானம் சிலைபோல் இருந்தான்.

பாவம் அவன்தான் என்ன செய்வான். வேலை தேடி எத்தனை படிகள் ஏறியிறங்கியிருப்பான். எத்தனை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பான் பலன் இல்லை.

அவனது உழைப்பை எதிர்பார்த்து இரண்டு சகோதரிகள் அவனுக்குப் பின்னே இருக்குதுகள் அதுகளுக்குக் கலியாணம் காட்சியென்று வரும்பொழுதெல்லாம் ஞானம் தான் பொறுப்பு. கந்தையர் உழைக்கிறது அவருக்கு குடிக்கிறதுக்குக் காணாது பிறகு எப்படி வீட்டைக் கவனிப்பது.

பொன்னம்மா ஞானத்தின் அம்மா வாயைக்கட்டி வயித்தைக் கட்டி பக்கத்து வீடுகளிலும் தோட்டங்களிலும் கூலி வேலை செய்து கிடைக்கும் வருமானத்தில் தான் அவர்களின் குடும்பப் படகு ஓடுகிறது.

அவளுக்கு வருத்தம் என்று பாயில படுத்திட்டால்... அதோ கதிதான். அந்த வீட்டு அடுப்பிலே பூனைதான் படுக்கும்.

தந்தை கந்தையரை நினைக்கும்பொழுதெல்லாம் ஞானத்திற்கு ஆத்திரம்தான் வரும்.

மூக்குமுட்டக் குடித்துவிட்டு வந்து வீட்டில் நித்தமும் சண்டைதான். ஞானத்தைக் கண்டால் ஒரு கருக்கல்க் கதை போடாமல் இருக்கமாட்டார்.

"என்ன தம்பி யோசித்துக்கொண்டிருக்கிறாய். நீ படிச்ச படிப்புக்கு ஒரு வேலை வராமலா போகப்போகுது. இந்தக் கட்டை உயிருடன் இருக்குமட்டும் நீ ஒண்டுக்கும் பயப்படவேண்டாம். இந்தா தேத்தண்ணி குடி" என அங்கே தேநீருடன் வந்த தாயார் பொன்னம்மா ஞானத்துக்கு ஆறுதல் கூறியபடி தேநீரை வழங்கினார்.

"என்னம்மா செய்வது அப்பரிட்டை எத்தனை நாளைக்குத் தான் ஏச்சுக் கேட்பது" என அழாத குறையாகப் பேசினான் ஞானம்.

"தம்பி அவர் வெறிகாரன். இண்டைக்கு நேற்றே உப்பிடி அது கொண்டகோலம் மாத்தேலாது தொண்ணூறு நாட்கள் போட்டுது இன்னும் என்ன பத்து நாட்கள்தானே மனுசன் மண்டையைப் போட்டுவிடும்"

"அம்மா நான் வாழ்வது உங்களுக்காகத்தானே உங்களைப் போன்ற ஒரு தாய் யாருக்குத்தான் கிடைக்கும்." என தாயின் பாசத் தைக் கொட்டித் தீர்த்தான் ஞானம்.

"தேத்தண்ணி ஆறப்போகுது எடுத்துக் குடிச்சுப்போட்டு மிச்ச அலுவலைப் பார். நீ இண்டைக்குப் போற வேலை உனக் குக் கிடைக்க வேணுமெண்டு துர்க்கையம்மனுக்குப் பூசை செய்யிற துக்கு யோசித்திருக்கிறன். பொட்டயளைப்பற்றி நீ ஒண்டும் கவ லைப்படாதை" எனப் பேசிக்கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந் தாள் பொன்னம்மா.

'வேலை தேடி எத்தனை இடத்துக்குப் போயிருப்பன்... ம்... இன்றைக்குத்தான் கடைசி வேலை கிடைக்கவேணும் இல்லை யேல்...' விரக்தியின் வாசலிலே நின்றுகொண்டிருந்தான் ஞானம்.

'எனக்கு இந்த வேலை மாத்திரம் கிடைச்சால் என்ரை முதல் மாதச் சம்பளத்திலை அம்மாவுக்குச் சேலை தங்கச்சிக்கும் அக்காவுக்கும் உடுப்பு அப்பருக்கு... அவருக்கு ஒன்றுமே கொடுக் கக்கூடாது'.

'வேலைக்குச் சேர்ந்து இரண்டு வருடத்தில் அக்காவின்ர கலி யாணத்தை முடிச்சுப் போடவேணும். சீட்டுப் பிடிச்சால் எப்படியும் சமாளிச்சுப்போடுவன். மிச்சத்துக்கு கடன்பட்டு என்றாலும் சமா ளிச்சுப்போடுவன்'.

"இன்றைக்கு... யார்... எனக்கு பஸ்சுக்கு காசு தரப்போகினம். எத்தனை மைல் என்றாலும் பரவாயில்லை நடப்போம்..."

நேர்முகப் பரீட்சைக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான் ஞானம்...

வீட்டை விட்டு ஞானம் வெளியே வரவும் ஞானத்தின் மாமா மார்க்கண்டு வீதிக்கு வரவும் சரியாக இருந்தது...

"ஞானம் துலைக்கே போறாய். மார்க்கண்டு விசாரித்தார்...

'முழுவிசளம்... என்ன நடக்குமோ தெரியாது'. தனக்குள்ளே புழுங்கியவாறு

"நான் ஒருக்கா டவுனுக்கு..." என ஞானம் முடிக்குமுன்னே... குறுக்கிட்ட மார்க்கண்டு நான் எல்லாம் அறிஞ்சனான். அக்காவழியில் கண்டு சொன்னவ... அது சரி நடந்தே போகப்போறாய். இந்தா சைக்கிள்..." என தான் வைத்திருந்த சைக்கிளைக் கொடுத்தார் மார்க்கண்டு...

"வேண்டாம் மாமா நான் நடந்தே போறன்" என அவரிடம் உதவி பெறவிரும்பாமல் கூறினான் ஞானம்.

"எனக்கு இப்பொழுது சைக்கிள் தேவையில்லை நீ கொண்டுபோ"... எனக் கூறிய மார்க்கண்டுவிற்கு எதிர்வார்த்தை கூற விரும்பாமல் ஞானம் சைக்கிளை வேண்டினான்...

செல்லும் வழியெல்லாம் எங்கே போகிறாய்' என்று கேட்டவர்களுக்கு பதில் சொல்லியே அலுத்துப்போச்சு.

மாமான்ர சைக்கிள்... என்ன சொகுசு ஆக இருக்குது. அம்மாவுக்கு தம்பியாக வந்து பிறந்துவிட்டார். நல்ல மனிசன் ஆனா... மாமிமடக்கி வைச்சிருக்கிறா. எல்லாம் மாமி நினைச்சபடிதான் நடப்பார். எங்களையோ அம்மாவையோ கண்டால் மாமிக்குப் பிடிக்காது... இன்றைக்கு எனக்கு சைக்கிள் தந்ததுக்கு மாமியிடம் நல்லா வேண்டிக்கட்டுவார்...' பொன்னம்மாவின்ர சகோதரன் என்ற உறவினால் மார்க்கண்டு மகளுக்கும் ஞானத்திற்கும் உறவினர் முடிச்சுப்போட்டுக் கதைத்தனர். இதனை அறிந்த மார்க்கண்டுவின் மனைவி ஆவேசமாகப் பேசத் தொடங்கினாள்.

"என்ரை பிள்ளையின்ரை தகுதிக்கு அவன் என்ன மாப்பிள்ளை... மருமோன்தான்... எண்டாப்போல என்ரை மேளையே அவனுக்கு கட்டி வைக்கிறது. என்ரை மேள் போடுற செருப்பின்ரை வாழ்க்கை வருமே... அவன்". என கூடாத வார்த்தைகளால் ஞானத்தையும், அவளது குடும்பத்தையும் வசைமாரி பொழிந்தாள்...

இதனால் மார்க்கண்டு அவளோடு சண்டைபோட்டது இன்னமும் ஞானத்திற்கு ஞாபகத்தில் இருந்தது. "டபார்" என்ற சத்தத்துடன் சைக்கிள் ரயர் வெடித்தது... உலகமே... இருண்டுவிட்டதுபோல் இருந்தது ஞானத்திற்கு.

"பாவியார் போற இடமெல்லாம் பள்ளமும் திட்டியுமாம்..." என்ன செய்வது இன்னும் அரைவாசித் தூரம் இருக்குது சைக்கிளையும் உருட்டிக்கொண்டு நடந்தான். இறுதியாக நடந்த "இன்ரர்வியூ" கூட வெற்றியளிப்பதாகத் தெரியவில்லை.

வேதனையும், விரக்தியும் கலந்த நெஞ்சுடன் வாழ்வதா? சாவதா? எனப் போராடிக் கொண்டிருந்தான்.

தற்கொலை செய்தால்... என்ன அது கோழைகளின் முடிவு... அம்மா, அக்கா... இவைகளை மறந்து நான் மாத்திரம்... சீ, இந்த முடிவுகூடாது. சிந்தனையோடு இருந்தவன் "ஐயோ அம்மா" என்று உள்ளே இருந்துவந்த குரல்கேட்டு ஓடினான். உள்ளே தாய் பொன்னம்மாளைப் போட்டு தந்தை கந்தையர் அடித்துக்கொண்டிருந்தார். அவனது அக்கா இருவருக்கும் நடுவில் நின்று விலக்குத் தீர்த்துக்கொண்டிருந்தாள்.

"அப்பா விடுங்கோ அம்மாவை பாவம் அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு எங்களுக்கு சாப்பாட்டைப் போடுறா! நீங்கள் உழைக்கிறதைக் குடிச்சிட்டு இப்படி அம்மாவை அடிக்கிறியள். குடும்பத்தை வழிநடத்தவேண்டியவர் நீங்கள் இருந்தும் அம்மாவே ஆம்பிளை மாதிரி உழைச்சு குடும்பத்தைக் காக்கிறா. உங்களுக்கு வெக்கமில்லையா" என ஆத்திரத்தில் வாயில்வந்தபடியெல்லாம் பேசினான் ஞானம். அவனது இவ்வார்த்தைகளை எதிர்பார்த்திராத கந்தையர் "நான் ஒருத்தன் இஞ்சை இருக்கிறன் என்று ஒருத்தரும்தான் மதிக்கிறதில்லை" என்று கத்தினார்.

"நீங்கள் மதிப்புக் கொடுத்து எங்களை வளர்த்தால்தானே நாங்கள் மதிக்கிறது" என்றான் ஞானம்.

"நீ இவ்வளவுக்கு பேச வந்தாப்பிறகு நான் இங்கை இருக்க விரும்பவில்லை. நான் போறன்" என வீட்டைவிட்டே வெளியேறினார் கந்தையர்.

"தம்பி ஏன்டா அவரைக் கலைச்சனி. குடிகாரன் என்றாலும் ஐந்தோ, பத்தோ மனிசன்வீட்டுக்கு தாறது தானே இனிமேல் யார் தரப்போகினனம்" என்ற தாயார் பொன்னம்மாவைப் பார்த்த ஞானம் "அம்மா" அப்பர் கோவிச்சுக்கொண்டு இண்டைக்கே போனவர் இன்னும் கொஞ்சநேரத்தில் ஆள் வந்திடும்" என்றான்.

"குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு நெடுகிலும் எங்கடை வீட்டைதான் சண்டையும் சச்சரவும்" என்று அலுத்துக்கொண்டாள் பொன்னம்மா.

"அம்மா இனிமேலும் எங்கடை வீட்டில் சண்டையுமில்லை. சச்சரவுமில்லை... நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்" ஞானம் இவ் வாறு பேசிய பொழுது அதிர்ச்சி கொண்ட பொன்னம்மா "தம்பி நீ என்ன சொல்லுறாய்" என்றாள்.

"ஓம் அம்மா இனிமேல் நான் உழைக்கப்போறன். கூலி வேலைதான் செய்யப்போறன். உத்தியோகம் பார்க்கவேண்டும் என்றால் அது முடியுமா? நாங்கள் ஏழைகள் எங்களுக்கு அது கிடை யாது" என்று தனது இறுதித் தீர்மானத்தை வெளியிட்டான் ஞானம். "தம்பி ஞானம் நீ படிச்சபடிப்பென்ன அதை விட்டு வெயிலிலை காய்ந்து வேகப்போறன் என்கிறாய்". என்று மகனின் நிலைக்கு இரங் கிக்கேட்டாள் பொன்னம்மா.

"வளர்ந்துவிட்ட நான் வீட்டிலிருக்கும்போது நீங்கள் கஷ்டப் பட்டு உழைக்கிறது எனக்கு என்னமோ அவமானமாப்படுகுது. அது மாத்திரமல்ல எனது சகோதரிகள் கரையேற வேண்டுமென்றால் நான் கஷ்டப்படாமல் முடியாது" என்ற அவனது தீர்மானத்திற்கு மறுப்புத் தெரிவிக்கமுடியாமல் மௌனமாகவே இருந்த இடத்தை விட்டு எழுந்தாள் பொன்னம்மா. அவளது முகத்தில் நம்பிக்கை ஒளி படர்ந்தது. ஞானம்தான் எங்கள் குடும்பத்தலைவன் என்பதை அங்கீ கரத்து விட்டது அவளது மௌனத்திலிருந்து தெரிந்தது.

விடிவைத் தேடி புறப்படும் ஒரு போராளியாக தொழில் செய்ய புறப்படத் தயாரானான் ஞானம். *(1980)*

# பொங்கல்

மண்வெட்டியை மேலே தூக்கி மூன்று தடவை நிலத்தைக் கொத்திவிட்டு அருகேயுள்ள தோட்டங்களை நோட்டமிட்டார் கந்தையர். புகையிலைக் கன்றுகளும், மிளகாய்க் கன்றுகளும் ஒவ்வொரு தோட்டங்களிலிருந்தும் பச்சைப் பசேலெனக் காட்சி யளித்துக்கொண்டிருந்தன.

"எல்லோரும் பயிர்கள் நட்டுத்தான் போட்டாங்கள், நான் தான் இன்னும் ஒண்டுமே செய்யேல்லை. பொங்கலுக்கு முன்னம் எப்பிடியும் நட்டுப்போடுவன்" என்ற உணர்வுடன் மீண்டும் மண் வெட்டியைத் தூக்கிக் கொத்தத் தொடங்கினார். அவர்.

"மற்றவங்களுக்கு எத்தினை உதவியள் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் எண்டு...ம்... எனக்கு மாத்திரம்... என்ன செய்வம் எல்லாம் என்ரை விதி... என்ரை பிள்ளை இருந்தா..." என்று எண் ணியவர் ஏதோ நினைவு வந்தவராக ஓர் பெண்ணைப்போல விக்க லெடுத்து அழத்தொடங்கிவிட்டார்.

"என்ரை பிள்ளை இருந்தா இம்மட்டைக்குப் பயிர்கள் நட்டுப் பாத்திகட்டி இறைக்கவும் தொடங்கிடுவம். ஒவ்வொரு

தைப்பொங்கலுக்கும் மிளகாய் காய்ச்சுக் குலுங்கும் என் தோட்டம்... இப்ப.. என்ன செய்யிறது... எனக்கு நாலூறு பட்டுட்டுது... இல்லாட்டி ஒண்டுமறியாத என்ரைபிள்ளை வரதனை ஏன் அவங்கள் பிடிச்சவங்கள்... என்ரை பிள்ளையும் பயங்கரவாதியாம்... இந்த யாழ்ப்பாணத்து மண்ணில் பிறந்ததுதான் பிழை..." என்று மனத்துள் புழுங்கியவர் கடந்த மார்கழி மாதம் நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் அசைபோடலானார்.

அன்று ஒரு சனிக்கிழமை, கந்தையர் காலைத்தேநீரை மனைவியிடம் வாங்கி குடித்துக்கொண்டிருந்தார்... நாய்கள் தொடர்ந்து குலைக்கும் சத்தமும், பெரும் வாகன இரைச்சலும் தொடர்ந்து வெடிச்சத்தமும் கேட்டது.

"நத்தார் கொண்டாட்டமும் நெருங்குது அதுதான் உந்த வெடிச்சத்தம்" என்று கந்தையர் கூறினார். வெடிச்சத்தம் கேட்டு நித்திரையை விட்டெழுந்து வெளியே வந்த வரதன் "இல்லையப்பா... உது துவக்கு வெடிச்சத்தம்... ஆமிக்காரர் வந்திட்டாங்களோ..." என்று பீதியுடன் கூறினான்.

"உனக்குஎன்னவிசரேமோனைஆமிக்காரர்இந்தகாட்டுக்கேன் வாறாங்கள். இஞ்சையென்ன பெடியள் இருக்கிறாங்களே" என்று கந்தையர் கூற் "ஐயோ...ஆமிக்காரர்... ஓடுங்கோ... ஓடுங்கோ" என்று பலர் ஓடும் சத்தம் கேட்கிறது.

"ஆமிக்காரர் எங்கட ஊருக்கும் வந்திட்டாங்களோ... ஒரு வேளை இருக்கும். வல்வெட்டித்துறை எல்லாம் செக்பண்ணி எத்தினை பொடியளைச் சுட்டவங்கள்... அந்த வாசிகசாலை கட்டிடத்துக்குள்ள வச்சு... ஐயோ... நினைக்கப் பயமாக இருக்குது" என்று கந்தையரின் மனைவி பூரணம் பதறிக்கொண்டாள்.

"அம்மா நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதையுங்கோ... எனக்கு அடையாள அட்டை இருக்குது" என்று வரதன் கூறினான். எங்கும் பயங்கரமான குண்டுச்சத்தங்களும் வெடிச்சத்தங்களும் கேட்டன. குழந்தைகள் முதல் வயோதிபர் வரை கால் போன போக்கிலே ஓடத்தொடங்கினார்கள்.

"தம்பி வரதன், அவங்கள் உங்கட வயதுக்காரரைத்தான் பிடிப் பாங்கள். நீ எங்கையும் போய் ஒளிஞ்சு கொள்..." எனப் பூரணம் மக னைப் பார்த்து மன்றாடினாள்.

காக்கி உடையணிந்த ஒருவன் கந்தையர் வீட்டுப் படலையைத் திறந்து பளிச்சென மின்னும் ஆயுதமொன்றைத் தாங்கியபடி உள்ளே வந்தான். இவ்வளவு நேரமும் வீரம் பேசிக்கொண்டிருந்த வரதன் காக்கி உடையணிந்தவனைக் கண்டதும் ஓடத்தொடங்கினான்.

வரதன் ஓடிய களைப்பில் பற்றை ஒன்றுக்குள் சென்று தஞ்சமடைந்தான். அங்கே அவனைப்போல் பலரும் தஞ்சமடைந் திருந்தனர். பயத்தினால் அவர்கள் நடுங்கியபடி பதுங்கிக் கொண்ட னர்.

"யாரோ 'ரிப்' கொடுத்திட்டாங்கள்... அதுதான் இஞ்சை வந் தவங்கள்...'

"இஞ்சை என்ன இருக்குது "ரிப் கொடுக்க..." இவ்வாறு பயத்தின் மத்தியில் பலர் பேசிக்கொண்டார்கள். "டே... யாரோ வாற மாதிரித்தெரியுது" என பற்றைக்குள்ளிருந்த ஒருவர் கூறிய பொழுது... "ஓடுங்கோ... ஓடுங்கோ ஆமி இங்கதான் வருகுது" என்று பதற்றத்துடன் இன்னொருவன் அங்கே ஓடி வாறான்.

அந்தப் பற்றைக்குள்ளிருந்த எல்லோரும் வேறு திசையை நோக்கி ஓடினார்கள். அந்தத் திசையில் நவீன ரக ஆயுதங்களுடன் வந்த சீருடையினர், இவர்கள் எல்லோரையும் இடைமறித்தனர்.

"அடோ... ஒருத்தரும் ஓடப்படாது... ஓடினால் சுட்டுப்போடு வோம்..." என அந்தச் சீருடை தரித்தவர்களில் ஒருவன் கூறினான்.

துப்பாக்கிச் சூட்டிற்குப் பயந்து ஒருவரும் அந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட சீரு டையினர் அங்கு நின்ற வரதன் உட்படப் பல இளைஞர்களையும் தம்முடன் கூட்டிச்சென்றனர்.

இவ்வாறு அந்தக் கிராமம் முழுவதும் சீருடையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இருநூறு இளைஞர்கள் கைது செய்யப்பட் டார்கள்.

வரதன் கைது செய்யபட்டான் என்ற செய்தியறிந்த கந்தை யருக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. இந்தச் செய் தியைக் கேட்ட கணமே பூரணம் சுயநினைவிழந்தாள்.

"முருகா என்ரை பிள்ளையை அவங்கள் விட்டுட்டுப் போக வேணும்..." என்று கடவுளை வேண்டினார் கந்தையர். "இல்லை... என்ரை பிள்ளையை விடமாட்டாங்கள்" என்று பூரணம் புலம்பினாள்.

அந்தக் கிராமத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் வீடுகளிலெல்லாம் மரண ஓலம் கேட்டுக்கொண்டேயிருந்தது. எங்கும் ஒரே சோகமயம். எவர் முகத்திலும் துன்பக்களை. அந்தக் கிராமமே வெறிச்சோடிக் கிடந்தது.

அடுத்த நாள்... இலங்கை வானொலி முன் பலர் காத்திருந்தனர்.

"கைதடிக் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு 200 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். இராணுவச் சீருடைகளும், இரண்டு பயங்கரவாத முகாம்களும் கைப்பற்றப்பட்டன" என 'லங்கா புவத்'தை மேற்கோள்காட்டி வானொலி செய்தி தெரிவித்தது.

"என்னடா, ஏதுமறியாத அப்பாவி இளைஞர்களைக் கைது செய்துபோட்டு பயங்கரவாதிகளாம், முகாம்களாம், இராணுவச்சீருடைகளாம் யாருக்கு விடுறாங்கள்..." பலர் இப்படிப் பேசிக் கொண்டார்கள்.

வரதன் அன்று சென்றவன் தான் திரும்பி வரவேயில்லை... இன்று வருவான் நாளை வருவான் என்று காத்திருந்த கந்தையர் ஏமாந்தே போய்விட்டார். மகனின் கவலையால் தோட்டப் பக்கமே அவர் காலடி வைக்கவில்லை.

கச்சேரியும் வீடுமாய் அலைந்து களைத்துப்போன கந்தையர் 'இனி தோட்டத்தையாவது கவனிப்பம்' என்று இன்றுதான் தோட்டத்திற்குள் கால் வைத்தார்.

வரதனின் நினைவில் சங்கமமாயிருந்ததில் களைப்பே தெரியாமல் அரைப்பங்கு தோட்டத்தைக் கொத்தி முடித்தார் கந்தையர்.

"என்ன கந்தையா, தனியவே கொத்துறாய்? உதவிக்கு கேட்டால் நான் வரமாட்டனா" என்று குறைபட்டுக்கோண்டே தோட்டத்தில் இறங்கினார் சுப்பையா.

"இல்லைச் சுப்பையா, உன்னை ஏன் கயிற்றப்படுத்துவான்... என்னைப்போலதானே நீயும் பிள்ளையைப் பறிகொடுத்தனி" எனச் சமாளித்தார் கந்தையர்.

சுப்பையரும், கந்தையரும் பேசிக்கொண்டே மண்வெட்டியைப் பிடித்துக் கொத்திக் கொண்டிருந்தார்கள்.

கந்தையருக்கான காலைச் சாப்பாட்டுடன் பூரணம் வந்து கொண்டிருந்தாள். தோட்டக் கிணற்றடியருகிலுள்ள ஆடுகால் பூவரசமர நிழலில் சாப்பாட்டை வைத்து விட்டுச் சாப்பிட வருமாறு கணவனை அழைத்தாள்.

கந்தையர் மண்வெட்டியைத் தூக்கி ஒரு கையால் பிடித்துக்கொண்டு தலைப்பாகையில் செருகியிருந்த சிரட்டைச் சில்லியை எடுத்து மண்பிடித்திருந்த மண்வெட்டி முனையை உராஞ்சினார். ஆடுகால் அருகே கந்தையருடன் சுப்பையாவும் அமர்ந்துகொண்டார்.

"இண்டைக்குச் சுதுமலையைச் சுத்தி வளைச்சுப் போட்டாங்களாம். ஹெலிகொப்டர்களில்தான் வந்திறங்கினவங்களாம்" என்று சாப்பாட்டைப் பாத்திரங்களில் போட்டபடியே கூறினாள் பூரணம்.

"அதுதான் அங்காலப்பக்கம் சூட்டுச்சத்தங்கள் கேட்குது. ஏன் நேற்று கொழும்புத்துறையில் ஹெலிகாப்டரில் தானே வந்திறங்கி சுட்டவங்கள் பொடியளும் சுட்டவங்களாம்" சுப்பையர் மூச்சுவிடாமல் கூறினார்.

"பொடியள் தாக்கத் தொடங்கினால் அங்கையிருக்கிற எங்கடை பொடியளுக்குத்தான் கயிற்றம்..." என்று கூறியவாறே பூரணம் அழத்தொடங்கினாள்.

"என்ரை பெத்த வயிறு பத்தி எரியுது. என்ரை ராசாவை என்ன செய்யுறாங்களோ..." என ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள் பூரணம்.

"பூரணம், அழாதை, ஏதோ நடக்கிறது நடக்கும்தானே"... என

ஆறுதல் சொல்லிக்கொண்டே தன் கண்ணில் இருந்து உருண்ட கண்ணீர்த் திவலைகளை வேட்டித்தலைப்பினால் துடைத்தார் கந் தையர்.

"கந்தையா பூரணத்தை அழவேண்டாம் எண்டு சொல்லிப் போட்டு நீ ஏன் அழுகிறாய்? தனிய உங்கட பிள்ளையை மட் டுமே பிடிச்சவங்கள்? இஞ்சை இருக்கிற எத்தனை பேரைப் பிடிச்சிருக் கிறாங்கள். பிள்ளையின்ர பாசம் உங்களுக்கு மாத்திரமே? எனக்கும் தான். இஞ்சை இருக்கிற எல்லாருக்கும்தானே இருக்குது..." என்றார் சுப்பையர்.

"இந்த முறை பொங்கல் கொண்டாட்டமும் இல்லை கோவில் திருவிழாவும் இல்லை... ஒவ்வொரு வீட்டிலையும் ஒருத்த ரைப் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள். ஒவ்வொரு வீட்டிலும் செத்தவீடு நடக்க ஆர் பொங்கப் போகினம்... எப்படித் தைப்பொங் கல் செய்ய மனம் வரும்" என்று மேலும் கூறினார் சுப்பையர்.

"ஓ சுப்பையா... மட்டக்களப்பில, திருக்கணாமலையில... முல்லைத்தீவில... வவுனியாவில... இப்படி எல்லா இடங்களிலயும் எங்கட தமிழ் மக்களைச் சுட்டு, வெட்டி துரத்தினாங்கள். நாங்க இஞ்சை ஒண்டும் வராதெண்டு சந்தோசமாக இருந்தம். இப்ப... இஞ் சையும் வந்திட்டுது. எங்களுக்கு வந்தாத்தான் எல்லாம் தெரியும்.

எங்கடைப் பிள்ளையள் சிறையிலை காய, நாலு திக்கிலயும் எங்கட சனம் அகதிகளாக வரேக்கை இஞ்சை எங்களுக்கு ஒரு தைப் பொங்கலே"... பேசி முடித்தார் கந்தையர்.

இந்த நேரம் கந்தையரின் பேச்சைக் கிரகித்துக்கொண்டு அங்கு வந்த குமரேசன் அவர்களுடன் தானுமொருவனாக உட்கார்ந்து கொண்டு, "இந்த முறை ஒருத்தரும் பொங்கிறேல்லையெண்டுதான் ஊர் முழுக்கக் கதையாயிருக்கு..."

பொங்கலென்ன பொங்கல்... இந்த வளப்பை வளர்த்துப் பருந்தின்ர கையிலை கோழிக்குஞ்சைக் குடுத்தமாதிரிக் குடுத்துப் போட்டு... என்ன பொங்கல் என்ற பூரணம் "ஐயோ, என்ரை பிள்ளை எப்பவருவானோ..." என்று குளறத் தொடங்கினாள். *(08.12.1984)*

■

# குறட்டை

"இதில படுக்கிறதை விட மழை ஒழுக்கில படுக்கலாம்" என்று சின்னத்தம்பி மாமா சத்தம் போட்டு பேசியபடி தான் படுத்திருந்த பாயையும் சுருட்டிக்கொண்டு ஆவேசத்துடன் எழும்பிப்போனார். மாமா போட்ட சத்தத்தில் அந்த வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அனைவரினதும் நித்திரையே குழம்பியது. எல்லோரும் எழுந்து வெளியே வந்தனர். என்ன ஏதென விசாரணைகள் தொடர்ந்தன. மாமா பேயை கீயை கண்டாரோ இல்லை காளி உளக்கியதோ என ஆராய்ச்சி நடந்தது. மாமா ஒரு கதையும் இல்லாமல் பேயறைந்தவர் போல எதையோ வெறிச்சுப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த வீட்டில் ஷெல் விழுந்து அங்கு வாழ்ந்தவர்கள் உடல் சிதறிப் பலியானதாகவும் இது அவலச் சாவு என்பதால் அடிக்கடி வித்தியாசமான நடமாட்டங்கள், சத்தங்கள் இரவு வேளைகளில் கேட்பதாகவும் அயலவர்கள் சொன்னார்கள். இதனை அங்கு தற்பொழுது இருப்பவர்களும் அவதானித்தார்கள். இதனால் மனப் பயம் ஏற்பட்டாலும் வேறு இடத்திற்கு செல்ல முடியாத காரணத்தால் பலர் கூடியிருக்கின்ற துணிச்சலினால் அங்கு வாழத் தொடங்கினார்கள்.

இரண்டாயிரமாம் ஆண்டு கைதடியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானபோது இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் உரும்பிராய் பகுதியில் தஞ்சமடைந்தனர். ஆலயங்கள், பாடசாலைகள் என தஞ்சமடைந்தவர்களை விட ஏனையவர்கள் மிதி வெடிகள் ஆபத்து என்று அடையாளப் பெயர்ப் பலகை போட்ட ஆட்களற்ற வீடுகளில் தஞ்சமடைந்தனர். அவ்வாறான வீடுகளில் ஒன்றான உரும்பிராய், பலாலி வீதிக்கருகில் இருக்கும் மாணிக்கப் பிள்ளையார் கோயில் அருகில் உள்ள வீட்டில் எங்களுடன் சேர்த்து பத்துக் குடும்பங்கள் வரை தஞ்சமடைந்திருந்தனர். எல்லோரும் நெருங்கிய உறவுகள் என்பதால் பிரச்சனைகள் இன்றி வாழ்ந்தோம். உணவு தயாரித்தல், மலசலகூடப் பாவனை என சில பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றை சமாளித்துக்கொண்டோம்.

ஏதோ ஒன்றை பறிகொடுத்தவர்போல முகம் வெறிச்சபடியிருந்த சின்னத்தம்பி மாமா எழுந்து பாயை விரித்து படுக்கத் தொடங்கினார். முன்னர் படுத்த இடத்தில் வீட்டுக் கூரையிலிருந்து ஓட்டையினால் மழை நீர் துளி துளிகளாக கொட்டத் தொடங்கியது. இதனால் அங்கிருந்து எழுந்து எனக்கு அருகில் வந்து படுத்தார். மாமா எனக்கு அருகில் படுத்தால் நீங்கள் நித்திரை கொள்ளமாட்டியள் என்று நான் கூறியதை இடைமறித்த மாமா "வீடு வாசல்களை விட்டு வந்திட்டம் மாமன், மருமோன் என்ற மரியாதையை பார்க்கமுடியாது மருமகன்" என்றவர் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டார். எனக்கு நித்திரை வந்தாலும் எல்லோரும் உறங்கிய பின்னர் தான் உறங்க வேண்டும் என்ற பழக்கமுடையவன். இரவில் நான் விடும் குறட்டையால் அருகிலுள்ளவரின் உறக்கம் குழம்பிப்போகும். இதனால் மாமாவை அருகில் படுக்கவேண்டாம் என்று தடுத்தேன். மாமா கேட்கவில்லை. இன்றைக்கு என்ன நடக்குமோ தெரியாது. ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம், விமானம் பறக்கும் சத்தம், ரயில் ஓடும் சத்தம் என பல சத்தங்களை எனது குறட்டை ஒலி எழுப்புவதாகவும் இசையமைப்பாளர் இளையராஜா

மட்டும் இதைக் கேட்டால் கொப்பியடித்துவிடுவார் என்றும் நண் பர்கள் சொல்வார்கள்... இந்த சத்தத்தை எப்படியடா உன்ரை மனிசி சகித்துக்கொண்டு அருகில படுக்கிறார். பாவம் உன்ரை மனிசி என்றும் கேட்பார்கள். கலியாணம் கட்டேக்க இப்படியில்லை. பல காலத்துக்குப் பிறகுதான் இந்தக் குறட்டை விடுற பழக்கம். நானென்ன வேணுமெண்டே குறட்டை விடுறன். வடிவேலு சொல்லுவது போல தானாய் வருகுது நானென்ன செய்ய. மனைவி மேலே அன்புள்ள ஆட்களுக்குத்தான் குறட்டை வரும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்ற ஒரு வதந்தியை நான் பரப்பிவிட்டன். இத னால் என்ரை மனிசிக்கு நல்ல சந்தோசம். இதனால் குறட்டை விட-ாத ஆக்களின்ர மனைவிமார் கணவன்மாரோட பிரச்சனைபட்டதா கவும் அறிந்தேன்.

சின்னத்தம்பி மாமாவின் பிரச்சனைக்குரிய காரணத்தை எனக்கு அருகில் படுத்திருந்த சின்ன மாமா எல்லோருக்கும் விளக்கமா கச் சொன்னார். இதனைப் புரிந்துகொண்ட அனைவரும் மீண்டும் தமது படுக்கைக்கு சென்றனர். இந்தக் குறட்டையால நான் பல இடங்களில் அவமானப்பட்டேன். வெளிநாட்டிற்கு போவதற்காக கொழும்பு விடுதிகளில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. விடுதி யில் சேரும்போதே எனது பிரச்சனையை அதன் முகாமையாளருக்கு கூறினேன். பிரச்சனையில்லை உங்களைப்போல பலருக்கு குறட்டை இருக்கிறது. நீங்கள் இங்க தங்கி நிற்கிறதிலை எங்களுக்கு இடைஞ்சல் இல்லை என்று கூறினார். அவைக்கென்ன எங்களிடத்திலிருந்து காசைக் கறக்கிற நோக்கத்தில் சமாளிப்பினம். எப்படியோ அங்கே தங்கத் தொடங்கினேன். கொள்ளுப்பிட்டி கடற்கரையோரம் அந்த விடுதியிருந்ததால் நல்ல காற்றோட்டம் உள்ள சூழல் எனக்கு பிடித்து விட்டது. விடுதியின் முற்றம் சீமெந்து போடப்பட்டு பளிங்கு தரை போல இருக்கும். இரவில் படுப்பதற்கு நல்ல இடம் என அடை யாளம் கண்டுகொண்டேன். எனக்கு ஒரு பாயும் பெட்சீற்றும் தலை யணையும் வழங்கினார். எனது பொருட்களை வைப்பதற்கு பொது

அறையொன்றில் சிறிய அலுமாரியும் தந்தார். அந்த முற்றத்தில் முகாமையாளரும் என்னுடன்தான் பாடுப்பார். தமிழ் ஆட்களின் விடுதி என்பதாலும் தமிழர்களே அதிகம் அங்கு இருப்பதாலும் அடிக்கடி இரவு வேளைகளில் பொலிஸாரின் சுற்றிவளைப்பும் நடக்கும். அதனால் முகாமையாளர் முற்றத்தில் படுத்தால் பொலிஸாருக்கு பதில் சொல்ல முடியும் என முதலாளிதான் அவரை முற்றத்தில் படுக்கச் சொன்னதாக முகாமையாளர் கூறினார். டென்மார்க்கில் இருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரன் செல்லத்துரை அங்க வந்து என்னைச் சந்தித்தார். அவர் விடுமுறைக்காக வந்திருப் பதாகவும் வேறு ஒரு விடுதியில் தங்கியிருப்பதாகவும் கூறி னார். பின்னர் எங்களுடனே வந்து தங்கினார். இரவு வேளை களில் விடுதி முற்றத்தில் எங்களுடனே உறங்கினார். அவருக்கும் என்னைப்போல குறட்டைதான். அதனால் அவரோ "டேய் என்ன குறட்டையடா விடுறாய்" என என்னை கலாய்த்தார். "நீங்களும் குறட்டைதானே" என்றேன். என்னைவிட நீ அதிகம் என்று கூறி- னார். எங்களின் உரையாடலில் சலித்துக்கொண்ட முகாமையாளர் நீங்கள் இருவருமே குறட்டைதான். யாருக்கு அதிகம் குறட்டை என்பது தெரியவில்லை என்று கூறினார். இன்று இரவு எங்களின் குறட்டையை அவதானித்து யார் அதிகம் குறட்டை விடுபவர்கள் என்பதை கண்டுபிடித்து நீங்கள் தீர்ப்புக்கூற வேண்டும் என்று குறட்டைப்போட்டியினை ஒழுங்குசெய்தோம்.

முகாமையாளர் இரவு முழுக்க விழித்திருந்து மத்தியஸ்தம் செய்து காலையில் தனது தீர்ப்பை அறிவித்தார். இருவருமே ஒரு- வரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் சரி சமனாக போட்டியில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள் என்றார்.

குறட்டை விடுற புருஷன்மாரை வெள்ளைக்காரிகள் வீட்டை விட்டு கலைச்சுப்போடுவாளவ எங்கட தமிழ் பொம்பிளையள் அப்படியில்லை. கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழ்கிறார் கள். இப்படி குறட்டை விடுற எங்களுக்கு எங்கட மனைவிமார் தான் தெய்வம் என்று செல்லத்துரை விளக்கம் சொன்னார்.

பிரான்ஸிற்கு வந்து சேர்ந்துவிட்டேன். எனது மனைவியின் தம்பி வீட்டில் தான் தங்கவேண்டும். மச்சானுக்கும் அவன் மனைவிக்கும் பிரச்சனையை கூறினேன். தங்களுக்கு பிரச்சனையில்லை தங்களது படுக்கையில் படுக்கலாம் என கூறினார்கள். காலையில் எழுந்ததும் எனது குறட்டையைப் பற்றிக் கேட்டேன். தங்களுக்கு என்னால் எந்தவித இடையூறும் இல்லை. நீங்கள் நிம்மதியாக தூங்கலாம் என்று கூறி தங்களின் சோஷலிஷ கொள்கையை அறிவித்தனர்.

பிராண்ஸில் இருந்து சுவிஸிற்கு செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது. எங்கட சின்னண்ணையுடன் ரெயிலில் புறப்பட்டேன். ஐந்து மணித்தியாலப் பயணம். சின்னண்ணையும் நானும் அருகருகா அமர்ந்து பயணித்தோம். எங்களுக்கு முன் சீற்றில் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஒருவர் அமர்ந்திருந்தார். பயணக் களைப்பில் எங்கள் இருவரையும் உறக்கதேவதை அணைத்துக்கொண்டால் அதில் மெய்மறந்து ஆழந்த உறக்கத்திற்கே போய்விட்டோம். எங்களின் உறக்கத்திற்கு கண் பார்வை பட்டதுபோல் முன்னால் இருந்த கறுவல் வாய்க்கு வந்தபடி எம்மை திட்டிக்கொண்டேயிருந்தான். அவன் போட்ட காட்டுக்கூச்சலில் இருவருமே எழுந்துவிட்டோம். என்ன நடந்தது என்பதை விசாரிக்க முன்னரே தனது பயணப் பொதிகளை இறக்கிக்கொண்டே எம்மைப் பார்த்து பொரித்துத்தள்ளியபடியே அவசர அவசரமாக எழும்பிச் சென்றான். எங்களது அழகான குறட்டைதான் அவனது கோபத்திற்கு காரணம் என்பதனை இருவருமே ஊகித்துக்கொண்டோம். உரும்பிராயில் சின்னத்தம்பி மாமா இடையில் எழும்பிச் சென்றதையும் கொழும்பு விடுதியில் நடந்த குறட்டைப்போட்டியையும் சின்னண்ணைக்குச் சொன்னேன். அவரும் தனது அனுபவங்களைச் சொன்னார். திரைப்படங்கள், நாடகங்கள், நாவல்கள், கதைகள், கவிதைகள் என பல படைப்புகள் வெளிவருகின்றன. ஆனால் எங்கட கதையைப் பற்றி யாரும் சிந்திக்கிறார்கள் இல்லையே என்றேன். இது என்ன கதை

அதைவிடும். தங்களுக்கு தங்களுக்கு நடக்கேக்க தான் எல்லாரும் புரிந்துகொள்ளுவினம் என்று சின்னண்ணை விளக்கம் கொடுத்தார்.

"குறட்டை விடுபவர்களை ஒன்று திரட்டி சங்கம் அமைத்து உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்" என்றேன்.

வயது ஏற ஏற எனது குறட்டைச் சத்தமும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. குடும்பத்தவர்களுக்குமட்டுமல்ல அருகிலுள்ள வீட்டுக்காரருக்கும் நான் ஒரு பிரச்சனைக்குரியவனாகிவிட்டேன். அதனால் நித்திரை கொள்ளாமலே இருக்கலாம் போல் இருந்தது. என்னைப் போல எத்தனை பேரின் வாழ்க்கை இந்தக் குறட்டைச் சனியன் குழப்பிக் கொண்டிருக்கிறதோ நித்திரை கொள்ளும் போது நிமிர்ந்து படுக்காமல் சரிந்து படுத்தால் குறட்டைச் சத்தம் கேட்காது என்று பெரியோர்கள் கூறினார்கள். அதனால் நிமிர்ந்து படுப்பதை நிறுத்தி சரிந்து படுக்கத் தொடங்கினேன். ஆரம்பத்தில் கஸ்டமாகத்தான் இருந்தது மெல்ல மெல்ல பழகிவிட்டேன். ஆனாலும் குறட்டைச் சத்தம் ஓயவில்லை.

குறட்டை தொடர்பாக பத்திரிகை மற்றும், சஞ்சிகை இணையத்தளங்களில் வரும் மருத்துவ குறிப்புகளை ஒன்றுவிடாமல் பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொண்டிருக்கிறேன். *(2006)*

■

# கண்கள்

மங்கள வாத்தியங்கள் முழங்க கெட்டிமேளம் கொட்ட 'மாங்கல்யம் தந்துனானே'.

என்ற ஐயரின் மந்திரம் ஒலிக்க மகளின் கழுத்தில் தாலிக்கொடி ஏறுவதை ஆனந்தக் கண்ணீருடன் பார்த்துக்கொண்டிருந்தார் கேசவநம்பி. அந்த மண்டபத்தில் நிரம்பியிருந்த அனைவருமே எழுந்து நின்று மணமக்கள் மீது பூக்களைத் தூவி வாழ்த்தினார்கள். கேசவ நம்பியுடன் அவரது மனைவியும் அருகில் நின்று மணமக்களுக்கு ஆசி வழங்கினார்கள். கேசவ நம்பிக்கும் அவரது மனைவி கோசலைக்கும் ஒரே ஒரு மகள் வித்தகி. இவர்கள் திருமணமாகி பல வருடங்களுக்குப் பின் கிடைத்த ஒரு பிள்ளை என்பதால் வித்தகி மீது அளவில்லாத பாசமும் அன்பும் இருவரும் கொண்டிருந்தனர். இதிலும் கேசவநம்பி மிகப் பிரியமாக இருந்தார். தனது உருவ ஒற்றுமையுடன் வித்தகி இருப்பதால் அளவு கடந்த ஆனந்தமும் மகிழ்ச்சியும் அவருக்கு. "கண்ணை இமை காப்பதுபோல வித்தகியை கவனித்து வந்தார் "ஆம்பிளைப் பிள்ளை என்றால் கேசவன் இல்லாமல் போயிருப்பார். அவரை உரிச்சுப்

படைச்சு பிறந்திருக்கிறாள் வித்தகி" என்று உறவினர்கள் கூறும் போது கேசவனுக்கு வானத்தில் பறப்பதுபோன்று ஆனந்தம். நாள் முழுவதும் அவளது நினைப்புத்தான் அதனால் "மகள்தாசன்" என்ற பட்டப்பெயரும் அவருக்குண்டு.

"பிள்ளைக்கு செல்லம் கொடுத்து வளக்கினம் பின்னுக்கு கஸ்டப்படப்போயினம்." என்று கேசவனின் காதில் படவே சிலர் கூறுவார்கள். இவை எதனையும் பொருட்படுத்தாமல் மக-ளின் மீது பாசத்தைக் கொட்டி வளர்த்தார். 'அடியாத பிள்ளை படியாது, பிள்ளையளை அடிச்சு வளர்க்க வேணும்" என்று யாராவது சொன்னால் போதும் பொத்துக்கொண்டு கோபம் வரும். அவ்வளவுக்கு பிள்ளைப் பாசம்.

வித்தகி சிறு குழந்தையாக இருக்கும்போதே அவளை அடிக்கடி தொட்டுப்பார்ப்பார். தான் காண்பது கனவா? நனவா? என்று கூட நினைத்துப்பார்ப்பார். குழந்தைக்கு வருத்தம் ஏதாவது வந்தால் மருந்து மாத்திரை வழங்குவதற்குக்கூட அவருக்குப் பயமாக இருக்கும். ஊசி ஏற்றுவதைக் கூட பொறுத்துக்கொள்ளமாட்டார். இந்தப் பொறுப்புகளை மனைவியிடமே விட்டிருந்தார். நித்திரைக்குப் போகும்போது கூட தன் நெஞ்சில் படுக்கவைத்து தாலாட்டுப்பாடியே தன் அருகிலே தூங்க வைப்பார். குழந்தைக்கு தோடு குத்தும் சடங்கு வந்தபோது தோடு குத்துவதை குழந்தை தாங்கமாட்டாதே என்று கலவரமடையத் தொடங்கினார். "அவளுக்கு இப்ப வேண்டாம் பிறகு குத்துவம்" என்று மனைவியிடமும் உறவினரிடமும் கூறிக்கொண்டிருந்தார். எல்லோரும் சேர்ந்து அவரை ஆறுதல்படுத்தி தோடு குத்தும் சடங்கை செய்ய வைத்தனர். தோடு குத்தல் அன்று குழந்தை அருகில் இல்லாமல் விலகியிருந்தவர் முடிந்தபின் வீடு வந்தபோது குழந்தை அவரைக் கண்டதும் வீறிட்டு அலறத் தொடங்கியதும் கேசவனும் ஒரு பாட்டம் அழுதேவிட்டார்.

எல்லா தகப்பன்மாரும் என்னைப்போல்தான் பிள்ளைகள் மீது பாசத்துடன் இருப்பார்கள் தானே எனக்குமட்டும் என்ன? என்று

தன்னையே அவர் கேள்விகேட்டதுண்டு. யுத்த நெருக்கடிகள், இடப் பெயர்வு போன்ற அனைத்துப் பிரச்சனைகளிலும் இருந்து மகளை காப்பாற்றி வளர்த்து பெரியவளாக்கி இன்று திருமண கோலத்தில் காணும் ஆனந்தம் அவர் கண்களை குளமாக்கின.

சடங்கு, சம்பிரதாயம் எல்லாம் முடிந்து மகளை மாப்பிள்ளை வீட்டில் விட்டு கிளம்பும்போதே அவர் பட்டபாடு அவளை விட்டுப் பிரிய மனமின்றி அவதிப்பட்டார். மகளின் பிரிவு தனக்கும் வேதனையாக இருந்தாலும் கணவனுக்கு காட்டிக்கொள்ளாமல் "என்னப்பா பிள்ளை பக்கத்தில தானே இருக்கிறாள் அடிக்கடி வந்து பார்த்திட்டு போகலாம் அல்லாவிடில் பிள்ளையும் வீட்டிற்கு வந்து செல்வாள்தானே. குழந்தைப்பிள்ளையள் மாதிரி அடம் பிடிக்கிறியள்..." கோசலை ஆறுதல் சொல்லி அவரை அழைத்தாள்.

"மாப்பிள்ளை என் உயிரையே உங்களிட்ட ஒப்படைக்கிறன்" என்று நா... தழுதழுக்க கூறிய கேசவன் மகளையும் மருமகனையும் அரவணைத்து முத்தமிட்டு விடைபெற்றார். தங்களுடைய வீட்டிற்கு வந்தவர் தான் தனிமையில் இருப்பதுபோன்று துடித்தார். அடிக்கடி மகளின் பிரிவு அவரை வாட்டிக்கொண்டிருந்தது. சாப்பிடமுடியவில்லை, நிம்மதியாக தூங்கமுடியவில்லை. வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருள்களிலும் மகளைக் கண்டார். 'என்னால் என்ர பிள்ளையை விட்டு இருக்கமுடியவில்லையே' என்று அரற்றிக்கொண்டிருந்தார். திருமணத்திற்கு வருகை தந்திருந்த உறவினர்கள் அனைவரும் கலைந்து சென்றனர். சிலர் கேசவனின் நிலையை உணர்ந்து அவருக்கு ஆறுதல் கூறிச் சென்றனர். பைத்தியம் பிடித்தவர் போல வீட்டுக்குள்ளே அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார்.

"பெண்ணாக பிறந்தால் அவள் இன்னொரு வீட்டிற்கு வாழச் செல்வதுதானே வழமை. அவளை வளர்த்து ஆளாக்கி ஒருவனின் கையில் ஒப்படைத்து அவளது நல்ல வாழ்க்கையைப் பார்த்து சந்தோசப்படுவதுதானே பெற்றோரின் கடமை. தலைமுறை

தலைமுறையாக இதுதானே எமது பண்பாடு" கேசவனின் நண்பர் ஒரு வர் அவருக்கு தேறுதல் வழங்கினார்.

இதுதான் நடைமுறை ஆனால் என்னால் அதனை தாங்கிக் கொள்ளமுடியவில்லையே என்று கண்கலங்கினார். கேசவன் "ஒன் றாய் வாழ்ந்து பிரியும்போது மனதுக்கு கஸ்டமாகத்தான் இருக்கும் கொஞ்ச நாள் போக எல்லாம் சரியாய் போகும் உன்ர மகளென்ன நாட்டைவிட்டு வேறு ஒரு தேசத்துக்கு போய்விட்டாளோ பக்கத் திலதானே பயப்பிடாதே. அவளுக்கு குழந்தைகள் கிடைச்சு பேரப் பிள்ளைகளை கண்டால் உன் துயரம் எல்லாம் தீரும்" என்று மீண்டும் அந்த நண்பர் கூறினார். நண்பரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட கேசவன் "என்ர மகளின் குழந்தைகளை அள்ளி அணைக்கத் துடிக்கிறேன். நினைக்கவே சுகமாக இருக்கிறது. எங்கட இறுதிக் காலத்தில் எங்களுக்கு அதிலேதான் சுகம் இருக்கு என்று கேசவன் கூறிக்கொண்டிருக்கும்போதே வித்தகியும் கணவனும் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

மகளையும் மருமகனையும் கண்ட மகிழ்ச்சியில் "கோசலை... கோசலை இங்கே யார் வந்திருக்கினம் என்று பார். ஓடி வா... பாருங்கோ... என்று கேசவன் ஆனந்தக் கூத்தாடினார்.

"மாமா உங்கள் கண்களை என்னிடம் ஒப்படைத்து விட்டதாக கூறினீர்கள் ஆனால் வித்தகியோ தன் உயிரை விட்டிட்டு வந்ததாக துடியாய் துடிக்கிறாள். அதனாலே உங்கள் இருவரின் பாசத்தையும் அன்பையும் உணர்ந்து இந்த வீட்டிலே நாளெல்லாம் வாழ்வதற்கு தீர்மானித்துள்ளோம். உங்களுக்கு சம்மதம்தானே" வித்தகியின் மாப்பிள்ளை கேசவனிடம் கேட்க கேசவனும் மனைவியும் மகிழ்ச்சி மழையில் நனைந்தனர்.

*1979*

# ஆச்சி

ஆச்சி காலமான செய்தி பல நாள்களிற்குப் பின்னர்தான் என் காதுகளிற்கு எட்டியது. இந்த இழப்பினை என்னால் தாங்கிக் கொள்ளமுடியாது தவித்தேன். காலை வேளையில் படுக்கையை விட்டு எழும்புவதற்கு முன்மே ஊரிலிருந்து தொலைபேசியில் பேசிய நண்பன் ஒருவன் இதனை தெரிவித்தான். ஆச்சியின் மரணச்சடங்கு, இறுதிக்கிரியை எல்லாமே வழமைபோல் நடைபெற்று முடிந்து பழைய கதையாகிவிட்டது என்றும் அவன் கூறினான். என் கண்கள் பனித்தன. கண்களிலிருந்து சாரை சாரையாக கண்ணீர் வடிந்தது. குரல் விட்டு ஓவென்று அழுதால்தான் என் சோகம் தணியும்போல இருந்தது. நான் இருந்த சூழலில் சத்தம் போட்டு அழமுடியாது. அந்தச் சிறிய அறையில் நான்கு நண்பர்களுடன் தங்கியிருந்தேன். ஒவ்வொருவரும் வேலைக்குச் செல்வார்கள் அதனால் அவர்களின் நித்திரையை நான் குழப்ப விரும்பவில்லை.

நான் பிரான்ஸிற்கு வந்து ஐந்து வருடங்களாகின்றன. இந்த நாள்களில் ஆச்சியுடன் எந்தவித தொடர்புகளும் கொள்ளவில்லை. ஆச்சியுடன் மட்டுமல்ல ஊரில் உள்ள எனது உறவுகள் எவருட

னுமே தொடர்புகள் இல்லாமலிருந்தேன். பிரான்ஸில் விசா இல்லாதது உட்பட பல்வேறு காரணங்களினால் விரக்தியடைந்த நிலையில் ஏனோதானோ என்று வாழ்ந்துகொண்டிருந்தேன். நண்பர்கள் எனக்கு ஆறுதலாக இருந்தார்கள்.

ஆச்சி என்மீது கொண்ட பாசமும் நான் அவர்மீது வைத்திருந்த அன்பும் எனது கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீர் பீறிட்டுக் கொண்டு வந்தது. விக்கலெடுத்து சத்தமிட்டு அழுதேவிட்டேன். நான் போட்ட சத்தத்தில் அந்த அறையே ரணகளமானது. "என்னடா ஏதாவது கனவு கண்டுவிட்டு பிதற்றுகிறாயா" என்று நண்பர்கள் அனைவருமே ஏக காலத்தில் எழுந்தனர்.

அழுகையை அடக்கிக்கொண்டு விபரத்தைக் கூறினேன். "வயது போன ஆச்சிதானே அதற்கு ஏன்ரா இப்படி கலங்குகிறாய்' என்று நண்பன் கேட்டான். "ஆச்சியைப் பற்றி உங்களுக்கு என்னடா தெரியும்" என்று கூறி 'பிளாஸ்பேக்'கிற்குச் சென்றேன்.

ஆச்சி அற்புதமானவர், அன்பானவர், சுயநலமே இல்லாதவர். எவருடனும் இனிமையாக பழகுவார். யாரையும் குறை சொல்லத் தெரியாது. எங்கள் கிராமத்தில் பிரதான வீதிக்கு அருகில் அவர் வசித்து வருவதால் தெருவடி ஆச்சி என்றுதான் அழைப்போம். எனது தாயாரின் தந்தையுடன் கூடப் பிறந்த சகோதரி எனது தாயின் அம்மா, அப்பா உயிருடன் இல்லை. ஆனால் அதற்கு ஈடாக ஆச்சி எங்களுடன் இரண்டறக் கலந்திருக்கிறார். அம்மா மாமி என்று ஆச்சியை அழைத்தாலும் ஒரு பெற்ற தாயைப் போல்தான் அவரை நேசித்தார். எங்கடை வீட்டில என்ன நடந்தாலும் ஆச்சியில்லாமல் எதுவுமே நடந்ததில்லை. அண்ணா, நான், தம்பி, தங்கச்சி என எல்லோரும் பிறந்தபோது அவரே அம்மாவை பராமரித்து வந்தார். எங்களில் எவருக்கேனும் வருத்தம் என்றாலும் ஆச்சிதான் கைமருந்து. எங்கள் தந்தையார் மாலை நேரங்களில் மதுபானம் அருந்துவார். ஆனால் ஆச்சியைக் கண்டால் இந்த நாள்களில் மறைந்து விடுவார். ஆச்சிக்கு அருகில் நிற்கவே மாட்டார். ஆச்சிக்கு பயம் கலந்த மரியாதைமிக்கவர்.

ஆச்சிக்கு கணவன், பிள்ளைகள் என்று குடும்பத்தவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களையும் கவனித்து அவர்களது கடமைகளையும் செய்து எங்களையும் பாராமரித்து ஏனைய உறவுகள், அயலவர்கள் என அனைவரினதும் இன்ப, துன்பங்களில் உரிமையுடன் பங்கெடுத்துக்கொள்வார். அதனால் ஆச்சி தங்களுக்குத்தான் என்று எங்கள் கிராமத்திலுள்ளவர்கள் போட்டி போடுவார்கள். எங்களுக்காக ஓடி ஓடி உழைத்துக்கொண்டிருக்கும் ஆச்சி ஒரு நிமிடமாவது ஓய்வெடுத்ததில்லை. நோய் நொடி வந்து படுத்ததை நான் காணவேயில்லை. ஓயாத உழைப்பும் நல்ல உள்ளமும்தான் அவரை ஆரோக்கியமானவராக வைத்துள்ளது. தம்பி, தங்கச்சி, அப்பு, ராசா, மோனை என்றுதான் ஆச்சி எங்களை அழைப்பார். கல்லடித்து காயம்பட்டால் கூட என்னப்பு செய்யுது என்று ஆச்சியின் கையி-னால் தடவினாலே வலி தணிந்துவிடும்.

பொங்கல், தீபாவளி, ஆலய உற்சவங்கள் மட்டுமல்ல மாழைய படையல், கார்த்திகை விளக்கீடு விஷேச தினங்கள் என்றால் ஆச்சி வீட்டில்தான் எங்களுக்கு சாப்பாடு. அறுசுவை உணவு என்று சொன்னால் அது என்னைப் பொறுத்தவரையில் ஆச்சியின் கையி-னால் சமைத்த உணவு என்றுதான் சொல்வேன். வாய்க்கு ருசியாக சமைப்பதில் ஆச்சி நிபுணத்துவம் மிக்கவர். ஆச்சியின் நல்ல பண்புகளிற்கு சிகரம் வைத்தாற் போல அவரது கணவன் அப்பு அமைந்திருக்கிறார். கருத்து ஒருமித்த தம்பதிகள் என்றும் புரிந்துணர்வுள்ள புருஷன், மனைவி என்பதும் இவர்களுக்குத்தான் பொருந்தும்போல. அப்பு ஆச்சியை ஒருபோதும் நோகச் செய்ததில்லை. ஆச்சியும் அப்புவுடன் முரண்பட்டதில்லை. அதே போல பிள்ளைகளும் அப்படித்தான். சிறந்த குடும்பம் என்ற விருது வழங்கினால் இவர்களிற்குத் தான் வழங்கவேண்டும் என்று சிபார்சு செய்வேன்.

சமையல் வீடு, பெரிய வீடு, தலைவாசல் என்று பனை ஓலையால் வேயப்பட்ட மூன்று வீடுகள் ஆச்சியின் வளவிற்குள்

அமைந்திருந்தன. அப்பு விவசாயியாக இருப்பதனால் மாட்டு வண்டில் விடுவதெற்கென ஒரு கொட்டிலும் புகையிலை பரவ விடுவதற்கென புகைக்குடியிலும் அந்த வளவின் முற்பக்கத்தில் இருந்தன. வண்டிற் கொட்டிலுக்கு பின் பக்கத்தில் மாட்டுத் தொழு வம் ஒன்றும் இருந்தது. புகையிலைச் செய்கையின்போது அறு-வடையாகும் புகையிலை வேலிகளில் தொங்கவைத்து காயப் போடுவார்கள். இந்தக் காட்சி புகையிலையால் வேலி அலங்காரம் செய்யப்பட்டதுபோல இருக்கும். மிளகாய் செய்கையின்போது தோட்டத்திலிருந்து ஆய்ந்து வரப்பட்ட சிவத்த மிளகாய்கள் வீட்டு முற்றத்திலே காயப்போட்டிருக்கும். குரக்கன், சாமி, பனங்கிழங்கு, புளுக்கொடியல் என காலத்துக்கு காலம் அவர்களது வீட்டு முற் றத்திலே காய்ந்து கொண்டிருக்கும். ஆச்சியின் குடும்பம் முழுநேர உழைப்பாளிகள். இத்தகைய சூழலிலும் ஆச்சி பிறர் தேவைகளையும் நிறைவேற்றுகிறார் என்றால் ஆச்சரியப்படத்தானே வேண்டும்.

ஆச்சியின் வீட்டில் விஷேசம் என்றால் மதியம், இரவு மட்டு மல்ல அடுத்தநாள் காலையிலும் முதல் நாள் சமைத்த பழைய சோறு, கறிகள், எல்லாம் போட்டு ஆச்சி தனது கையால் குழைத்து உருண்டையாக தருவார். கையிலே சாறு ஒழுக, ஒழுக அதைச் சாப் பிட்டால் ருசியோ ருசிதான். குத்தரிசி சோற்றுடன் கத்தரிக்காய், பருப்பு, வாழைக்காய், பூசணி, பயிற்றங்காய், உருளைக்கிழங்கு, தக் காளிப்பழம், பாகற்காய் அத்தனை மரக்கறிகளும் குழைத்து குழைத்து ஆச்சி தருவார். அத்துடன் மிளகாய் பொரியலும் கடித்து கடித்துச் சாப்பிட சொல்லிவேலையில்லை. இத்தகைய சாப்பாட்டை இனி என்று காண்போம். நாக்கு துடிக்கிறது. ஆச்சி யின் வீட்டிற்கு முன்பாக சனசமூக நிலைய கட்டமும் சற்று பின் தள்ளி வைரவர் கோயிலும் அதற்கு அப்பால் விளையாட்டுத் திட லும் இவற்றிற்கு அண்மையில் ஆச்சியின் தோட்டக்காணியும் விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் தாழைக்காடும் அதற் குப்பின்னால் பரவைக்கடலும் இருந்தன. மாரி காலங்களில் பரவைக் கடல் மழை

நீரினால் நிரம்பி வழிவதனால் பெரும் சமுத்திரம் போல காட்சி தரும். தோட்ட காலங்களில் பச்சை பசேலென தோட்டங்கள் இருக் கும். விளையாட்டு மைதானம் மாலைநேரங்களில் நம்மூர் கிராமத்து வீரர்களினால் நிறைந்து காணப்படும். அதேவேளை சனசமூக நிலை யத்திலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கென மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடும். எந்த நேரமும் எங்கள் கிராமம் பர பரப்பாகவே காணப்படும். அந்த நாள்களில் தாழைக்காடுதான் எங் கள் பலரினதும் மலசலகூடமாக இருந்தமையால் அதற்கு வந்து செல்பவர்களின் தொகையும் கணிசமான அளவு இருக்கும். மனித நடமாட்டம் அதிகரித்த பகுதியாகவே அது காணப்படும். இவ்வாறு பல தேவைகளிற்கும் அங்கு வருபவர்களின் தண்ணீர் தாகத்தை ஆச் சியின் வீடுதான் தீர்க்கும்.

இரவில் ஆச்சியின் வீட்டில் நித்திரை கொள்வதில் அலாதிப் பிரியம் உடையவன் நான். தலைவாசலுக்குள் படுப்பதற்கென்று ஒரு வாங்கும் இருக்கிறது. இதனை விட திண்ணை ஒன்றும் படுப்பதற்கு அல்லது இருப்பதற்கென வடிவமைக்கப்பட்டு சாணியினால் மெழு கப்பட்டிருக்கும். கட்டிலோ, மெத்தையோ தலையணையோ தேவையில்லை. உலகை மறந்தே படுக்கலாம். தூக்கம் தானாகவே வந்து சேரும். இரவு நேரங்களில் அந்த வீதிகளில் செல்லும் வாகன இரைச்சலோ அல்லது வேறு சத்தங்களோ உறக்கத்தைக் குழப் பாது. அவையெல்லாம் தாலாட்டாகவே இருக்கும். அதிகாலை 3-4 மணிக்கு கட கடவென்ற சத்தங்களுடன் மட்டுவில், நுணாவில் பகு தியில் இருந்து வரும் கிடுகு வண்டில்களின் சத்தம் புதிய இசை யைக் கேட்பதுபோல இதமாக இருக்கிறது. இந்த இசை இன்றும் என் காதுகளில் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கிறது.

ஆச்சிக்கு வெற்றிலை போடுவதோ அல்லது சுருட்டுக் குடிக் கும் பழக்கமோ எதுவுமேயில்லை. அப்புவும் அப்படித்தான் வாழ்ந்தார். நான் படித்து முடித்து வேலைக்குச் சேர்ந்து முதல் மாதச் சம்பளத்தில் ஆச்சிக்கு சேலை வாங்கிக் கொடுக்கவேண்டும்

என்று ஆசைப்பட்டேன். அதற்கு இடையில் வெளிநாட்டுக்கு வந்து விட்டேன். ஆச்சியும் என்னை விட்டுப்போயிட்டா...

இந்த 'பிளாஸ்பேக்'கை கேட்ட அனைத்து நண்பர்களும் 'ஆச்சி தெய்வம்டா, கடவுள்டா ஆச்சியின் ஆத்மா சாந்திக்காக ஐந்து நிமிடங்கள் பிரார்த்தனை செய்வோமாக' எல்லோரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

■

# உயிரி

அம்மாவிற்கு கடும் சுகயீனம் எந்நேரமும் எதுவும் நடக்கலாம். அம்மா உடலில் சா வெடில் அடிக்குது என்ற தகவல் கிடைத்த நாளிலிருந்து தம்பித்துரை நிம்மதியிழந்து காணப்பட்டார். உணவு உறக்கம் எதுவுமின்றி அம்மாவின் நினைப்பே அவரை ஆக்கிரமித்திருந்தது.

எப்பொழுதும் கலகப்பாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படும் அவர் கவலையுடனும் சோகத்துடனும் நடைப்பிணமாகவே காணப்பட்டார். ஒருவேளை அம்மா இல்லமல் போய்விட்டால் தானும் உடன்கட்டை ஏறிவிடுவது போல தாய்ப்பாசம் அவரை வாட்டியது. மனைவி, பிள்ளைகள் எவரிடமும் தனது கவலைகளை பகிர்ந்து கொள்ளாமல் தனக்குள்ளே அடக்கி வாசித்தார். தனிமையிலிருந்து தேம்பித் தேம்பி அழுதார். கடவுளே எனது தாயைக் காப்பாற்று என்று கலங்கினார். எந்தப் பிரச்சனை வந்தாலும் கண் கலங்காத, கடவுளையே கை எடுத்து கும்பிடாத ஆலயங்களுக்கு சென்றிருக்காத அவர் இன்று கடவுளையும் ஆலயங்களையும் தேடுகிறார்.

தாய்தான் கடவுள் தாயை வணங்கு கவலையெல்லாம் தீரும் என்பது அவரது கொள்கை. அந்தக் கொள்கையுடன் தான் அவரது ஐம்பது வருட வாழ்க்கையும் கழிந்தது. தாயில்லாமல் போனல் இனி எப்படி வாழ்வது?

திருமணத்திற்குப் பின் அம்மாவைப் பிரிந்து மனைவியுடன் வாழப் புறப்பட்டபோதே அவரது கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்தது. அப்போது ஆலயத்திற்குச் செல்வது போல அடிக்கடி அம்மாவைச் சென்று தரிசித்து வந்தார். பிள்ளைகள் பிறந்துவிட்டபோதும் அவர்களின் ஆறுதல் இருந்தாலும் அம் மாவை தரிசிக்காத நாளே இல்லை.

அன்னையை, உற்றார், உறவுகளைப் பிரிந்து பிரான் ஸிற்கு வந்து இருபது வருடங்களாகின்றன. இந்தப் பிரிவை நினைத்து நினைத்து அவர் ஏங்கித் தவிக்காத நாட்களே இல்லை. தொலைபேசி மூலமாகவாவது அம்மாவின் குரலைக் கேட்டு வந்த அவர் இனிமேல் எப்படி வாழ்வது என்ற எண்ணத்தில் கவலை யுடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். பிரான்ஸிலிருந்து அம்மாவிற்கு தொலைபேசி எடுத்தால் அப்பு, ராசா, மோனை, என்று அம்மா செல்லம் பொழிந்துகொண்டிருப்பார். எண்பது வயதைக் கடந்தநிலையில் அம்மாவின் உடல் நிலையில் பல நோய்கள் வந்துகொண்டேயிருக்கும். அப்போதெல்லாம் அம்மா சொல்லுகின்ற வார்த்தை "தம்பி எனக்கு வருத்தம் தான் உன்ரை குரலைக் கேட்டால் எல்லாம் மாறிவிடும். நீதான்ரா எனக்கு ஆறுதல். மருமகள், பிள்ளைகள் என்ன செய்யினம் அவையிட்ட குடு" என்று கூறி அவர்களுடனும் மனம் விட்டுப் பேசுவார். இவ்வாறு அம்மாவின் மனதுக்கு ஆறுதலாக நாலு வார்த்தை கதைத்தாலே போதும் மருந்து மாத்திரைகளின்றியே அவரது வருத்தம் தணிந்து விடுவதுடன் தம்பித்துரையருக்கும் புது தெம்பு ஏற்பட்டு அன்று முழுவதும் உற்சாகமாகக் காணப்படுவார்.

ஆனால் இப்பொழுது அம்மாவிற்கு கடும் சுகயீனம். அவருடன் பேசவே முடியாது. ஒருமுறை அம்மாவின் உடல் நிலைபற்றி அறிவதற்கு ஊரிலுள்ள வீட்டிற்கு தொலைபேசி எடுத்தபோது அங்கு எவருமே தூங்கவில்லை. தொலைபேசி தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது. சில நிமிடங்களில் தொலைபேசியை தூக்கிய ஒருவர் மிகவும் அமைதியாக மெல்லிய குரலில் பேசினார். வீட்டில ஏதோ நடந்துவிட்டதனை அவரது குரலிலிருந்து உணரமுடிந்தது. 'அம்மாவை சுற்றி இன, சனம் எல்லாம் கூடியிருக்கினம். ஆள் அடக்கத்தில இருக்கு அடுத்த காரியங்களை பார்க்வேண்டியதுதான்!' அந்தக் குரல் கூறியது. யார் எவர் பேசியது என்பதை விசாரிக்க முன்னரே தம்பித்துரையர் மயக்கம் போட்டு வீழ்ந்தார். பிள் ளைகள் அம்புலன்சுடன் தொடர்புகொண்டு உடனடியாகவே தம்பித் துரையர் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அன்று தம்பித் துரையர் வீட்டிலும் செத்தவீடு போல மயான அமைதி நிலவியது.

நீண்ட மணித்தியாலங்களின் பின்னர் அம்மா கண்விழித்து தன்னை சுற்றியிருந்த சுற்றத்தாரைப் பார்த்தார். "மனிசிக்கு இனி சாவில்லை உடனே பிரான்ஸிலுள்ள மோனுக்கு எடுத்துச் சொல்லுங்கோ" என்று அங்கிருந்த பெரியவர் ஒருவர் கூறினார். தம்பித்துரைக்கு தகவல் கிடைத்த அடுத்த கணமே ஆனந்தமடைந்தார். தாயுடன் தொடர்பு கொண்டார்.

ஆனால் இன்று நிலைமை அப்படியில்லை. அம்மா எங்களை விட்டு பிரிந்துவிடுவார் என்று தம்பித்துரையர் நினைத்துக்கொண்டிருந்தார்.

தம்பித்துரையர் ஊரில் இருந்த காலத்தில் அம்மாவிற்கு ஷெல் பட்டு இரத்த வெள்ளத்தில் அவர் கிடந்த காட்சியை கண்டு மனதால் அன்று இறந்துபோன தம்பித்துரையர் மீண்டும் அந்த நிலைக்கு ஆளாகி தாயின் நினைவில் வெந்துகொண்டிருந்தார்.

'தம்பி அம்மா உங்கள் எல்லோரையும் பார்க்க ஆசைப்படுகிறார்' கடைசி நேரத்தில அவரின் விருப்பத்தை நிறைவேற்று.

ஒருக்கால் வந்து 'பார்த்திட்டு போவன்', ஊரில இருக்கிற உறவுகள் தம்பித்துரையரை வற்புறுத்திக்கொண்டே இருந்தார்கள்.

பிரான்ஸில அகதி விசாவில இருக்கிற தம்பித்துரை எப்படி உடனடியாக ஊருக்கு செல்லமுடியும். அதற்கு சில நடைமுறைகள் இருக்கிறது. அலுவல்கள் பார்த்தாலும் கிடைக்காமல் போக லாம். இவ்வாறாக பலர் ஊருக்குப் போக விண்ணப்பித்த பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. முடிவெடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்.

அம்மாவின் உடல் நிலை ஒருமுறை மோசமாகியதை அடுத்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரது உடல்நிலையை பரிசோதித்த டாக்டர் கிட்னி ஒன்று செய லிழந்து விடடதாகவும் சத்திரசிகிச்சை மூலம் அதனை அகற்ற வேண் டும் என்றும் அவரது உடல்நிலையைப் பொறுத்தவரை சத்திர சிகிச்சை செய்யக்கூடிய நிலையில் இல்லை என்பதால் உறவினர்கள் எவருமே அதனை விரும்பவில்லை. 'அம்மாவிற்கு கிட்னி தேவை என்றால் எனது கிட்னியை கொடுக்கத் தயார்' என்று தம்பித்துரை கூறினார்.

"என்ரை பிள்ளையின்ர உடலில் எந்தக் கீறல் காயமும் வரக் கூடாது. என்னால் தாங்கமுடியாது. கிட்னிக்காக அவனது உடலை வெட்டுவதை என்னால் அனுமதிக்கமுடியாது! என்று தனது உடல் தளர்ந்து மரணத்தின் வாசலில் நின்றபோதும் அம்மா உறுதியாகக் கூறினார்.

மருந்து சிகிச்சைகளின் பின்னர் அம்மா வீடு திரும்பினார். மரணத்தை வென்று தனது வயதுக்குரிய தளர்ச்சியுடன் அம்மா காணப்பட்டார்.

"அம்மா மீது நான் கொண்டிருந்த பாசமா? அல்லது தான் இறந்துபோனால் நான் கவலைப்படுவேன் என்று அம்மா நினைத்து தனது இஸ்ட தெய்வங்களை வேண்டினாரோ? எப்படியோ அம்மா இன்னும் பல நாள்கள் எம்முடன் வாழ்வார்." என்று தம்பித்துரையர்

மகிழ்ச்சி மழையில் நனைந்து கொண்டிருந்தார். அம்மா கடும் நோயாளியாக மரண கட்டத்துக்கு சென்றுகொண்டிருந்த காலத்தில் தம்பித்துரையர் தாயைப் பற்றிய சினிமாப் பாடல்களை தனது தொலைபேசியில் பதிவு செய்து அடிக்கடி கேட்டுக் கொண்டிருப்பார். அவருக்கு அந்தப் பாடல்கள்தான் அன்றைய தேவாரமாகவும் இருந்தது. "கள்ளிக் காட்டில் பிறந்த தாயே" என்ற வைரமுத்து எழுதிய பாடல்தான் அவரது மந்திரமாக காணப் பட்டது. அதனையே அடிக்கடி கேட்டுக்கொண்டிருப்பார். அம்மா மீண்டும் பிளைத்துவிட்டதால் வைரமுத்துவின் வரிகளுக்கும் அவர் நன்றி சொன்னார். அம்மா என் தெய்வம் - எனது உயிர் என்னிடமிருந்து அந்த உயிரை பிரிக்க விடுவேனா? இரு தடவைகள் அம்மா எங்களை விட்டு பிரிந்ததற்கான ஒத்திகை நடந்தது. அம்மா இறந்துவிட்டால் தாங்கக் கூடிய நிலையை இந்த இரு தடவைகளும் உருவாக்கிவிட்டதுபோல தம்பித்துரையர் உணர்ந்தார்.

அன்று ஷெல் பட்டு உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த வேளை - இன்று கடும் நோயினால் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த தருணம் இரண்டு சம்பவங்களுமே பெரும் அனுபவத்தைத் தந்திருந்தது. அம்மாவிற்கு மரணமில்லை; தெய்வத்திற்கு மரணமில்லை என நினைத்துக்கொண்டு தொலைபேசி எண்களை அம்மாவினை நோக்கி சுழற்றினார் தம்பித்துரை. *(2006)*

■

# ஒன்றுகூடல்

சின்னையா அண்ணர் அன்று என்றுமில்லாத மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். வழமையாக இரவு பத்து மணிக்கே நித்தரைக்கு செல்பவர் அன்று நடு இரவாகியும் தூக்க மின்றி நண்பர்கள், உறவுகள் என அனைவரிடமும் தொலை பேசி யில் பேசிக்கொண்டிருந்தார். சின்னையா அண்ணரை உறங்க விடா மல் உலகம் முழுவதும் உள்ள நண்பர்கள் தொலைபேசி மூலம் அவரை வாழ்த்திக்கொண்டேயிருந்தார்கள். வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் அவரை தேடி வந்துகொண்டிருந்தன. சின் னையா அண்ணைக்கு பிறந்தநாளோ, திருமண நாளோ என்று எந்த சிறப்பு நாளும் இல்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை தான் வாழுகின்ற சுவிஸ் நாட்டிலுள்ள தமது உறவுகளையும் நண்பர் களையும் ஒன்றுபடுத்தி தங்களுடைய கிராமத்திற்கான உதவி-களை வழங்குவதற்கான சமூக சேவை நிறுவனம் ஒன்றை அவர் உரு வாக்கினார். அதற்கான ஒன்றுகூடலில் புலம்பெயர்ந்த உறவுகள் அனைவரும் கலந்துகொண்டதுடன் ஊருக்காக பல உதவி களையும் செய்வதற்கு தங்கள் விருப்பங்களை வெளியிட்டிருந்தனர்.

சின்னையா அண்ணரின் வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டு ஊருக்கு உதவுவதெற்கென நிர்வாக கட்டமைப்பு ஒன்றும் அன்றைய தினம் அமைக்கப்பட்டது. சின்னையா அண்ணர் எந்தப் பதவியிலும் தான் அமர்ந்து கொள்ளாமல் ஏனையவர்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் என பலரையும் தெரிவு செய்து ஒரு நிர்வாக கட்ட மைப்பை ஏற்படுத்தினார். அன்றைய தினமே ஊருக்காக பெரும ளவு நிதி திரட்டப்பட்டது. கல்வி மேம்பாடு சமூக பொருளாதார மேம்பாடு என பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. சின்னையா அண் ணரின் சிந்தனைக்கு அன்று முழு வடிவம் கொடுக்கப்பட்டது.

தமது பாடசாலை நாட்களிலிருந்தே சமூகப்பணிகள் மற்றும் கல்வி, கலாசாரம், விளையாட்டு போன்றவற்றிற்கு தலைமை தாங்கி வழிநடத்தும் பண்புகளை கொண்ட சின்னையா அண்ணர் நாடு விட்டு நாடு வந்ததும் அந்தப் பணிகளிலே தம்மை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டிருந்தார். தங்கள் குடும்பத்தைவிட ஊரையும் ஊர் மக்களையும் கூடுதலாக நேசிப்பார்.

கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், விளை யாட்டுக்கழகம், கலைக்கழகம் என பல்வேறு அமைப்புக்கள் ஊடாக கிராமத்தில் அரும்பணியாற்றியவர். சின்னையா அண்ணை எந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும் அதனை சிறப்பாக செய்துமுடிப்பார். அவரது இந்தப் பண்புகளினால் ஊரிலுள்ள உற வினர்கள் எல்லோருமே அவரிடம் அன்பு பாராட்டினார்கள். எந்த விடயமாக இருந்தாலும் சின்னையாவுடன் தான் கலந்து முடிவு எடுக் கின்ற அளவுக்கு அங்கு நிலைமை ஏற்பட்டிருந்தது. அவரது நடவ டிக்கைகள் சிலருக்கு கசப்பாகவும் இருந்தன. இதனால் அவருக்கு களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைளிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

மது அருந்தி விட்டு வீதிகளில் நின்று வேடிக்கைக் கதை கள் பேசுவது மற்றவர்களை சண்டைக்கிழுத்தல், பெண்களை கிண்டலடித்து தேவையற்ற விவாதங்களில் ஈடுபட்டு பொழுதை வீணாக்குதல் என எந்த தீய பழக்கமும் இல்லாதவர் சின்னையா

அண்ணர். இதனால் அவர் மீது பொறாமை கொண்ட சிலர் அவருக்கு எதிராக பல நடவடிக்கைகள் மேற்கொண்டபோதும் சின்னையா அண்ணர் சமூகத்திற்கான முழுமையான செயற்பாட் டாளராகவே தன்னை இனம்காட்டிக்கொண்டார். பல அரசியல் கட்சிகள் தமது கட்சியில் அவரை இணைத்துக்கொள்ள முயன்ற போதும் அவை எதனையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

சின்னையா அண்ணருக்கு பெரு விருப்பம் இருந்தது. எந்த ஒரு அரசியல் கட்சியிலும் இணைவதை விட எமது பின்தங்கிய அல்லது வாழ்வின் அடி நிலையிலிருக்கும் சாமானிய மக்களின் தலைமை யிலான அரசியல் கட்சி ஒன்று தொடங்கப்பட்டு அந்த மக்களே தங் களுடைய பிரச்சனைக்கு தீர்வு காணச் செய்கின்ற அரசியல் சூழலை உருவாக்க வேண்டும் என்று அடிக்கடி கதைப்பார்.

சின்னையா அண்ணரின் வீட்டுத் தொலைபேசி ஒலித்தது. அவர் மெதுவாக எழுந்து தொலைபேசியை தூக்கினார். மறு முனையிலிருந்து "வணக்கம் சின்னையா அண்ணா நாங்கள் ஊரி லிருந்து பேசுறம் உங்கள் பணிகளுக்கு வாழ்த்துக்கள்" என்றார்கள். 'நன்றி, நன்றி' என்று கூறிய சின்னையா அண்ணர் "நானென்ன பெரிசா செய்துபோட்டன் எங்கட உறவுகள் தான் இதில முக்கிய பங்கெடுத்தவை" என்று கூறினார். "இது உங்களின் தன்னடக்கத்தை காட்டுது. வெளிநாடுகளுக்கு சென்ற பலர் தாமும் தமது குடும்பமும் என்றிருக்க நீங்கள் அங்க போனதாலதான் இந்த வேலை நடக்குது" என்று பாராட்டினார்கள்.

இவ்வாறு பல முனைகளிலும் இருந்து அவருக்கு அழைப்பு வந்து கொண்டிருந்தது. "ஓ சமூக சேவையாளருக்கு இன்னும் நித்திரை வரவில்லையோ" பிள்ளைகளுக்கு விடிய பள்ளிக் கூடம் நீங்கள் விடிய விடிய கதைத்துக்கொண்டிருந்தால் அதுகளின்ர நித்திரை குழம்பிப்போகும். தயவு செய்து லைற்றை நிப்பாட்டிப் போட்டு போய் படுங்கோ. இந்தாங்கோ களைத்துப் போனியள் தேத்தண்ணியை குடியுங்கோ" என்றவாறு சின்னையா அண்ணரின்

மனைவி உள்ளே நுழைந்தார். மனைவியின் பேச்சைக் கேட்டு லைற்றை அணைத்து விட்டு படுக்கைக்குச் சென்றார்.

படுக்கைக்கு சென்று கண்ணை மூடினாலும் நித்திரை வருவதாக இல்லை பழைய நினைவுகளில் மூழ்கிப்போனார்.

சின்னையா அண்ணர் கரப்பந்தாட்ட துறையில் சகலகலா வல்லவனாக திகழ்ந்தார். கரப்பந்தாட்ட விளையாட்டுகளிலிருந்து மத்தியஸ்தம் வகிப்பது வரை அவரிடம் ஆற்றல் நிறைய இருந்தது. இதனால் சுவிஸிற்கு வந்தவுடன் சுவிஸில் இருக்கக்கூடிய கரப்பந்தாட்ட வீரர்களை ஒன்றுபடுத்தி கரப்பந்தாட்ட அணியை உருவாக்கி புலம்பெயர்ந்த தமிழர்களுக்கிடையில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தினார். நாட்டுக்கு வெளியே தனது செயற்பாட்டை செய்து காட்டிய சின்னையா அண்ணரை பலரும் பாராட்டினார்கள். அவரை ஒரு நட்சத்திர நாயகனாக உரு வாக்கி அவரிடமிருந்து பலர் ஆட்டோகிராப்பில் கையெழுத்து வாங்கினார்கள். சின்னையா அண்ணர் இத்தகைய பாராட்டுகளுக்கு மத்தியில் தமது கிராமத்து சனசமூக நிலையக் கிளை ஒன்றையும் உடனடியாக ஆரம்பித்து வைத்தார்.

சின்னையா அண்ணரின் சமுதாயப் பணிகள் ஊரிலும் புலம்பெயர் நாடுகளிலும் அவரது செல்வாக்கினை அதிகரிக்கச் செய்தது. யுத்தம் தணிந்து வெளிநாடுகளிலிருந்து ஊருக்கு புலம் பெயர்ந்தவர்கள் சென்று வரும் நிலை உருவானது. ஊருக்கு செல்பவர்கள் அனைவரிடமும் ஊரில் உள்ள உறவுகள் சின்னையா அண்ணரைப் பற்றியே விசாரிப்பார்கள். "சின்னையா அண்ணர் வெளிநாட்டுக்கு வந்த பின்னர் தான் எங்கட ஊரில மாற்றம் ஏற்பட்டது. மனிசன் தனிய நின்று எத்தனையை செய்திட்டுது". என்று ஊர் மக்கள் அவரை கொண்டாடினார்கள். 'நாங்களும் தான் ஊருக்கு உதவி செய்யுறம் எங்கட காசை அனுப்பிப்போட்டு சும்மா இருந்துகொண்டு சின்னையா அண்ணை பேர் வாங்கிறார்' என்று ஊருக்கு சென்று திரும்பிய சிலர் மனம் வெதும்பினார்கள்.

இந்த வருட ஒன்றுகூடலில் சின்னையா அண்ணருக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று சபதம் எடுத்துக்கொண்டார்கள். வழமைபோலவே சின்னையா அண்ணர் ஒன்றுகூடலுக்கான ஏற்பாட்டினை செய்தார். மண்டப ஒழுங்கு, பேச்சாளர் ஒழுங்கு, உணவு ஒழுங்கு என பல ஒழுங்குகள் செய்யப்பட்டன. கூட்டம் ஆரம்பமானது. தலைவர் தமது ஆரம்ப உரையை ஆரம்பித்தார். சின்னையா அண்ணர் கூட்டத்தின் முன் வரிசையிலிருந்து தலைமை உரையை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தார். தலைவர் உரையின் ஆரம்பத்தில் "சின்னையா அண்ணா அவர்களை மேடையில் வந்து அமருமாறு அழைக்கிறோம்" என்றார். சின்னையா அண்ணர் நிர்வாகம் எதிலும் இல்லை ஏன் அவர் மேடைக்கு வரவேண்டும் தேவையில்லை நீங்கள் கூட்டத்தை நடத்துங்கோ" கூட்ட வரிசையில் இருந்த சிலர் மேடைக்கு செல்லவிடாமல் சின்னையா அண்ணரை தடுத்து விட்டனர்.

சின்னையா அண்ணர் எந்த நிர்வாகத்திலும் பதவியிலிருக்காதவர் அவர் அதனை விரும்புவதில்லை. மற்றவர்களை பதவிகளில் அமர்த்தி அழகு பார்ப்பது அவரது பண்புகளில் ஒன்று பதவிகளில் இல்லாதுவிட்டாலும் செயற்பாடுகளுக்கு தேவையான ஒத்துழைப்புகளையும் வழிநடத்தல்களையும் அவர் செய்வார்.

கூட்டம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. தீர்மானங்கள், சபையோர் குறிப்புரைகள் என நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற்றது. கூட்டத்தில் பல இடங்களில் சின்னையா அண்ணர் தெரிவித்த கருத்துக்களிற்கு எதிராகவே சிலர் தமது கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

உணவு இடைவேளை முடிந்து புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்பமானது. 'சின்னையா அண்ணைக்கு இந்த நிர்வாகத்தில் பதவி ஒன்று கொடுக்க வேண்டும். அவர்தானே இதனை ஆரம்பித்து வைத் தார்." என்று சபையில் இருந்த ஒருவர் கூறியபொழுது இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சிலர் அவருக்குத்தான் எல்லாம் தெரியும் என்றும் ஊரில

எல்லோரும் கதைக்கிறார்கள். அதனால் அவருக்கு பதவி எதுவும் கொடுக்கவேண்டாம். எதிர்காலங்களில் எமது செயற்பாடுகள் தொடர்பாக அவர் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது. யாரோடும் இதுபற்றி பேசக்கூடாது. தலைவர், செயலாளர், நிர் வாகத்தில் இருக்கும்போது இன்னொருவர் எமது செயற்பாடு தொடர்பாக பேசுவது அல்லது உத்தியோக பூர்வ நடவடிக்கையில் ஈடுபடுவது சரியல்ல. தயவுசெய்து இதனை ஒரு தீர்மானமாக நிறை வேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சின்னையா அண் ணைக்கு இது புதிய விடயமல்ல. சமூகப்பணியில் எத்தனையோ துன்பங்களையும் துயரங்களையும் கடந்தவர். சபையிலிருந்து எழுந்த அவர் “நல்ல தீர்மனம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறீர்கள் இதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை எல்லோரும் சிறப்பாக செயற்படவேண்டும்” என்று கூறினார்.

அன்றய கூட்டம் அப்படியே முடிந்தது தான் அதற்குப் பின்னர் சில வருடங்களாக ஒன்றுகூடல் நடைபெறவில்லை. சின் னையா அண்ணரும் இதுபற்றி அலட்டிக்கொள்ளவில்லை. அவர் அமைதியாக இருந்தாலும் தனிப்பட்ட முறையிலும், ஏனைய நண் பர்கள் மூலமும் அவரது வேலைத்திட்டங்கள் தொடர்ந்தன.

புலம்பெயர்ந்திருந்த உறவுகளின் செயற்பாட்டில் மந்த நிலை காணப்பட்டதைத் தொடர்ந்து ஊரிலும் புலம்பெயர் மண்ணிலும் இருக்கிற உறவுகள் பலர் சின்னையா அண்ணருடன் தொடர்புகொண்டு இந்த செயற்பாடுகள் பற்றி விவாதிக்க தொடங் கினார்கள். சின்னையா அண்ணர் எவ்வளவு சிறப்பாக........ நடத்தி னார். இவர்கள் அதை கெடுத்துப்போட்டார்கள்.

சின்னையா அண்ணரை மீண்டும் அணுகி செயற்பட வைப் போம் என்று கூறிக்கொண்டே நல்லெண்ணம் கொண்ட பலர் சின் னையா அண்ணர் வீடுநோக்கி படையெடுத்தனர்.

(2005)

# கூவாதகுயில்

நாற்சார் வீட்டின் மத்தியில் மரகதம் அக்காவின் உடல் நீட்டி நிமிர்ந்தபடி கிடத்தப்பட்டிருந்தது. தலைமாட்டில் மூன்று குத்துவிளக்குகள் ஒளி பாய்ச்சிக்கொண்டிருந்தது. அக்காவின் உடலை சுற்றி நாலாபுறத்திலும் உறவினர்கள் குழுமியிருந்தனர். அக்காவின் அம்மா, அப்பா மற்றும் உடன்பிறப்புகள் அனைவரும் கதறி அழுவதும் நிலத்தில் விழுந்து புரண்டெழுந்து தலையிலும் நெஞ்சிலும் அடித்து அழுது கொண்டிருந்தனர். மரண வீட்டுச் சூழல் அந்த இடத்தினை ஆக்கிரமித்துக்கொண்டது. உறவினர்கள், மற்றும் அயலவர்கள் என பலர் அங்கே வந்து கொண்டிருந்தனர். ஒவ்வொருத்தரும் உள்ளே வருமபோது வீட்டு வாசலிலே பறை ஒலிச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது.

அக்காவின் உடலுக்கு சிவப்பு நிறத்திலான காஞ்சிபுரம் பட்டு சேலை கட்டப்பட்டு நெற்றியில் குங்கும பொட்டு வைத்தும் தலை நிறைய மல்லிகைப் பூவும் சூட்டப்பட்டு கழுத்தில் நெஞ்சுவரைக்கும் மலர் மாலைகள் சாத்தப்பட்டிருந்தன. அக்காவின் சடலத்துக்கு அஞ்சலி செய்ய வருபவர்கள் அஞ்சலியின் பின் அங்குள்ள கதி

ரைகளில் அமர்ந்திருந்து அக்காவின் வாழ்க்கையைப் பற்றி வியந்து பாராட்டிக்கொண்டிருந்தார்கள்.

'நல்ல ஜீவன் இப்படியாய் போயிட்டாளே' என்று ஒருவரும் நல்ல கெட்டிக்காரி படிக்கிற காலத்தில் கல்வி, விளையாட்டு, கலை என எல்லாத்திலயும் முதலிடம் இவருக்குத்தான். படிச்சிருந்தால் இவருக்கு அவரும் நிகரில்லை. அக்காவிற்கு படிப்பிச்ச ஆசிரியர் ஒருவர் இவ்வாறு புகழ்ந்து கொண்டிருந்தார். எங்கட ஊருக்கு பெருமை சேர்ப்பாள் என்று நினைத்தோம் பாதியிலே எல்லாம் போச்சு என்று பெண்கள் கூட்டத்திலிருந்து ஒரு பெண்மணி அங்கலாய்த்தார்.

அக்காவின் வரலாற்றை ஆதியோடு அந்தமாக புகழ்ந்து கொண்டிருந்தவர்களின் வாய்களுக்கு பூட்டுப்போடும் வகையில் எழுந்து நின்ற சுந்தர பாண்டியன் “அக்கா வாழ வேண்டியவர் வாழ்ந்து பார்க்க அவரை நீங்கள் யாரும் விடவில்லை.” அவரை கொச்சைப்படுத்தியும் கேவலப்படுத்தியும் அவரது வாழ்க்கையை அழித்த நீங்கள் இறந்த பின் புகழாரம் சூட்டுவது வேடிக்கையானது. வினோதமானது. நாடகம் ஆடாதீர்கள். தயவு செய்து அவரைப் பற்றி பேசாதீர்கள். எங்களில் எவருக்கும் அவரைப்பற்றி பேசுவதற்கு அருகதையும் இல்லை உரிமையும் இல்லை. அக்கா அப்படி என்ன தவறு செய்துவிட்டார். ஒருவரை காதலித்தார், குழந்தைக்கு தாயானார், காதலித்தவன் ஏமாற்றினான் ஏமாந்து போய்விட்டார். சிறு பிரசங்கமே நிகழ்த்திவிட்டான் சுந்தர பாண்டியன்.

மரகதம் அக்காவிற்கு தற்பொழுது 50 வயது மூன்று ஆண் சகோதரங்களிற்கு ஒரே ஒரு சகோதரியாக பிறந்தார். அக்காவிற்கு மூத்தவர்களாக மூவரும் இருந்தமையால் வீட்டில் எல்லோருமே அக்கா மீது அளவற்ற பாசம் வைத்திருந்தனர். தீபாவளி மற்றும் விசேட தினங்கள் என்றால் போதும் மூவரும் போட்டிக்கு போட்டியாக அக்காவிற்கு ஆடை அணிகலன்கள் வேண்டிக்கொடுத்து அழகுபார்ப்பார்கள். ஆலய திருவிழாக்கள், சினிமா மற்றும் வெளி

யிடங்களுக்கு செல்வது என்றாலே அக்காவிற்கு மூவரும் பணம் கொடுப்பார்கள். இதனால் அக்காவிடம் தினமும் நிறைய பணப் புளக்கம் இருக்கும். வீட்டிற்கு செல்லப்பிள்ளையாக வளர்ந்த அக்கா உற்றார் மற்றும் உறவினர்களிடமும் பிரியமாகவே இருந்தார். அக்கா அளவான உயரம் பொது நிறம் தலைமுடி கால்வரையும் நீண்டு இருக்கும். பார்ப்பவர் அனைவரையும் வசீகரிக்கும் கண்கள், நீண்ட மூக்கு, அளவான செவிகள் எப்பொழுதும் புன்னகை தவழும் உதடும் பாடசாலையில் மட்டுமல்ல அக்கா எல்லாவிடயங்களிலும் முதன்மையானவர். எந்த உடையை அணிந்தாலும் அக்காவிற்கு எடுப்பாத்தான் இருக்கும். அங்கங்கள் தெரிய அரைகுறை ஆடை அணிவதே அக்காவிற்கு பிடிக்காது. குழந்தைகள் மீதும் பெரியோர்கள் மீதும் பிரியமுடையவர். மாற்றுத் திறனாளிகள் மற்றும் நோயாளிகள் இயலாதவர்களைக் கண்டால் போதும் அவர் களுக்கு உதவிகள் செய்வதற்கு ஒருபோதும் பின்நிற்பதில்லை. அக்காவின் காதலை வேண்டி கடிதம் எழுதியவர்களும் அக்காவின் கடைக்கண் பார்வை கிடையாதா என்று ஏங்கியவர்களும் பலர் உண்டு. அவரிடம் பல திறமைகள் இருந்தாலும் மேடையேறிப் பாடுவதில் அலாதிப் பிரியம் உடையவர். தென்னிந்திய சினிமாப் பாடகிகளை விஞ்சும் அளவிற்கு அக்கா குரல் வளம் உடையவர். “உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்” என்ற ஜானகி அம்மாவின் பாடலை அக்கா வின் குரலில் கேட்கும்போது இன்பத் தேன் வந்து பாயும் காதி-னிலே அவ்வளவு சிறப்பாக பாடுவார். அக்காவுக்கு கண்ணூறு பட்டதுபோல அவரது வாழ்க்கையில் குறுக்கிட்டான் சாரங்கன். சாரங்கன் அக்காவின் தாய் மாமனது மகன் என்பதால் அக்காவினை தனது காதல் வலையில் இலகுவாக சிக்கவைத்துவிட்டான். இரு வரின் காதலும் கொடிகட்டிப் பறந்தது. நெருங்கிய உறவுகள் என்பதி னால் இரு வீட்டிலும் எதிர்ப்பு இல்லாமல் காதல் வளர்ந்தது. அரு-கருகே இருவரது வீடுகளும் அமைந்திருந்தமையால் தியேட்டர்,

பூங்கா, மற்றும் வெளியிடங்களிற்கு செல்லாமலே அவர்களின் காதல் வளர்ந்தது. அக்கா மேடைகளில் பாடக்கூடாது. பிற ஆட வர்களுடன் பேசக்கூடாது என்று பல தடைகளை சாரங்கன் போட்டான். அக்காவின் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டபோதும் சாரங்கனிற்காக அக்கா எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டார். ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக வந்துகொண்டிருந்த மாதாந்த சுகயீ-னம் வரப்பிந்திவிட்டது. அக்கா இதனை சாரங்கனிடம் கூறியபோது 'அதைவிடு எல்லாம் சரிவரும் ஒரு 'பனடோல்' போட்டுப்பார் என் றும் சில ஆலோசனையும் கூறினான். அக்காவிற்கு இது புது அனுப வம் ஒருபோதும் இப்படி நடப்பதில்லை மிகவும் பீதியடைந்தார். 'பனடோல்' போட்டும் கை மருத்துவம் செய்தும் பிரயோ-சனம் இல்லை. நாளுக்கு நாள் வேதனைத் தீயில் வெந்தாலும் சொந்த அத்தான்தானே என்னை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் காலம் கடத்தினார். நாள் செல்ல செல்ல சாரங்கனின் நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அக்காவுடன் பேசுவதையோ, சந்திப்பதையோ அவன் தவிர்த்துக் கொண்டிருந்தான். வேலை மற்றும் வேறு விடயங்கள் என்று தனது வீட்டிற்கே சாரங்கன் செல்வதை நிறுத்திக்கொண்டான். அக்கா வாந்தியெடுத்தல் மற்றும் மசக்கை சோர்வாக இருத்தல் போன்றவற்றை அவதானித்த அக்காவின் அம்மா சந்தேகத்துடன் அக்காவை அணுகினார்.

"என்ர குடி முழுகிப்போச்சு ஊர்ச்சனங்கள் மத்தியில என்னை தலைகுனிய வைச்சிட்டியடி" அம்மா குமுறி குமுறி அழு-தார். அம்மாவுடன் சேர்ந்து தானும் அழுத அக்கா துணிவை வரவழைத்துக்கொண்டு அம்மா அத்தானுடன் கதைத்து ஒரு முடிவுக்கு வருவம் என்று ஆறுதல்படுத்தினாள். அப்பா, அண் ணன்மார் எல்லோர் காதுகளுக்கும் இந்த விடயம் பறந்துபோனது.

தாலியில்லாமல் கணவனாம் கலியாணம் ஆக முன்னே பிள் ளையாம்' என்று ஊராரும் உறவுகளும் எள்ளி நகையாடினார்கள்.

மூன்று அண்ணன்மார்களும் சேர்ந்து சாரங்கனின் வீட்டிற்கு சென்று நியாயம் கேட்டனர். சாரங்கன் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாக அவனது தாயும் தந்தையும் சொன்னார்கள். நிலைமையை விளக்கிக் கூறியபோதும் தங்களிற்கு எதுவும் தெரியாது என்றும் இதற்கும் எங்களிற்கும் தொடர்பில்லை என்றும் கையை விரித்துவிட்டார்கள். மரகதம் வீட்டில் பூகம்பமே வெடித்தது. தான் ஏமாந்து போய்விட்டதை உணர்ந்து சில நிமிடங்களில் மரகதம் தனது அண்ணன்களில் கால்களில் கீழ் விழுந்தாள். விழுந்தவள் விழுந்ததுதான் எழவேயில்லை. ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது கோமா நிலைக்கு சென்றுவிட்டதாக கூறி மரகதத்தை விடுதியில் மறித்துவிட்டனர் வைத்தியர்கள். நீண்ட நாள்களாகியும் அவர் எழுந்திருக்கவே இல்லை. அவளது வயிற்றிலே கருவாகிய குழந்தையும் குறைப்பிரவசமாகி இறந்துவிட்டது. அந்த வைத்தியசாலையிலேயே இருந்து மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வீடு திரும்பிய மரகதம் முப்பது வருடங்களுக்கு பூட்டிய அறைக்குள் வைக்கப்பட்டு இடையே சிகிச்சையும் வழங்கப்பட்டது. பல வேளைகளில் கால் மற்றும் கைகள் கட்டப்பட்டும் அந்த வீட்டிலே நடைப்பிணமாகக் கிடந்தாள்.

தங்கள் தங்கையின் வாழ்க்கையை எண்ணி எண்ணி சகோதரர்கள் கண்ணீர் விடாத நள்களேயில்லை. மரகதத்தின் வயதினை ஒத்தவர்கள் திருமணம் முடித்து கணவர் பிள்ளைகளுடன் வாழ்வதைப் பார்க்கும் போதெல்லாம் தங்கள் தங்கையின் எண்ணமே வாட்டி வதைக்கும் என்று... அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

சகோதர பாசத்தினால் அவர்கள் தவித்த தவிப்பும் வேதனையும் அவர்களுக்குத்தான் தெரியும். *(2008)*

■

# நம்பிக்கைக் கரங்கள்

பாரிஸ் நகரின் புறநகர் பகுதி நான்கு அடுக்கு மாடிகளைக் கொண்ட அழகான வீடு பூக்கள், மரக்கறிகள் மற்றும் பயன்தரு மரங்கள் கொண்ட காணியுடன் அந்த வீடு அமைந்திருந்தமையினால் ரம்மியமாக அந்த சுற்றாடல் காட்சி. அதுபோல அந்த வீட்டில் வாழும் மனிதர்களும் அன்பானவர்கள், அழகானவர்கள் அண்ணன் தம்பி, அக்கா, தங்கை, அம்மா, அப்பா என்று அந்தக் குடும்பம் மனித வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு எப்பொழுதும் விருந்தினர்களுக்காக வீட்டுக்கதவுகள் மட்டுமல்ல அங்குள்ளவர்களின் இதய வாசலும் திறந்திருக்கும் சினிமாவில் தான் இந்தக் காட்சியைப் பார்க்கமுடியும். அவர்களோடு பழகுவதென்றால்... எனக்கும் அலாதிப்பிரியம் தான். இதற்கெல்லாம் காரணம் அந்த வீட்டின் மூத்த பிள்ளை சரவணன் என்பதை அறியும்போது புல்லரித்து இப்படியும் மனிதனா... புலம்பெயர்ந்த அந்நிய நாட்டிலும் இப்படியும் ஒரு வாழ்க்கையா? அவரின் வழிகாட்டலில்தான் இந்தக் குடும்பத்தினர் இப்படியிருக்கிறார்கள்.

சிறிய வயதில் என்னோட ஒன்றாக படித்தவன் என் பள்ளித் தோழன் பின்னர் தந்தையின் தொழில் காரணமாக வவுனியா சென்று அங்கிருந்து மன்னார் சென்று இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்க்கை நடத்திவிட்டு மீண்டும் ஊருக்குத் திரும்பினார்கள். வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை வறுமையும் விரக்தியும் கலந்த வாழ்க்கைதான் அவர்களுடையது. ஒரு நேர சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்ட குடும்பம். "ஒரு சாரத்தை வைத்து ஓட்டைகள் விழும் போது உருட்டி, புரட்டி, கையால் தைத்து அதனை மறைத்து உடுத் தவன் நான்" என்று சரவணன் சொல்வான். சரவணன் பிரான்ஸிற்கு வந்து பல வருடங்களாகவிட்ட. பிரெஞ்சு மொழி நல்ல சரளமாகப் பேசுவான். நான் இப்பொழுதுதான் பிரான்ஸிற்கு வந்து சேர்ந்தேன். என்ன செய்வது ஏது செய்வது என்று அறியாமல் தவித்தேன். கடவுள் சிலவேளைகளில் மனித வடிவில் காட்சி தருவார் என்று சொல்வார்கள். சரவணனை எதிர்பாராமல் லாசப்பலில் நகர வீதி யில் ஓர் நாள் சந்தித்தேன். பள்ளி நினைவுகளை, ஊர் உறவுகளைப் பற்றி விசாரிப்புகள் தொடர்ந்தன. "பழைய சரவணனாய் இப்பவும் இருக்கிறாய். ஒன்றையும் மறக்கவில்லை" என்றேன். என்னைப் பற்றி முழு விவரங்களையும் அறிந்துகொண்ட அவன் "உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால் எனது வீட்டுப் பிள்ளைகளுக்கு தமிழ் கொஞ்சம் பிரச்சனையாக இருக்கிறது. நீ வீட்டுக்கு வந்து பாடம் சொல்லிக்கொடுக்க முடியுமா? என்று கேட்டாள் - மறு பேச்சின்றி சம்மதத்தைத் தெரிவித்தேன். அவனது முகத்தில் ஆனந் தம் தாண்டவமாடியது. என்னை தனது கார் உள்ளே அழைத்துச் சென்று முன் இருக்கையில் அமர்த்தி குறிப்பு புத்தகம் ஒன்றை எடுத்து தனது வீடு இருக்கும் இடத்தை வரைபடம் மூலம் விளங்கப்படுத்தி எந்த பாதையில் எப்படி வரவேண்டும் என்று ஆசிரி யர் மாணவனுக்கு புரியவைப்பதுபோல அழகாய் புரியவைத்தான். அடுத்தநாளே சரவணன் வீட்டில் ஆஜரானேன். "உங்களுக்கு தமிழ் படிப்பிக்கப்போகும் மாஸ்டர் இவர்தான்" என்று பிள்ளைகளுக்கு

அறிமுகப்படுத்தினான் சரவணன். அன்று தொடக்கம் மாஸ்டர் பட்டமும் என்னோடு ஒட்டிக்கொண்டது அந்தப் பிள்ளைகள் மட்டுமல்ல அங்குள்ள எல்லோருமே "மாஸ்டர் மாஸ்டர்" என்று அன்புடன் அழைத்தார்கள். பிள்ளைகள் எல்லோருமே படிப்பில் நல்ல சுட்டிகளாக இருந்தார்கள். பிள்ளைகளின் சிநேகிதர்களும் வரு வார்கள். எல்லோரும் பிரான்ஸ் மொழியை சரளமாக பேசினார்கள்.

வகுப்பு முடிந்ததும் நாளைக்கு எத்தனைக்கு வகுப்பு என்று கேட்பார்கள். இப்படி அவர் களோடு பழகி பிரெஞ்சு சூழலையும் கற்றுக்கொண்டேன்.

இந்த வீட்டின் குடும்பத்தின் ஆணிவேராக இருந்தவன்தான் சரவணன். அவனுடன் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதரர்கள் அனைவரையும் பிரான்ஸிற்கு அழைத்து நல்ல நிலைக்கு கொண்டுவந்தவன் சரவணன். "அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகளுக்கு செய்யும் செலவுகளுக்கு கணக்கு பார்க்கக்கூடாது இது எமது கடமை" என்று சரவணன் சொன்னான் மூத்தவருக்கு உரிய கடமையை அவன் செய்தான் அவன்தான் மனி தன்.

ஊரில இருக்கும்போது வீட்டுக் கஸ்டத்தை போக்குவதற்கு ஓடி, ஓடி உழைத்தபோதும் கஸ்டம் தீரவில்லை. தனது இளமைக் கனவுகளை எங்கோ ஒரு மூலையில் புதைத்து விட்டு தனது குடும்பத்திற்கு உழைத்துக்கொண்டிருந்தபோதுதான் சிறீலங்கா ராணுவத்தால் கைத்து செய்யப்பட்டான். சரவணன் நீண்டநாள் தடுத்து வைக்கப்பட்டு பெரும் சித்திரவதைகள் கொடுமைகளை அனுபவித்தான். அவனது வருமானமின்றி வீட்டிலே வறுமை தாண்டவமாடியது. சிறைக்கம்பிகளுக்குள் இருந்துகொண்டும் தமது குடும்பத்தை பற்றியே சிந்தித்து சிந்தித்து அழுதுகொண்டிருந் தான். தானும் தன்னைப் போன்ற பல அப்பாவி தமிழ் இளைஞர் களும் சிறையில் படும் கொடுமைகள் கண்டு கொதித்தான், கொந் தளித்தான் எங்கள் விடுதலைக்கு நாமே போராடவேண்டும் என்ற

எண்ணம் அவன் மனதில் துளிர் விடத்தொடங்கியது. ஆனால் வீட்டு நிலைமை தடுப்புச்சுவர் போட்டது. வீடா, நாடா, என்று குழப்பமடைந்தான். சில மாதங்களின்பின் விடுதலை கிடைத்தது. வீட்டுக்கு வந்தான் மீண்டும் மீண்டும் கைது, இராணுவ சுற்றி வளைப்புகள் என்று வாழ்க்கை தொடர்ந்தது.

வாழ்வதற்கான சூழலே அற்றுப்போய்விட்டது. உறவினரின் ஆலோசனை மற்றும் அவர்களின் உதவியுடன் நாட்டைவிட்டு வெளியேறினான். பிரான்ஸிற்கு வந்து அடைக்கலம் கோரி-னான். பிரான்ஸ் அவனை வாரி அணைத்து வரவேற்று வாழ்வு கொடுத்தது. அன்று வழமைபோலவே அவனது வீட்டின் அழைப்பு மணியை அழுத்துகிறேன் கதவு திறக்கப்பட்டது. வீடு அழ காக அலங்கரிக்கப்பட்டு சாம்பிராணி வாசனை கமகம என மணம் வீசியது. சரவணன் குடும்பத்தினர் அனைவருமே புத்தாடைகள் அணிந்து குதூகலத்துடன் காணப்பட்டனர். எனக்கும் போத் தீஸ் புடவை, கடை பெயர் பொறிக்கப்பட்டிருந்த பாக்கில வைக்கப்பட்டிருந்த புதிய ஆடைகள் வழங்கப்பட்டன. சாமி அறையிலிருந்து சூலமங்கலம் சகோதரிகளின் கந்தசஷ்டிகவசம் ஒலித்துக்கொண்டிருந்தன. வீடே பக்தி மயமாய் காட்சியளித்தது. அந்தச் சூழல் மனதுக்கு சுகமாக இருந்தது.

"மாஸ்டர் இன்றைக்கு தீபாவளி பண்டிகை உங்களுக்கும் எங் களுக்கும் எல்லோருக்கும் லீவு கொண்டாட்டம்" என்று ஏகோபித்த குரலில் என்னிடம் பயிலும் பிள்ளைகள் கூறினார்கள்.

பண்டிகை நாள்கள் ஒவ்வொன்றுமே அவர்கள் இப்படித்தான் கொண்டாடுவார்கள். அன்று அவர்கள் எல்லோருக்கும் புத்தாடை கள் வழங்குறது சரவணின் கடமை. அத்துடன் தனது கையாலே சமைத்து எல்லோருக்கும் உணவு பரிமாறுவதும் சரவணன்தான். "ஓடருக்கு சாப்பாடு எடுக்கலாம். ஆனால் மூத்தவன் கையாலே சமைத்து எல்லோருக்கும் பரிமாறுவான். சாப்பாட்டுடன் அன்பையும் ஊட்டுவான்" என்று சரவணன் அம்மா கூறினார். 'தம்பி

எங்களுக்கு பிள்ளை மட்டுமல்ல எல்லாமும் அவர்தான் - எல்லோரையும் அவர்தான் கவனித்து வருகிறார். எங்கட கடவுளும் அவர் தான்" என தந்தையார் தன்பாட்டிற்கு கூறினார்.

சரவணன் வீட்டில் நடைபெறும் பல கொண்டாட்டங்களில் நானும் ஒரு விருந்தாளியானேன். சகல நிகழ்வுகளிலும் அவனது வழிப்படுத்தல், நெறிப்படுத்தல் இருக்கும் எந்தக் குறையும் இருக்காது. சரவணனை பாராட்டாதவர்களும் போற்றாதவர்களும் இல்லை. குடும்பத்தை வழிநடத்துவதில் சரவணன் வல்லவன்தான்.

அவரது வீட்டிலிருந்து காரில் பாரிஸ் நோக்கி பயணித்த போது அவரிடம் "இந்த பிரான்ஸ் நாடு என்னை ஊக்குவித்தது, வளர்த்துவிட்டிருக்கிறது - ஆரம்பத்தில் புரியாத, புதுப்புது அனுபவங்கள் என பலவற்றை சந்தித்து சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்தேன். பிரச்சனைகள், சோதனைகள், வந்த போதெல்லாம் அதனை எதிர்கொள்ளும் தைரியம் எப்படியோ வந்துவிட்டது. மனக்கஸ்டம், பணக்கஸ்டம் இயல்பானது என் பது இங்க வாழ்கை எனக்கு கற்றுத்தந்த பாடம் பனி என்றும் குளிரென்றும் பாராது கஸ்ரப்பட்டு வேலைகளைச் செய்து குடும்பத்தவர்கள் அனை-வரையுமே பிரான்ஸிற்கு எடுத்துவிட்டன். சகோதர, சகோதரிகள் நிறைவாக வாழ்த்தினார்கள். மக்கள் மருமக்கள் அனைவருமே நல்ல கல்வியைப் பெறுகிறார்கள். அவர்கள் சுபிட்சமாக வாழ்வார்கள். இதைவிட ஊரிலுள்ள உறவுகளுக்கும் உதவிவருகின்றோம். எல்லோரும் நல்லாயிருப்பது எனக்கு நிம்மதியளிக்கிறது.

அம்மா, அப்பா, சகோதரர்கள் உடன் இருப்பது எனக்கு பெரிய பலம். மனைவி, பிள்ளைகள், அனைவருமே மகிழ்ச்சியை தருகிறார்கள் இதை விட வேறென்ன வேணும்" ஒரு பிரசங்கமே நடத்திவிட்டான். வாகனத்தைச் செலுத்திக்கொண்டே தனது காற் சட்டைப் பைக்கற்றில் கையை விட்டு தொலைபேசி அட்டை ஒன்றை வெளியே எடுத்து அந்த அட்டையிலுள்ள எண்களை ஒரு தடவை பார்த்தான். கைத்தொலைபேசி எடுத்து டயல் பண்ணினான்

- இது சிறீலங்காவிற்கான அழைப்பு காரைச் செலுத்திக்கொண்டே தொலைபேசியை காதுக்குள் வைத்துக்கொண்டு உரையாடினான் - கதைத்து முடிந்தபின் காருக்குள் வைத்திருந்த காசோலைப்புத்தகம் ஒன்றை எடுத்து அதனை விரித்து நிரப்பிவிட்டு அதிலிருந்த காசோ லையை பிரித்து எடுத்து காகித உறைக்குள் போட்டு பத்திரமாக சேட் பைக்கட்டில் வைத்தான். இத்தனையும் காரைச் செலுத்திக் கொண்டிருக்கும்போதே செய்தான் - அட்டவதானிதான்.

தொலைபேசி இலக்கத்தை ஒவ்வொன்றாக வாசித்துத்தான் தொலைபேசி எண்களை அழுத்துவார்கள். ஆனால் சரவணன் கார்ட்டை ஒருமுறை பார்த்து விட்டே அழைப்பு எடுக்கிறான். காசோலை கூட தமிழில் நிரப்பினால் ஆயிரம் தடவை பார்த்துத் தான் எழுதுவார்கள். சரவணன் சில நிமிடங்களில் நிரப்பினான். அவ னது நண்பர்கள் இவை பற்றி என்னிடம் கூறியிருந்தாலும் நேரிலே பார்த்தபோது வியந்துபோனேன். நான் இறங்கவேண்டிய இடம் வந்தது. பிரான்ஸ் நாட்டு பணிமனை ஒன்றில் எனக்கு சந்திப்பு ஒன்றி ருந்தது - எனது மொழிபெயர்ப்பாளர் சரவணன்தான் - உள்ளே சென்றோம். குறிப்பிட்ட அதிகாரியை சந்தித்து உரையாடினோம். அந்த அதிகாரி சரவணனின் பிரெஞ்சு மொழி ஆற்றலைக்கண்டு 'நீங்கள் பிரெஞ்சுக் காரணா?' என்று கேட்டார்.

நான் சிறீலங்கா தமிழன் என்று கூறினான்.

"உங்களுடைய உடல்மொழி, தோற்றம், பிரெஞ்சு மொழி உச்சரிப்பையும் வைத்துத்தான்" அப்படிக் கேட்டேன் என்று அந்த அதிகாரி கூறினார். - சரவணன் எடுப்பான தோற்றம் உடையவன் கோர்ட், சூட், அணிந்திருந்ததால் அவனுக்கு அழகை ஏற்படுத்தியது. அதனால்தான் அவர் இவ்வாறு கேட்டார். மீண்டும் அடுத்தநாள் பிரான்சில் நான் வதிவதற்கு அனுமதி வழங்கும் விசாரணை ஒன்று இருந்தது. "OFFRA" என்ற அலுவலகத்தில் இருந்தது. எனக்கு பய மாகவும் பதற்றமாகவும் இருந்தது. பரீட்சைக்கு தோற்றும் மாணவ-னாக நானிருந்தேன்.

"ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் பதற்றமில்லாமல் அவங்க கேட்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கோ கட்டாயம் உங் களுக்கு விசா கிடைக்கும். நீங்கள் படிச்சவர், நாலும் தெரிஞ்சவர் நல்லதே நடக்கும் என்று நினையுங்கோ. என்ரை மனசு சொல்லுது உங்களை 'அக்செப்' பண்ணுவாங்கள்" எனது கையை குலுக்கி தோளில் தட்டினான்.

மனதை திடப்படுத்திக்கொண்டு விசாரணை அறையில் நுழைந்தேன். மூன்று மணித்தியாலங்கள் விசாரணை நடைபெற்று வெளியே வந்தபோது அங்கே நின்ற சரவணன் ஓடோடி வந்து எனது கையிலிருந்த பைலை வாங்கினான். அதற்குள் இருந்த ஆவணங்கள் அனைத்தையும் வாசித்தான். "உங்களுக்கு மூன்று மாதத்துக்குள் விசா கிடைக்கும்" என்றான் "எப்படி" என்று வியப் புடன் கேட்டேன். "உங்கள் துறை சார்ந்த நிறுவனம் ஒன்று பிரான் ஸில் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் பிரெஞ்சு மொழியிலான கடித மும் உடனிருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ளுவார்கள். அத னால் நம்புங்கோ" என்று நம்பிக்கை ஊட்டினான். அந்த நம்பிக்கை கரங்களை பற்றிக்கொண்டு அவனுடனே பயணித்தேன்.

காரில் பயணித்த அந்த சிலமணிப் பொழுதுகளில் அவன் கூறிய வார்த்தைகள், ஊட்டிய நம்பிக்கைகள் உளவியல் ரீதியாக என்னை உற்சாகப்படுத்தின. சரவணன் எந்த பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றான் என்று என்னை வியப்பில் ஆழ்த்தினான் - அனுபவம், மகிழ்ச்சி, பட்டறிவும்தான் காரணம்.

நான் பிரான்ஸிற்கு வந்தபோது 2002இல் அரசு - புலிகள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிட்டது. "இனிமேல் நாட்டில பிரச்சினையில்லை. பிரான்ஸில இருக்கிற ஒப்றாவில சிறிலங்கா ஆட்களை எடுக்கிறேல்லை என்று எழுதிப்போட்டிருக்கு துரை- யர் நாட்டுக்கு போகவேண்டியவர்தான்" என்று எள்ளிநகையாடி னார்கள் எம்மவர்கள்.

மூன்றுமாதங்கள்கடந்தன. சரவணனின்கைத்தொலைபேசிக்கு எண்களை அழுத்தினேன். "எனக்கு விசா கிடைத்துவிட்டது" சந்தோச மழையில் நனைந்தவாறு கூறினேன். சரவணன் அதைவிட மகிழ்ந்தான்.

"நம்பிக்கை தான் வாழ்க்கை
நம்பினால் எதுவும் நடக்கும்" என்றான்.

"நம்பிக்கை கரங்களை
நன்கொடையாய் ஈய்ந்த
நாயகன் நீதானே" என்று கூறி அடுத்த கட்ட நகர்வுக்கு நகர்ந்தேன்.

*2002*

# மணம் மாறாத பூக்கள்

அதிகாலை நேரத்தில் நித்திரையிலிருந்து கண்விழித்துக் கொண்ட வாகீசன் தனது அருகாமையில் உறக்கத்திலிருந்த சகிலாவை அவதானித்தான். கண்கள் மூடியபடியே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளை குழப்ப விரும்பாத அவன் அவள் அழகையே உற்று, உற்று பார்த்துக்கொண்டிருந்தான். வாழ்நாள் முழுக்க அப்படியே அவளை பார்த்துக்கொண்டிருக்கலாம் போல இருந்தது. அவ்வளவு கொள்ளை அழகு. இளம் பச்சை நிறத்திலான இரவு உடை அவளுக்கு மேலும் எடுப்பாக இருந்தது. இவளை தேவதை என்று சொல்வதா? உலக அழகி என்று புகழ்வதா? தனக்கு அவள் மனைவியாக கிடைத்ததற்கு கொடுப்பனவு வேணும். இந்த பரந்த உலகத்திலே நல்லவள், வல்லவள், அழகி, சர்வ வல்லமையும் கொண்டவள் சகிலாதான் என தன்னையும் மறந்து புலம்பினான். எனக்கு கிடைத்த மனைவி மாதிரி யாருக்கும் அமையாது என அளவுக்கு அதிகமாக பெண்டாட்டி புராணம் பாடினான். 'ஏய்! என்ன காணும் புலம்புறீர். எல்லாருக்கும் அவங்க அவங்க பொண்டாட்டி தேவதைதான் என்பதை புரிந்துகொள்ளும் என்று

யாரோ ஒருவர் வெளியில இருந்து அவனுக்கு உறைக்குமாப் போல கூறுவது போன்ற பிரமை ஏற்பட்டது. அதனால அவளைப் புகழ்வதை நிறுத்திக்கொண்டு அவள் அழகை ரசிப்பதிலேயே லயித் துப்போனான். பச்சை நிறமென்றால் சகிலாவிற்கு விருப்பம். அத னால அவளது படுக்கையறையை பச்சை நிற பெயின்ரினால் அசத்தி விட்டான். மெல்லிய மின்னொளியில் அந்த படுக்கையறை பசுமை யாக காட்சியளித்தது. அந்த அழகான சூழலில் அருகில் கட்டழகு கன்னியும் அருகிருந்தால் அதுவும் படுக்கையறையில் ஒரே போர் வைக்குள் இருந்தால் சக்கரை பந்தலில் தேன்மழை பொழியாதா என்ன?

முதன் முதலாக ஒரு பெண்ணின் அருகாமையும் அவளின் சுகமும் வாகீசனை ஆனந்தம் கொள்ளவைத்தது. வாழ்க்கையில் இப்படியொரு பக்கம் இருக்கிறதா என்பதனை ஐம்பது வய தில்தான் உணர்ந்துகொண்டான். திடீரென்று படுக்கையை விலக்கி வெளியே பார்த்தான். இரவு விடியவில்லைப் போலும். கும்மிருட்டாக இருந்தது. அந்த கறுப்பு இருட்டிலும் பனிமழை பொழிந்துகொண்டிருப்பது அழகாக தெரிந்தது. பனி மழை-யால் தரையெங்கும் வெள்ளை வெளீரென்று காட்சி அளித்தது. பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது. அதன் அழகை சில மணித் துளிகள் ரசித்தவன் திரைச்சீலையை மூடிக்கொண்டு மீண்டும் கட்டி லுக்கு சென்றான். அதிகாலை நித்திரைவிட்டெழுவதும் அந்த வேளையில் புத்தகம் வாசித்தல் மற்றும் எழுதுதல் போன்ற கடமை-களைச் செய்வது அவனது வழமையான நடவடிக்கை. இன்று அவ-னால் அப்படியெதுவும் செய்யமுடியவில்லை. அவனது தேவதை அதற்கு தடை போட்டாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அவளை அப் படியே அள்ளி அணைத்துக்கொண்டு மலரும் நினைவுகளுடன் சங்கமமானான் வாகீசன்.

வாகீசன் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். கல்லூரி வாழ்க்கையிலும் அதற்கு பின்னரும் கலை இலக்கிய விவகாரங்களில்

தீவிர ஈடுபாடு காட்டி வருபவன். இத்துறையில் ஆர்வமுள்ள பலருடன் அவனுக்கு தொடர்புகளும் நட்புகளும் இருந்தன. ஆண்கள், பெண்கள், சிறிவர், பெரிவர் என்ற எந்த வேறுபாடுமின்றி இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகளை கொண்டிருந்தான். யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யம் மிக்க ஆண்கள் கல்லூரியில் அவன் கல்வி கற்றதனால் அதற்கு அருகிலுள்ள யாழ். பொது நூலகம் அவனது வாசிப்புக்கு தீனி போட்டது. நூலகத்தின் வாசிப்பு பகுதியில் அமர்ந்துகொண்டு நூல்களை வாசிப்பதும் முக்கியமான குறிப்புக்களை எடுப்பதும் என்றால் அவனுக்கு அலாதிப்பிரியம். அங்கே வீசும் இளம் தென்றல் காற்று மிகவும் சுகமானது. அவனுடன் படிக்கும் மாணவர்கள் றியோ, றீகல மற்றும் தியேட்டர்கள் என தங்கள் பொழுதுகளை வெட்டியாக கழித்துக்கொண்டிருக்க வாகீசன் மட்டும் நூலகம், சுப்பிரமணிய பூங்கா, முனியப்பர் கோயில், முற்றவெளி என இயற்கை காட்சிகளில் ஒன்றிப்போயிருப்பான்.

யாழ் திறந்த வெளியரங்கம், வீரசிங்கம் மண்டபம், றிம்மர் ஹோல் என அங்கு வார இறுதி நாள்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் பார்த்து மகிழ்வதும் அவனது விருப்பங்களில் ஒன்று. யாழ். நூலகம் தீக்கிரையானபோது அவன் தனது குடும்பத்தினரையே இழந்ததுபோல தவித்தான்.

சகிலாவும் யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் கல்லூரியில ஒன்றில படித்துக்கொண்டிருந்தார். வாகீசனைப்போல இலக்கிய ஈடுபாடுகள் நிறையவே அவளிடமிருந்தன. அவள் பெண்ணாக இருந்தமையால் பாடசாலையை விட்டு வெளியிடங்களுக்கு என்று தனது பொழுதுகளை கழிக்கமுடியாவிட்டாலும் இலக்கிய பேச்சுகள் மற்றும் இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதிலும் ஆர்வம் காட்டி வந்தார்.

இருவரும் ஒரே சிந்தனையுடையவர்களாக இருந்தாலும் சந்திப்பதற்கோ அல்லது பேசுவதற்கோ வாய்ப்புக்கள் இருக்கவில்லை. வாகீசனின் படைப்புக்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளி

வரத்தொடங்கின. கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள் என வெளிவரும். இந்தப் படைப்புக்களின் முதல் ரசிகையாக சகிலாவே இருந்தாள். இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டபோதெல்லாம் வாகீசனை சந்தித்து அவனது படைப்புக்களை பாராட்டி வாழ்த்து தெரிவிப்பாள். இந்த பாராட்டுக்களினால் உற்சாகத்தின் எல்லைக்கே போய்விடுவான். சில நாட்கள் செல்ல செல்ல இருவரது நட்பும் இணைபிரியா நட்பானது.

சகிலாவின் சந்திப்பும் அவளுடன் பழகுவதும் வாகீசனுக்கு மகிழ்வையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தியது. அவளது வசீகரப் பார்வையும், பேச்சும் பழகும் விதமும் அவன் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. அவள் தன் காதலியாகிவிடக்கூடாதா? என்று கனவு கண்டான். கற்பனையில் அவளுடன் காதல் நாடகம் ஆடத்தொடங்கினான். சகிலாவிற்கும் வாகீசன்மீது அளவிற்கு அதிகமான பிரியம் ஏற்பட்டது. இருவருக்கும் உள்ளுக்குள்ளே விருப்பம் இருந்தாலும் அதனை வெளியில் சொல்லமுடியாது இருவரும் தவிர்த்துக் கொண்டிருந்தனர். தனது காதலுக்கு அடையாளமாக வாகீசன் "வாசகி" என்னும் புனைபெயரை தனதாக்கிக் கொண்டான். இந்த பெயர் தொடர்பாக சகிலா அவ்னிடம் வினவியபோது எழுதுபவன் எழுத்தாளன். வாசிப்பவன் வாசகன் இதற்கு பெண்பால் வாசகி இந்தப் பெயரில் எழுதினால் பல வாசகர்கள் விரும்பி வாசிப்பார்கள். அதனால்தான் அப் படி என்று சமாளித்தான் வாகீசன். காதலை எப்படி சொல்வது என்று தவித்துக்கொண்டிருந்தவன் நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டிட்டோமோ என்று மனம் வெதும்பிய வாகீசன் இன்னொரு சந்தர்ப்பம் வராதா? என்று ஆறுதல் அடைந்தான். அடுத்த தடவை அவளை சந்திக்கும்போது எப்படியும் என் காதலை சொல்லியே விடுவது. நடக்கிறது நடக்கட்டும் என்று முடிவெடுத்தபடியே அவளை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தவேளையில் அவளே அவன் முன் ஆஜரானான்.

'சகிலா உங்களுடன் முக்கியவிடயமொன்று கதைக்கவேணும். நீங்கள் தவறாக நினைக்கவில்லை என்றால் கேக்கிறன்' என்று வாகீசனை இடைமறித்து நானும் உன்னை கேட்கத்தான் இருந்தேன். நீயே காதலை வெளிப்படுத்தப்போகிறாயா? தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். 'நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டுள்ளோம். என்னவென்றாலும் கேளுங்கள் என்று வாகீசனுக்கு பச்சைக்கொடி காட்டினாள்.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வார்த்தைக்கு வடிவம் கொடுத்தான். 'நிறம் மாறாத பூக்கள்' சினிமா, நண்பர்களுடன் பார்க்கப்போகிறேன். உங்களின் அருகில் இருந்து பார்க்க விரும்புகிறேன். வரமுடியுமா? என்றான். அடப்பாவி காதலை இப்படியா சொல்வது என்று சத்தமில்லாமல் முணுமுணுத்தவாறே தலையசைத்து சம்மதம் தெரிவித்தாள்.

"ஆழ்கடலின் ஆழத்தை தெரிந்துகொண்டாலும் பெண்களின் மனதை புரிந்துகொள்ள முடியாது என்பார்கள். அதனால்தான் தயக்கத்துடன் இதனை தெரிவித்தேன்." என்றான் வாகீசன். "உங்களைப் போன்ற நண்பர்கள் மத்தியில் எனது மனது திறந்த புத்தகம் தான். எப்பொழுதும் நீங்கள் வாசிக்கலாம் என்பதை என்னுடன் பழகிய நாட்களில் புரிந்துகொள்ளவில்லையா? என்று புதிர் போட்டாள் சகிலா.

"இந்தப் புத்தகத்தை நான் மட்டும் தான் வாசிக்கவேண்டும் வேறொருவரையும் தீண்ட விடமாட்டேன்" என்று சத்தம் போட்டுச் சொல்லவேண்டும் போல இருந்தது. வாகீசன் அச்சத்தினால் அதனை அடக்கிவாசித்தான்.

இருவரும் அருகருகே இருந்து படம் பார்த்தவர்களை சகிலாவின் உறவினர் எவரோ அவதானித்துவிட்டு அவளது வீட்டிற்குத் தெரிவித்து விட்டனர். வீட்டுக்காரர்கள் தங்கள் குடும்ப கௌரவத்தை கெடுத்துவிட்டாள் என்று வார்த்தைகளால் அவளை கொன்றனர். அன்றுமுதல் வெளியிடங்களுக்கு செல்வதற்கு அவ

ளுக்கு தடை விதிக்கப்பட்டது. தொடர்ந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டாள். வாகீசனை பற்றியும் அவனது குடும்ப சூழலை பற்றியும் தெரிந்துகொண்ட சகிலாவின் தந்தையார் "போயும் போயும் ஒரு பள்ளனை காதலிச்சிட்டாயே!" என்று புறுபுறுத்தார். இந்தக் காதலை வளரவிடாது தடுக்கவேண்டும் என்று முடிவெடுத்த அவர் உடனடியாக மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து பிரான்ஸ் நாட்டிலுள்ள மாப்பிள்ளைக்கு அனுப்பிவைத்தார். அவளது விருப்பு வெறுப்புகளை புரிந்துகொள்ளாத அவளது குடும்பத்தினர்மீது சகிலாவுக்கு வெறுப்பு ஏற்பட்டாலும் குடும்ப கௌரவத்திற்கு மதிப்பளித்து சாதாரண தமிழ் பெண்கள் போன்று குடும்பத்திற்கு கட்டுப்பட்டு பாரிஸ் நகருக்கு பறந்துசென்றாள். அங்கு ஒருவனுக்கு கழுத்து நீட்டினாலும் நினைவுகள் முழுக்க வாகீசனை சுற்றி சுற்றி வந்தன. இந்த நிலையை உணர்ந்துகொண்ட வாகீசன் தனது காதல் தோற்றுப்போனதால் தவியாய் தவித்தான்.

இருபது வருடங்கள் கடந்துவிட்டன. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அடுத்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாயகம் நோக்கி வரத்தொடங்கினர். சகிலாவும் பல வருடங்களுக்கு பிறகு யாழ்ப்பாணம் திரும்பினாள். எப்படியோ வாகீசனை தேடிக்கண்டுபிடித்து தன் கதையைச் சொன்னாள். திருமணம் என்ற பெயரில் தான் ஏமாற்றப்பட்டதை விளக்கமாக கூறினாள். தான் திருமணம் செய்தவனுக்கு ஏற்கனவே அந்த நாட்டில் மனைவி, பிள்ளைகள் அவன் தன்னோடு வாழவில்லை என்று தன் சோக வரலாற்றை சொன்னாள். வாகீசன் இதுவரையும் திருமணம் புரியாமல் தன் நினைவுகளுடனே வாழ்வதை எண்ணி எண்ணி கண்ணீர் சிந்தினாள். அவள் கண்ணீரை தன் கரங்களால் துடைத்துவிட்டபடி "ஐ லவ் யூ" என்றான். பிரான்ஸ் திரும்பிய சகிலா விருப்பமில்லாத தன் கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டு வாகீசனை பிரான்ஸிற்கு அழைத்து திருமணம் புரிந்துகொண்டாள்.

*(1979)*

# எங்கிருந்தாலும் வாழ்வோம்

மார்கழி குளிர் உடம்பெல்லாம் அனல்போல குத்திக் கொண்டிருக்கிறது. குளிரை சமாளிப்பதற்கென உடுப்புகள் அணிந்தாலும் அவற்றையெல்லாம் உடைத்துக்கொண்டு உடலை வாட்டியெடுத்தது குளிர். இந்தக் குளிரில் நடு நடுங்கிக்கொண்டிருந்த கந்தசாமி வாத்தி யாரும் அவரது நண்பர்களும் மெட்ரோ நிலையத்திற்குள் படிகளால் கீழே இறங்கிக்கொண்டிருந்தனர். பாரிஸ் நகரத்திலுள்ள 'ஒபேரா (opera)' மெட்ரோ நிலைய மெட்ரோ தரிப்பிடத்திற்கு வந்து சேர்ந்தனர். இரு பக்க தரிப்பிடங்களிலும் பயணிகள் அதிகமாக காணப்பட்டனர். வெள்ளை நிறத்தவர்கள், கறுப்பு நிறத்தவர்கள் என பல ஆண்களும், பெண்களும் ஜோடி, ஜோடியாக கட்டி யணைத்து முத்தமிட்டு ஆரத்தழுவிக் கொண்டிருந்தனர். அந்த ரங்கத்தில் செய்வதெல்லாம் அரங்கத்தில் செய்து குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். கந்தசாமி வாத்தியாருக்கு அருவருப்பாக இருந்தது. கண்டும் காணாததுபோல இருந்தார். அவருடன் வந்த நண்பர்களில் பல இளவயதுடையவர்கள். அவர்க்ள் இந்த காட்சி

களை தங்கள் கண்களால் படம்பிடித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு மிக அருகாக ஆபிரிக்க நாட்டு இளைஞர் ஒருவனும் தமிழ் யுவதி ஒருவரும் கட்டிப்பிடித்துக்கொண்டு குளிரைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இதனை அவதானித்துக்கொண்டிருந்த கந்தசாமி வாத்தியாரின் நண்பர்களில் ஒருவன் அவர்களை கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தான். "எங்கட தமிழ் கலாச்சாரத்தை காற்றிலே பறக்கவிடுகிறாள். இதுகளைப் போல பெட்டையளால் தான் தமிழர்களுக்கு மரியாதையில்லை. என்ர பிள்ளை இப்படி சாதி மாறி, இனம் மாறி யாரோடையாவது காதல் தொடர்பு வைத்தால் உடனே மெட்ரோவுக்கு தள்ளிவிழுத்தி கொன்றுபோடுவன். இதைத்தான் இங்கு இருக்கின்ற எனது சகோதரர்களுக்கும் சொல்லி வைத்திருக்கிறன்" என்று ஆவேசமாக பேசினான்.

தமிழ் பிள்ளையை அந்தக் கோலத்தில் பார்த்த மறுகணமே அனல் கொதிக்கும் கண்களுடன் நின்ற அந்த நண்பன் அவர்கள் இருவரையும் மெட்ரோவுக்குள் தள்ளிவிடும் மனநிலையில் இருந்தான். அந்த நண்பனின் கருத்துக்களை எதிர்த்தும், ஆதரவு தெரிவித்தும் ஏனைய நண்பர்களின் வாதப்பிரதி வாதங்களும் நிகழ்ந்தன. "காலம் மாறிப்போச்சு, நாங்கள் இன்னொரு நாட்டில் இருக்கிறம். இந்த நாட்டு கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்களுக்கு மெல்ல, மெல்ல நாம் அடிமையாகிக்கொண்டேயிருக்கிறம். சாதி, மத பேதமில்லாமல் காதலிப்பதும் ஒன்றுசேர்வதும் இங்கு சகஜம். ஊர் மாதிரி எமது கட்டுப்பாட்டுக்குள் பிள்ளைகளை வளர்க்க முடியாது." என்று இன்னொரு நண்பன் விளக்கமளித்தான்.

"இதைப்பற்றி நீ கதையாதை, உன்ரை அண்ணன்ர பொடியன் ஒரு வெள்ளைக்கார பொம்பிளைய காதலிச்சு கலியாணம் கட்டியிருக்கிறான். அதை ஆதரித்து தானே வைச்சிருக்கிறாய். உங்களுக்கு என்று இப்படி நடந்தால் அது நியாயம். மற்றவருக்கு வந்தால் அது தவறா" வேறு ஒருவன் உறைப்பாக உரைத்தான்.

"அண்ணன்ர பொடியன் அப்படிச் செய்ததை நான் நியாயப் படுத்தவில்லை. நான் எதிர்த்தனான். அண்ணாவுக்கு சொன்னேன் அவர் கேட்கவில்லை. பிள்ளைப் பாசம் அவரை விடவில்லை. அண்ணன்ர பொடியனும் அந்த வெள்ளைக்கார பெட்டையும் ஒன் றாக படிச்சவர்கள். பெட்டையின்ர குடும்பமும் நல்ல குடும்பம். அதுதான் செய்து வைச்சனாங்கள்." என்று பதிலளித்தார் நண்பன்.

"இப்படித்தான் உங்கள் பக்கம் நியாயம் இருப்பதுபோல மற் றவர் பக்கமும் நியாயம் இருக்கலாம். விடுங்கோ ஊருக்குத்தான் உபதேசம் உனக்கெல்லாம்.. என்ற கதைதான் இதற்கு பொருத்தம். மற்றுமொருவன் இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான். நண்பர்களின் சம்பாசனையில் கலந்துகொள்ளாமல் இதனை அவதானித்த கந்தசாமி வாத்தியார் இப்பொழுது தனது வாயைத் திறந்தார். "நீங்கள் எல்லோரும் நீண்ட காலமாக பிரான் ஸில் வாழ்கிறீர்கள். நான் அண்மையில் தான் இங்கு வந்தனான். அதுதான் அமைதியாக இருந்தனான். நாங்கள் தவமாய் தவமிருந்து பெத்து பார்த்து பார்த்து வளர்த்துவிட்ட பிள்ளைகளை காதல் விட யத்திற்காக அடிப்பதோ அல்லது வீட்டை விட்டு கலைப்பதோ, கொலை செய்யும் முயற்சியை ஏற்றுக்கொள்ளவே முடியாது. காதல் என்பது எல்லோருக்கும் பொதுவானது. அது யாருடனும் வரும் எப்ப வரும் என சொல்லமுடியாது. வெள்ளைக்காரருக்கு மட்டுமல்ல தமிழர்களிடமும் அந்தப் பழக்கம் நிறைய இருக்கிறது. தமிழர்கள் அந்தரங்கத்தில் செய்வதை வெள்ளைக்காரர் அரங் கத்தில் நிகழ்த்துகிறான். அவர்களுக்கு அது நியாயமாகப் படுகி றது. அதைப்பற்றி கேட்டால் அவர்கள் விளக்கமளிப்பார்கள். ஆண்களை பெண்கள் முத்தமிட்டு வரவேற்பதும் கைலாகு கொடுப்பதும் அவர்களின் பண்பாடு. தமிழர்கள் நாங்கள் யாராவது பெண்ணை முத்தமிட்டு வரவேற்கிறோமா? இல்லையே. ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எம்மவர்கள் இப்பொழுது இந்த பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்கிறார்கள். இதில் எந்தவகை வித்தியாசமுமின்றி பழகுவதுடன் கெட்ட நோக்கமும் இல்லை

என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளை கை நீட்டி அடிப்பதோ அவர்கள் விருப்பத்திற்கு தடையாக வன்முறையை மேற்கொள்வதோ இந்த நாட்டு சட்டங்களுக்கு எதிரானது. அன்பால் அரவணைத்து எங்கள் வழிகளுக்கு அவர்களை கொண்டு வரமுடியும். முயன்றால் எதுவும் செய்யலாம்.

காதலர்களை கொலை செய்வதால் தீர்வு கிடைக்குமா? நாம் மட்டும் உயிருடன் வாழமுடியுமா? சட்டம்தான் எம்மைவிட்டு விடுமா? அப்படித்தான் விட்டாலும் வாழ்நாளெல்லாம் நாம் இந்த சம்பவத்தை நினைத்து செத்துக்கொண்டேயிருப்போம்..." என்று கந்தசாமி வாத்தியார் மாணவர்களுக்கு படிப்பிப்பது போல விளங்கப்படுத்தினார்.

நண்பர்கள் அனைவரும் வாத்தியாரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும் மெட்ரோ வண்டி அந்த தரிப்பிடத்திற்கு வரவும் சரியாக இருந்தது. எல்லோரும் வண்டியில ஏறி தத்தமது ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர். வாத்தியார் தனி ஆசனம் ஒன்றில் அமர்ந்துகொண்டார். அவர் தனது ஒரே மகள் "அழகியா" வின் நினைவுகளுடன் சங்கமமானார். வாத்தியார் திருமணமாகி பல வருடங்களுக்குப் பின்பே "அழகியா" பிறந்தாள். அதனால் அவளை தனது உயிராகவே போற்றி வளர்த்தார். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகளள் அங்கு உயிர்வாழமுடியாத நிலையில் பிரான்ஸிற்கு புலம்பெயர்ந்து வந்தார். அழகியாவிற்கு பத்து வயது வந்தவுடனே பாடசாலையில் அனுமதி கிடைத்தது. அவள் பாடசாலைக்கு செல்லத் தொடங்கியதுமே "வாத்தியார்" இஞ்ச பொம்பிளப்பிள்ளையள வளர்ப்பது கஷ்ரம். பாடசாலையிலேயே எல்லாத்தையும் சொல்லிக்கொடுப்பினம். பாடசாலை விட்டு வெளியே சுற்றுலா செல்வது இங்குள்ள பாடசாலைகளின் நிகழ்ச்சி நிரலில் முக்கியமானது. அப்போது பெண் பிள்ளைகளுக்கும் கருத்தடை மாத்திரைகள் கொடுத்துத்தான் வெளியே அனுப்புவார்கள். அங்கே போற இடத்தில என்ன நடக்குமோ தெரியாது." வாத்தியாரின் உறவினர்கள் பலர் தெரிவித்தார்கள். இதைக் கேள்விப்பட்டதும் வாத்தியாருக்கு பெரும்

கவலையேற்பட்டது. "பிரான்ஸிற்கு ஏன் வந்தேன்" என்று தனக்குத்தானே சினந்துகொண்டார். காலவோட்டத்தில் இவ்வாறு பல விடயங்களை ஆராய்ந்து பிரான்ஸ் நாட்டைப் பற்றிய விளக்கங்களைப் புரிந்துகொண்டார்.

தமிழ் கலாச்சாரத்திற்கும் பிரெஞ்சு கலாச்சாரத்திற்கும் இடை-யில் பல முரண்பாடுகள் இருந்தாலும் பல பலட்சக்கணக்கான தமிழர்கள் இங்கு வாழ்கிறார்கள். பல பிள்ளைகள் படித்து பட்டம் பெற்று நல்ல நிலமைக்கு வந்துள்ளார்கள். அது மட்டுமல்ல ஊரில் இருக்கிற உறவுகளுக்கும் உதவியாக இருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொண்டு எங்கிருந்தாலும் வாழ்வோம் என்று தனக்குள் தானே சபதம் எடுத்துக்கொண்டார்.

தற்பொழுது பதினாறு வயதுடைய தனது மகளை அன்பூட்டி வளர்ப்பதிலும் கல்வி மற்றும் வாழ்க்கை முறைகள் பற்றிய அறிவுரைகள் வழங்குவதிலும் அவளுடன் நட்பாக பழகுவதிலும் ஈடுபாடு காட்டினார். தகப்பனும் மகளும் நண்பர்கள் போல் பழகுவது வாத்தியாரின் மனதிற்கு மகிழ்ச்சியளித்தது.

வாத்தியார் வீட்டிற்கு வந்துவிட்டார். அழைப்பு மணியை அழுத்தினார். கதவைத் திறந்தபொழுது 'அழகியா' முன்னின்றாள். அவளை அப்படியே அள்ளி அணைத்து முத்தமிட்டு 'சாப்பிட்டாயா' என்று கேட்டு இருக்கையில் அமர்த்தினார். 'இல்லை அப்பா நீங்க வந்த பின் சாப்பிடலாம் என்றிருந்தேன் என்று செல்ல மொழியில் உரை பகர்ந்தாள் அழகியா. 'இல்லையம்மா... நேரத்திற்கு சாப்பிடவேணும் என்னை எல்லாம் எதிர்பார்க்கக்கூடாது' என்று கூறிய தந்தையை இடைமறித்த அழகியா 'உங்களோடு சேர்ந்து சாப்பிடுவது தான் எனக்கு விருப்பம்' என்றாள்.

"செல்லம்" பொழிந்தது காணும். இருவரும் சாப்பிட வாங்கோ என்று வாத்தியாரின் மனைவி இருவரையும் சாப்பிட அழைத்தார்.

அன்றிரவு படுக்கைக்கு சென்ற வாத்தியாருக்கு மெட்ரோ நிலையத்தில நிகழ்ந்தது, நண்பன் சொன்ன வார்த்தைகள் அவரது காதுகளில் நரகாசமாய் ஒலித்துக்கொண்டிருந்தன. இப்படியும் செய்வதா? என கேள்வி எழுப்பிக்கொண்டேயிருந்தார். ■

# ஆஸ்பத்திரியும் அந்த ஏழு நாட்களும்

"வருத்தம் வராதவர்களுக்கு வந்துவிட்டால் அதுதான் கடைசி. இனியென்ன நடக்க வேண்டியதை பார்க்கவேண்டியது தான்"

"நடக்கிறது நடக்கட்டும் எல்லம் அவன் செயலே"

"இது குடிகாரர்களுக்கு வாற வருத்தம், இந்த ஆள் குடிக்கிறதும் இல்ல ஏன் இப்படி வந்தது இது ஒரு புது வருத்தம்தான்."

"நீங்கள் என்ன சொல்லுறியள் இப்ப குடிக்காதர்வளுக்குத்தான் வருத்தம் வருகிறது. இஞ்சை பாருங்கோ நான் குடிக்காத குடியே இல்ல. ஒரு வருத்தமும் இல்லை. நான் குடிப்பதால்தான் ஆரோக் கியமாக இருக்கிறேன்" இவ்வாறு அந்த ஆஸ்பத்திரி விடுதியில் நோயாளியை பார்க்க வந்த உறவினர்கள் வார்த்தைகளை அளந்து கொண்டு நின்றனர்.

தாமோதரனின் வலதுபுறம் கையில் குளுக்கோசும் இடது புறத்தில் இரத்தமும் ஏற்றப்பட்டு வாயில் மௌசும் பொருத்தப் பட்டிருந்தது. எவருடனும் பேசமுடியாத நிலையில் அவர் கண்களும் மூடப்பட்டிருந்தது. இதனால் மயக்க நிலையிலிருப்பதாக

நினைத்து பார்வையிட வந்தவர்கள் அவரைப்பற்றியும் அவரது நோய் பற்றியும் ஆளுக்காள் அலசிக்கொண்டிருந்தனர்.

தாமோதரன் தன் காதுகளை கூர்மையாக்கிக்கொண்டு எல்லா வற்றையும் கேட்டுக்கொண்டிருந்தார். அவரது மனைவி கட்டிலின் அருகில் இருந்து அவரது கைகளையும் தலையையும் அடிக்கடி தட விக்கொண்டிருந்தார்.

"டொக்டர்கள் என்ன சொல்கிறார்கள். ஆளுக்கு வருத்தம் எப் படியிருக்கு." என்று ஒருவரும் "ஏன் திடீரென்று இப்படி நடந்தது- எங்களுக்கு ஏன் உடனே சொல்லேல" என்று இன்னொருவரும் "எந்த கெட்டபழக்கமும் இல்லாத மனுசன் இப்பிடி படுக்கையில போட் டுட்டாங்களே!" என மற்றொருவரும், "இது மூலவருத்தம்தான் அதனால்தான் மலவாசலில் இருந்துஇரத்தம் வந்தது" "குடலில் புண் இருக்கிறது. அதுதான் இரத்தம் வந்திருக்கலாம்", "மலவாசலில் சவ்வு வளர்ந்து அது கிழிந்திருக்கலாம்." "என்ன வருத்தம் என்று ஏன் இன்னும் அதை கண்டுபிடிக்கவில்லை."

அங்கு குழுமிநின்றவர்கள் அனைவருமே கேள்விக்கணை களால் துளைத்தெடுத்தனர். இவர்களுக்கு பதிலளிக்க முடியா- மல் தாமோதரனின் மனைவி சிரமப்பட்டாள். எல்லோரும் உறவினர்கள், தம்மீது அக்கறை கொண்டதன் காரணமாகவே இப்படி நலம் விசாரிக்கிறார்கள் என்று தாமோதரன் எதையும் பொருட்படுத்தவில்லை.

அன்று சனிக்கிழமை அதிகாலை 05:30 மணி தாமோதர னின் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த தொலைபேசியிலிருந்து "அலாரம்" அடித்தது. இதனை தொடர்ந்து அவர் நித்திரையை விட்டெழுந்து காலைக்கடனை கழிப்பதற்காக மலசலகூடத்திற்கு சென்றார். மலத்திற்கு பதிலாக மலவாசலிலிருந்து இரத்தமே போய்க் கொண்டிருந்தது. மலசலத் தொட்டியில் இரத்தக் குழம்பாய் மிதந்தது. இரத்த வெடிலும் அடித்தது. பலதடவைகள் இரத்தம் பெருக்கெடுத்தது. இதனால் களைப்படைந்து சோர்ந்து போ-

னார் தாமோதரன். உச்சந்தலையில் பாறாங்கற்கள் வந்து விழுவது போலவும் தலைகனத்து இருண்டுகொண்டு வந்தது. கண்கள் உள்ளே சொருகிய நிலையில் மயக்கமடைந்தார். எழுந்து பார்த்தபோது ஆஸ்பத்திரி கட்டிலில் மல்லாக்காக படுத்திருந்தார். எழுந்திருக்க முயன்றபோதும் முடியவில்லை. உடல் களைத்துப்போய் இயலாத நிலையிலிருந்தார். டொக்டர்கள் தொடர்ந்து அவரை பரிசோதனை செய்துகொண்டிருந்தனர்.

"இப்போதைக்கு எதுவும் சொல்லமுடியாது. வாட்டில் தங்க வைக்கவேண்டும்" என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். வீட்டில் மயக்கமடைந்தவரை அம்புலன்ஸ் வண்டிமூலம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வரையும் மயக்கநிலையிலிருந்தமையால் அவரது மனைவியும் பிள்ளைகளும் கலங்கிப்போயிருந்தனர். தாமோ தரனுக்கு இது முதல் அனுபவம் என்பதால் கலங்கித்தான் போனார்.

வயது 55 ஆகின்றபோதும் இதுவரையும் எந்த நோய்க்கும் ஆளாகாதவர். பிரான்ஸிற்கு வந்து பத்து வருடங்களாகின்றபோதும் ஆஸ்பத்திரி விடுதிகளில் தங்கியிருந்த அனுபவமும் இல்லை. தனது உடல் நிலையை முறைதவறாமல் குடும்ப மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்பவர். எந்தவித குறைகளும் இல்லை, சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம் என எல்லாமே ஒழுங்காக இருந்தபோது திடீரென பெரும் குண்டை போட்டது இந்தச் சம்பவம்.

பாரிஸ் லாசப்பலுக்கு செல்லும் போதெல்லாம் சுவர்கள் மற்றும் கடை வாசல்களில் ஒட்டப்பட்டிருக்கும் மரண அறிவித்தல் கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை தவறாது பார்வையிடுவார். இளையவர், முதியவர் என வயது வித்தியாசமின்றி தமிழர்களின் மரணத்தை அந்த பிரசுரங்களிலிருந்து அறிந்துகொள்வர். புலம் பெயர்ந்த வாழ்வு, புதிய சூழல், வாழ்வின் மாற்றங்கள், உணவு பழக்க வழக்கம், அதிக மதுபானம் அருந்துதல் என பல விடயங்கள் இந்த மரணங்களுக்கு காரணம் என நண்பர்கள் கூறுவார்கள்.

கட்டுப்பாடற்ற மதுபாவனை, அளவுக்கு அதிகமான புகைப்பிடித்தல், போதைவஸ்து பாவனைகளினால் நம்மவர்களின் உடலில் நோயின் தாக்கத்தை அதிகரித்து மரணிக்கும் வயதுக்கு முன்னரே மரணிக்கவைக்கின்றது. மதுவுக்கு அடிமையான பலர் குடும்பத்தவர்களால் கைவிடப்பட்டு "வைன் கோஷ்டிகள்" என்ற பெயரில் தெருக்களில் அலைந்து திரிகிறார்கள். இதில் தமிழர்களும் அடங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்த பலரின் மரண அறிவித்தல்கள் 'லங்கா சிறி' இணையத்தளத்தில் நாளாந்தம் நிறைந்து காணப்படும்

தாமோதரம் தங்கியிருந்த மருத்துவமனை 24 மணிநேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும். சுத்தம் செய்யும் தொழிலாளர்களிலிருந்து மருத்துவ உத்தியோகத்தர்கள் மருத்துவ நிபுணர்கள் வரை அனைவருமே இயந்திரமாக இயங்கினார்கள். மருத்துவமனையும் அதன் சுற்றாடலும் எப்பொழுதும் சுத்தமாகவே காட்சியளித்தன. தாமோதரன் தங்கவைக்கப்பட்ட அறையில் தொலைக்காட்சி, தொலைபேசி உட்பட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. மலசல வசதிகள் கூட ரம்மியமாக இருந்தன. ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருப்பது போன்ற உணர்வை அவருக்கு ஏற்படுத்தியிருந்தன.

இதனோடு யாழ்ப்பாண மருத்துவ மனையை ஒப்பிட்டுப் பார்த்தார். ஆயிரம் வருடங்களுக்கு அது பின்தங்கியிருக்கிறது என சலித்துக்கொண்டார். கழிவுகள் நிறைந்த கழிவறைகளும் அங்கே படிந்துள்ள சுகாதார சீர்கேடுகளும் அதை அனுபவித்த காலங்களை நினைத்தபோது அருவருப்பை ஏற்படுத்தின. இரத்தம் அதிகம் வெளியேறிய காரணத்தால் களைப்படைந்து படுக்கையிலே இருந்த தாமோதரனுக்கு குளுக்கோசும், இரத்தமும் ஊசி மூலம் தொடர்ந்து ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தது. மலவாசல் வழியாக அவரது உடலை சுத்தம் செய்தபின்னர் வாய், தொண்டைக்குளி ஊடாக கமரா செலுத்தப்பட்டு உடல் உள் உறுப்பு முழுவதும்

படம் பிடிக்கப்பட்டது. 'கமரா' பிடிக்கும் அறையில தாமோத ரனை சரிந்து படுக்கவைத்து கால்களை இருவரும் கைகளை இருவரும் பின்பக்கமாக இறுக்கமாக பிடித்தபடி நிற்க வாயை அகல விரித்து கிளிப்பு ஒன்றை வைத்தனர். வாய்க்குள் 'கமரா' குழாயை செலுத்தினார்கள். தொண்டை நுனியில் வைத்து படம் பிடிப்பார்கள் என்று எதிர்பார்த்தார் தாமோதரன். மெல்ல மெல்ல உடலின் அடிவரையும் 'கமரா' செலுத்தப்பட்டது. இதனால் சில நிமிடங்கள் மரணவேதனையை அனுபவித்தார். ஆடு வெட்டும் கொலைக்களத்தில் ஆடுகளின் கால்கள் வாய் மூடப்பட்டு அதனை செய்யும் காட்சி போல இருந்தது. வயிற்றுக்குள் கமரா விட்டு படம் எடுப்பது பற்றி அனுபவமுள்ளவர்கள் மூலம் அறிந்து கொண்ட தாமோதரனுக்கு அதனை அனுபவித்த பின்னர் தான் அந்த வலியை உணர்ந்துகொண்டார்.

மூக்கு முட்ட சாப்பிட்டு பழகியவருக்கு ஆஸ்பத்திரி சாப் பாடு அறவே பிடிக்கவில்லை. யானைப்பசிக்கு சோளப்பொரி போல இருந்தது அந்தச் சாப்பாடு. இரண்டு நாட்களின் பின் அந்தச் சாப்பாடும் நிறுத்தப்பட்டது. அவரது கட்டிலின் மேலே பிரெஞ்சு மொழியில் 'A JEUN' என்ற அறிவிப்பு பலகை போடப்பட்டது. சாப்பாடு நிறுத்தப்பட்டதற்கான தகவல் என் பதை அறிந்துகொண்டார். சாப்பாடு தருவதே குறைவு அதுவும் நிறுத்தப்படுமா? என்று அங்கலாய்த்தார்.

உண்ணாவிரதம் என்றால் உடனுக்கு நினைவு வருப-வர் தாமோதரனை பொறுத்தவரை அது ஊரெழு இரா சையா வாத்தியாரின் பொடியன் திலீபன்தான். நல்லூரில் திலீபன் நடத்திய **12** நாட்களிலும் உடனிருந்தவர்களில் அவரும் ஒருவர். அருகிருந்தே திலீபனை பார்த்து அதிசயித்துகொண்டேயிருப்பார். தானும் இப்பொழுது உண்ணாவிரதம் இருக்கப்போவதை உணர்ந்து கொண்டார்.

உடல்நிலை மாற்றம்பெறவேண்டும், சுகம்பெறவேண்டும் என்ற உணர்வில் வயிற்றில் பசி வளர்க்க முடிவுசெய்தார். பசித்திரு,

தனித்திரு, விழித்திரு போன்ற வாசகங்கள் எங்கோ படித்ததை நினைவு கூர்ந்தார்.

இரத்த அழுத்தம், காய்ச்சல், இரத்தத்தை பரிசோதித்தல் என நாளாந்த நடவடிக்கைகளில் ஆஸ்பத்திரி மருத்துவ உத்தி யோகத்தர்கள் கறுப்பு மற்றும் வெள்ளை இன பெண் ஊழியர்கள் மரியாதையுடனும் அன்புடனும் இந்த பணிகளை மேற்கொண்டனர். இத்தகைய பணிகளை செய்வதற்கென்றே இவர்கள் பிறந்தவர்கள் போலும்.

சாப்பாடு நிறுத்தப்பட்டது பின்னர் தாமோதரன் எடையில் மாற்றம் ஏற்பட்டன. அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து கழிவறைக்கு செல்லும் போதெல்லாம் மலத்தினை பார்வையிட்டு மருத்துவ அதிகாரிகள் குறிப்பெடுத்துக்கொண்டே யிருப்பார்கள்.

ஐந்தாம் நாள் மாலையில் இரத்தம், குளுக்கோஸ் ஏற்றுதல் நிறுத்தப்பட்டன. பேதி மருந்து கலக்கப்பட்ட மூன்று லீற்றர் தண்ணீர் அடங்கிய குவளை ஒன்று தாமோதரனிடம் கையளிக் கப்பட்டது. இரண்டு மணித்தியாலங்கள் இதனை குடித்து முடிக்கவேண்டும் என்றும் அடுத்த நாள் காலை மேலும் ஒரு லீற்றர் மருந்து கலந்த நீரை அருந்தவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டன. காலயில் தாமோதரன் தங்கியிருந்த அறையில் மருத்துவ ஊழியர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டதுடன் சுறுசுறுப்புடனும், பரபரப்புடனும் அவர்கள் இயங்கிக்கொண்டிருந்தனர்.

மயக்க நிலையில் சிகிச்சை அளிப்பதற்கான விண்ணப்பப் படிவமும் அந்த சிகிச்சைக்காக அணியும் ஆடையும் வழங் கப்பட்டது. சத்திர சிகிச்சை கூடத்திற்கு செல்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன.

சத்திர சிகிச்சை அறையில் மருத்துவர்கள் சீருடை யில் நின்றார்கள். தாமோதரனை அவரது கட்டிலுடன் உள்ளே

கொண்டு சென்றார்கள். அடிக்கடி அவரிடம் சவா? கேட்டுக்கொண்டேயிருந்தனர். மயக்க ஊசி ஏற்றப்பட்ட பின்னர் அவர் மயக்கமடைந்தார். மயக்கம் தெளிந்தபோது ஆடைகள் களையப்பட்டு வெள்ளைத்துணியால் போர்த்தப்பட்டிருப்பதை உணர்ந்துகொண்டார். சிகிச்சை அளித்தமைக்கான எவ்வித தடயங்களும் உடலில் காணப்படவில்லை. உடலில் வெட்டுக்காயங்களோ அல்லது வலிகளோ எதுவும் இல்லாத லேசர் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை அளித்த மருத்துவர்கள் சுகமா? சுகமா என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆறாம் நாள் வழமைபோன்று இரத்தப் பரிசோதனை இரத்த அழுத்த சோதனை என வழமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. காலை உணவாக தேநீர், பிஸ்கட் போன்றவையும் வழங்கப்பட்டன. முன்னரை விட பசி அதிகரித்து காணப்பட்டதுடன் உடல் நலத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

இதுவரையும் நடந்த சிகிச்சையின்போது தாமோதரனுக்கு ஏற்பட்ட நோய் பற்றி கண்டறிய முடியவில்லை. நோய் கண்டுபிடிக்கப்படும் வரை வார்ட்டில் வைத்து தான் சிகிச்சை அளிப்பார்கள் என்று மருத்துவ வட்டாரங்களோடு தொடர்புள்ள ஒருவர் கூறினார்.

ஏழாம் நாள் தாமோதரனின் வார்ட்டுக்கு வருகை தந்த டாக்டர்கள் அவர் வீடு செல்ல அனுமதி வழங்கியதுடன் அடுத்த வாரத்தில் மீண்டும் ஒரு பரிசோதனைக்கான அழைப்பு கடிதத்தை வழங்கிச் சென்றனர்.

*(2012)*

■

# துடக்கு

கலகலப்பாக இருந்த வீட்டில் மயான அமைதி நிலவி யது. அங்கிருந்தவர்கள் மூலைக்கொருவராக இருந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தனர். உறவினர்களும் நண்பர்களுமாக எப் பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் அந்த வீட்டின் நிசப்தத்தை குலைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார் அந்த குடும்பத்தின் தலைவர் தம்பித்துரையர். தம்பித்துரை வந்த கோலத்தை பார்த்து அங்கிருந்தவர்கள் ஆச்சரியத்துடன் எழுந்து நின்றனர்.

அவர் கையிலே கொண்டுவந்திருந்த வெட்டரிவாளை எறிந் தார். அது டான் என்ற சத்தத்துடன் ஒரு மூலையில் போய் விழுந்தது.

"எல்லாம் போச்சு போச்சு... என்ரை அந்தஸ்து கௌரவம் எல் லாம் போச்சு... இனி வாழ்ந்தென்ன விட்டென்ன..." குரல் எடுத்து அழுது கொண்டே நிலத்தில் வீழ்ந்தார் தம்பித்துரையர். 'என்னப்பா நடந்தது...' என்று கேட்டுக்கொண்டே பதற்றத்துடன் கணவனின் கைகளை பிடித்தாள் கனகமணி. 'தம்பி...' என்று ஓடி வந்தார். தம்பித்துரையரின் தாயார் லட்சுமியம்மா தந்தையின் கோபத்தினால் நிலைகுலைந்துபோன அவரது பிள்ளைகளான விஜி, கண்ணன், மதன், ஆகிய மூவரும் தந்தையின் முன் வந்தனர்.

"அவன் அவளோட போயிட்டாள் இனி பிரிக்கமுடியாதாம் இதற்குத்தான் நான் அவளை படிப்பிச்சு ஆளாக்கினன். முதல் பிள்ளை என்று செல்லம் கொடுத்து வளர்த்தன் அவள் தன்ரை புத்தியை காட்டிப்போட்டாள்" என்று தனது கோபத்தை வார்த்தைகளாக கொட்டித்தீர்த்தார் தம்பித்துரையர்.

'தம்பி ஏன்ரா அவளை அவனிட்ட இருந்து பிரிச்சுக்கொண்டு வரேலாதே.' என லட்சியம்மா கேட்டார். "இல்லை அம்மா அவளுக்கு வயது வந்திட்டுதாம் அதனால் எழுத்துக்கூட எழுதிப்போட்டாங்கள். இனி பிரிக்கமுடியாதாம்" என்று தமது இயலாமையை அவர் வெளியிட்டார். பிள்ளைகள் மூவரும் வார்த்தைகள் ஏதுவுமின்றி மௌனமாக இதனை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

"அவள் சேரவேண்டியவனோடு சேர்ந்திருந்தால் பரவாயில்லை அம்மா, எளிய சாதிக்கேயெல்லோ போய்விட்டாள். இனி எங்களை யாரம்மா மதிக்கப்போகினம். இவளுக்கு பின்னால இருக்கிறதை இனி யார் வந்து கட்டப்போறாங்கள். என்னை தலைகுனிய வைச்சிட்டாளே பாவி..." பொரிந்து தள்ளினார் தம்பித்துரை.

"எல்லாம் இவள் கொடுத்த இடம். கேடுதான் - நீ சரியாய் பிள்ளையை வளர்த்திருந்தால் இது நடக்குமே" என தனது மனைவி கனகமணியை குற்றம்சாட்டினார்.

"நீங்கள் என்ன சொல்லுறியள் பிள்ளையை படிக்கவிட்டது என்ரை பிழையே. நீங்களும் சேர்ந்துதானே யாழ்ப்பாணத்துக்கு டியூசனுக்கு விட்டியள் இப்ப என்னில மட்டும் பிழை சொல்லுறியள்" கணவனின் குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுத்தாள் கனகமணி.

"பிள்ளை அவன் கோபத்தில ஏதோ எல்லாம் சொல்லுவான். அதற்கு காது கொடுக்காத" லட்சுமி அம்மா சமாளித்தார். மனைவியின் வார்த்தைகளை கேட்டு கோபத்துடன் எழுந்த தம்பித்துரை கிணற்றடிக்குச் சென்று வாளி நிறைய தண்ணீர் எடுத்து வந்து வீட்டு முற்றத்தில் வைத்து தலையில வார்த்து "இன்றுடன் அந்தச் சனியன் தொலைந்தது - அவள் செத்தே போய்விட்டாள்"

என்று சொல்லிக்கொண்டு வீட்டிற்கு உள்ளே வந்து ஆடைகளை மாற்றிவிட்டு வெளியே சென்றார்.

தந்தை சென்றதும் தாயை சூழ்ந்துகொண்ட பிள்ளைகள் மூவரும் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். 'அக்கா கலியாணம் கட்டிட்டா என்னம்மா. எங்கட வீட்டிற்கு வரலாம்தானே' என்று கடைசிக் குழந்தை மதன் தாயார் கனகமணியிடம் வினவ இடை மறித்த லட்சுமியம்மா 'அவள் சாதி குறைஞ்சவனோட ஓடிவிட்டாள் எப்பிடி இஞ்சை சேர்க்கிறது' என்று விளக்கமளித்தார். "சாதி குறைஞ்சது என்றால் என்னம்மா" என்று குழந்தை மதன் கேட்டான். "எங்கட வீட்டில கிணறு வெட்டினவ, வீடு கட்டினவ, தோட்டத்தில வேலை செய்யுறவ, மரமேறி கள்ளுச்சீவுறவ எல்லோரும் குறைஞ்ச சாதிகள்" என்று மாமியாரும் மருமகளும் விளக்கமளித்தனர்.

"அதுதான் அவையளை எங்கட கிணற்றில தண்ணீர் அள்ள விடுறதில்லை, வீட்டுக்கையும் விடுறதில்லை ஏனென்றால் அவை யளை இவ்வாறு செய்யவிட்டால் துடக்கு" என மகள் விஜி தான் விளங்கிக்கொண்டதைச் சொன்னாள்.

"நீங்கள் சொல்லுறது ஒன்றும் எனக்கு விளங்கேல்ல வீடு கட்டுறதும், கிணறு வெட்டுறதும் அவையள் இந்த வேலையைச் செய்யும்போது இல்லாத துடக்கு பிறகு எப்படி வரும்" என்று கண்ணன் விளக்கம் கேட்டான்.

"அதுக்குத்தானே கிணறு வெட்டி தண்ணீர் எடுக்கும்போது கோழி வெட்டியும், வீடு குடிபுகும்போது நீத்துபூசனிக்காய் வெட்டியும் கழிச்சுவிடுறது" என்று லட்சுமியம்மாள் விளக்கமளித் தார்.

"அவை சீவுற கள்ளில மட்டும் துடக்கு இல்லையோ - அப்பா பனங்கள் என்றால் விரும்பிக் குடிப்பாரே" என்றும் கண்ணன் கேட் டான்.

"அது என்ன அவை செய்யுறதே மரத்தில இருந்து வாறது தானே" என கனகமணி கூறினார். நாள்கள் பல நகர்ந்தன தங்கள் மூத்த மகள் சாதிகுறைந்தவனுடன் ஓடிவிட்டாள் என்ற கவ

லையில் வாழ்ந்த தம்பித்துரை குடும்பத்தினர் இப்பொழுது வழமைக்குத் திரும்பிவிட்டனர். தமது நாளாந்த நடவடிக்கைகளை வழமைபோல கவனித்துவந்தனர்.

இந்நாள்களில் ஒரு நாள் தமது சொந்தக் கடமையின் பொருட்டு யாழ்ப்பாணம் சென்றிருந்த தம்பித்துரையர் வீடு திரும்ப வில்லை. கனகமணியும் பிள்ளைகளும் அவரது வரவை எதிர் பார்த்து வீட்டுக்கேற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனர். 'போயிட்டு வாறன்' என்று போனவர் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

என்ன நடந்ததோ ஏது நடந்ததோ என்று அவர்கள் பதறித் துடித்துக்கொண்டிருந்தபோது விடிகாலையில் அந்தச் செய்தி கிடைத்தது. உற்றார், உறவினர் என அனைவரும் அங்கே கூடி விட்டனர். கனகமணி, இலட்சியம்மா குழந்தைகளை அவர்கள் ஆற்றுப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விபத்து ஒன்றில் சிக்கி படு காயமடைந்த நிலையில் தம்பித்துரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி யில் ஆபத்தான கட்டத்தில அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று உற வினர் ஒருவர் சொன்ன செய்தி அவர்களுக்கு பேரிடியானது.

கனகமணியும் பிள்ளைகளும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கே குளுக்கோஸ் இரத்தம் ஏற் றப்பட்டும் உடம்பெல்லாம் பன்டேஜ் சுற்றப்பட்டும் அடையாளம் காணமுடியாது அவசரப் பிரிவு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார் தம்பித்துரை.

கண்ணாடிக் கதவின் வழியாக கணவன் கிடந்த கோலத்தைக்கண்டு துவண்டுபோனார் கனகமணி. அப்பொழுது அங்கே வந்த டாக்டர் தம்பித்துரையரின் குடும்பத்தினரை அடை யாளம் கண்டு 'தக்க நேரத்தில் உங்கட கணவன் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டதால அவரது உயிரைக் காப்பாற்றமுடிந்தது' என்று ஆறுதல் சொன்னார். 'டாக்டர் நீங்கள் கடவுள் மாதிரி எனது கணவனுக்கு உயிர்பிச்சை கொடுத்த தெய்வம்' என இருகைகளையும் கூப்பி டாக்டருக்கு நன்றி தெரிவித்தார்.

“இது எங்களின் கடமை நன்றி சொல்ல வேண்டியது எங்களுக்கு அல்ல உங்கள் கணவரை இங்கே உடனடியாக கொண்டு வந்த அந்த நல்ல உள்ளத்திற்கு” என டாக்டர் சொல்லவும் அங்கே தவராஜா வரவும் சரியாக இருந்தது.

“டாக்டர் அந்த பேசென்டிற்கு இப்ப எப்படியிருக்கிறது” என தவராஜா கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். ‘இப்ப பரவாயில்லை’ என்று கூறிய டாக்டர் தம்பித்துரையரின் குடும் பத்துக்கு அந்த இளைஞனை அறிமுகம் செய்துவைத்தார்.

வீதியில் விபத்தில் சிக்கி இரத்த வெள்ளத்தில் கிடந்த தம் பித்துரையரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து சேர்ந்தது முதல் அவருக்கு தனது இரத்தத்தையே வழங்கி அவரது உயிரைக் காப்பாற்றியவன் தவராஜா என்பதை அறிந்துகொண்ட கனகமணி “தம்பி நீங்கள் யார் பெற்ற பிள்ளையோ உங்களுக்கும் எங்களுக்கும் என்ன உறவோ தெரியாது எங்கள் குடும்பத்து தலைவரை காப் பாற்றியதறகு உங்களுக்கு என்ன கைமாறு செய்ய... என வாயார அவனை புகழ்ந்து நன்றி சொன்னார்.

இவர்களின் சம்பாஷனையில் குறுக்கிட்ட டாக்டர் ‘உங்கள் கணவர் கண்விழித்து விட்டார்’ எனக் கூறி அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

கண்களை திறந்து அனைவரையும் பார்த்த தம்பித்துரையர் மனைவியையும் பிள்ளைகளையும் அருகில் அழைத்தார். நடந்த சம்பவத்தை மெல்ல மெல்ல சொன்னார். தலைக்கு வந்தது தலைப் பாகையுடன் போனதுபோல உயிராபத்திலிருந்து தம்பித்துரையர் மீண்டுவிட்டதால் அந்தக் குடும்பத்தினர் ஆறுதலடைந்தனர். இந்த விபத்தினால் தம்பித்துரையரின் கால் ஒன்று வழங்காமல் போய்விட்டதால ஆஸ்பத்திரிக்கும் அவர் அடிக்கடி வந்து செல்ல வேண்டிய சூழ்நிலையிலிருந்தார். இதனால் தம்பித்துரையர் குடும்பத்துக்கும் தவராஜாவுக்குமான உறவிலும் நெருக்கம் ஏற் பட்டது.

தனது உடம்பில் ஓடுவது தவராஜாவின் இரத்தம் என நன்றியுடன் நினைவுகூர்ந்து கொண்டிருந்த தம்பித்துரையருக்கு தவராஜாவின் பூர்வீகத்தை அறிந்ததும் நெகிழ்ந்துபோனார்.

எந்த மக்களை துடக்கு என்று ஒதுக்கி வைத்தாரோ அந்த மக்களின் ஒருவனாக தவராஜா இருந்தான். சீ... சாதி குறைஞ்சவன்ர இரத்தம் என்ரை உடம்பில ஓடுறதால நானும் குறைஞ்சு போய்விடுவேனோ... இல்லையில்லை... அது என்ன கறுப்பு இரத்தமே... எல்லோரின் உடம்பில ஓடுறதும் சிவப்பு இரத்தம்தானே. இரத்தத்தில சாதியில்லை. என நாள்பூராவும் சிந்தித்துக்கொண்டிருந்தவருக்கு இன்னொரு அதிர்ச்சியான விடயமும் தெரியவந்தது.

தனது உயிரைக் காப்பாற்றிய தவராஜாதான் தனது மகளை கட்டியவனின் சகோதரன் என்பதனை அறிந்துகொண்டபோது அவரால் தவராஜாவை ஒதுக்கிவிடவோ... பிரித்து வைக்கவோ முடியாத நிலையிலிருந்தார்.

"ஊர்ச் சனத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை ஊரில எண்டால்தான் பிரச்சினை பொடியன் யாழ்ப்பாணம்தானே இரண்டாம் பேருக்கும் தெரியாமல் காதோட காது வைச்சால் போல விசயத்தை முடிச்சிடுவம்" எனத் தனது மனைவியுடன் ஆலோசனை நடத்தினார் தம்பித்துரையர்.

தவராஜா ஒரு தீண்டத்தகாதவனாக இருந்தாலும் தனக்கு உயிர் கொடுத்த உத்தமன் என்ற நினைப்பே அவரிடம் மேலோங்கி நின்றது.

சாதி குறைஞ்சவனோட சேர்ந்துவிட்டதாக ஒதுக்கிவிட்ட மகளையும் அவளது கணவனையும் தவராஜாவின் அனுசரணையுடன் வீட்டிற்கு அழைத்து வருவதற்கு தம்பித்துரை முடிவு எடுத்தார்.

*(1979)*

■

# தந்தையின் தாலாட்டு

நண்பனின் சின்ன மகளுக்கு பூப்புனித நீராட்டுவிழா திகதி, நேரம், நாள் எல்லாம் குறித்தாச்சு. மண்டபம் எடுத்தாச்சு இது தொடர்பான தகவல்களை குறுஞ்செய்தி மூலம் எனது தொலைபேசிக்கு அனுப்பியிருந்த நண்பன் மறுநாளே என்னை நேரில் சந்தித்து "மச்சான் மகளின்ர கொண்டாட்டத்துக்கு நீ குடும்ப சகிதம் வந்து அவளை ஆசீர்வதித்து நிகழ்வைச் சிறப்பிக்க வேண்டும்" என்று அன்புருக அழைப்பு விடுத்தான்.

மண்டபம், உடுபுடவைகள், சாப்பாடு, ரிவி, போட்டோ, நகை கள் என கொண்டாட்ட செலவுப்பட்டியலை நீட்டினான்.

"இவ்வளவு தொகையை செலவுசெய்யப்போறியா" என்று நான் வினவினேன். "தாயில்லாமல் வளர்ந்த பிள்ளை மனது நோக விடக்கூடாது. ஒரு குறையும் விடக்கூடாது" என்றான்.

கொண்டாட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அடிக்கடி பேசு வான். ஆடம்பரமோ, அலட்டலோ எதுவுமில்லாத அற்புதமான பிறவி அவன். முப்பது ஆண்டு கால நட்பு அவன் வேறு நான் வேறு பாடசாலையில் படித்தாலும் விளையாட்டு, மற்றும்

தமிழ்தினப்போட்டி, கலாச்சார நிகழ்வுகள் மூலம் எமக்கிடையில் நட்பு ஏற்பட்டது. இத்தனை வருடங்களாகியும் தொடர்கிறது. அனைத்து விடயங்களும் மனம்விட்டுப் பேசுவோம். தொலைபேசியில் கூட நேரம் போவது தெரியாமல் பேசுவோம். அவ்வளவுக்கு நெருக்கமான நட்பு.

அந்த நிகழ்வுக்கு குடும்ப சகிதம் சென்றிருந்தேன். அங்கு கூடியிருந்த உறவுகளுடன் இருந்த நண்பனும் பிள்ளைகளும் என்னை வரவேற்றனர். மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடை அருகே 'கட்அவுட்' ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்தபொழுது என் கண்களிலிருந்து நீர் வடிந்தது. "எல்லோரும் உங்களையே பார்க்கினம் கண்ணீரை துடையுங்கோ" அருகிலிருந்த எனது மகள் மெதுவாகக் கூறினாள்.

அந்தக் 'கட்அவுட்டில்' நண்பனும் மனைவியும் அவர்களது மூன்று பிள்ளைகளும் தத்ரூபமாக காட்சியளித்தனர். மகிழ்ச்சியான குடும்பம். ஐவரின் முகத்திலும் புன்னகை பூத்துக்கொண்டிருந்தது. யாருடைய கண்பட்டுதோ தெரியாது. சிலவருடங்களுக்கு முன் நண்பனின் மனைவி இறந்துவிட்டார். அவர் இறந்தபோது மூன்று பிள்ளைகளும் குழந்தைகளாக இருந்தார்கள். எல்லோரது நிழற்படங்களையும் இணைத்து அழகாக பிரதி எடுத்து இந்த 'கட்அவுட்' அமைக்கப்பட்டிருந்தது. இன்றைய தொழில்நுட்பத்தின் சிறப்பினால் உயிரோவியமாக இது காட்சியளித்தது.

எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக நண்பனின் குடும்பம் வாழ்ந்திருந்தது. 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' அதற்கேற்ப நண்பனுக்கு மனைவி அமைந்திருந்தது. நண்பனும் கணவன் ஸ்தானத்தில் இருந்து தன் பொறுப்புக்களை, கடமைகளை சிறப்புடனே செய்துகொண்டிருந்தான். பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவு எவரையும் கவரும் விதமாகவே இருந்தது.

கணவன் மனைவிக்கு இடையே விட்டுக்கொடுப்பு, நட்பு, புரிந்துணர்வு, பொறுமை, சகிப்புத்தன்மை நிறையவே ஒற்றுமை

இருந்தது. சண்டை, சச்சரவு இல்லாத குடும்பம் என்று எல்லோரும் புகழ்ந்தனர். மனைவி சமைக்கவேண்டும், வீட்டுவேலை, பிள்ளைகளின் வேலை என எல்லாவற்றையும் செய்யவேண்டும் என நண்பன் மனைவியை எதிர்பார்க்கவில்லை. அதேபோலத்தான் கணவரைக்கொண்டுதான் வேலை செய்விக்கவேண்டும் என்று மனைவி நினைப்பதேயில்லை. அவர்கள் இருவருக்கும் இடையில் அந்நியோன்னியம் நிறையவே இருந்தது.

நண்பனிடம் உரையாடும்பொழுது ஒருநாள் இதுபற்றிக் கேட்டேன். "எனக்கு கிடைத்த மனைவி எல்லாம் புரிந்தவள் எதையும் தனக்கு என்று பாராது மற்றவர்கள் வாழ்க்கை பற்றியே சிந்திப்பாள். எனதும் பிள்ளைகளதும் நலனைப் பேணுவதில் வல்லவளாக இருக்கிறாள். எனது குடும்பத்தையும், தனது உறவு-களையும் அன்புடனே கவனிக்கிறாள். இப்படி மனைவி இருந்தால் பிரச்சினையே இல்லை. இதற்கெல்லாம் கொடுப்பனவு வேணும்" மனைவி பற்றி மகிழ்ச்சியுடன் கூறினான். நண்பனும் தன்னுடன் பழகுபவர்கள் அல்லது உறவுகளுக்கு ஏதாவது துன்பம் வந்தால் கைகொடுத்து ஆறுதல் வழங்குவான். நற்குணங்களையுடைய நண்பனின் மனைவி திடீரென காலமாகிவிட்டார் என்ற செய்தி வந்தபோது என்னால் நம்பமுடியவில்லை. அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது என்று தெரியாமல் தவித்தேன். எப்பொழுதும் சிரிப்பும் சந்தோஷமும் கொண்ட அவனது அமைதியான வதனத்தை இனி எப்படிப் பார்ப்பேன். அவனை எப்படி ஆற்றுப்படுத்துவேன் என்றெல்லாம் யோசித்தேன். மூன்று பிள்ளைகளும் நண்பனும் சோகத்தில் மூழ்கியிருந்த காட்சியை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவனை அரவணைத்து ஆறுதல் கூறினேன். அவனது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அதை என்னால் தாங்கமுடியவில்லை.

மனைவி இறந்த பின்னர் குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் தனி ஒருவனாக நின்று சுமக்கத் தொடங்கினான். தாய் இல்லா

குறை தெரியாது பிள்ளைகளை வளர்த்தான். சிறு வயதிலிருந்தே ஏற்றுக்கொண்ட பணிகள் அனைத்தையும் எவ்வித தடயலுமின்றி யும் செய்து முடிப்பது நண்பனிடம் காணப்படும் பண்புகளில் ஒன்று.

பலாலி படைமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை களில் ஒன்று அவனது வீட்டுக்கு அருகாமையில் வெடித்தபொழுது அதில் சிக்கிய அவனது ஒரே ஒரு சகோதரி உடல் சிதறிப் பலி யானாள். அப்போது அவனை தேற்ற நாங்கள் பட்டபாடு அப் பாடா போதுமென்றாகிவிட்டது. பின்னர் இடம்பெற்ற யுத்த நெருக்கடிக்குள் சிக்கி உறவுகள் பலரை இழந்துவிட்டோம். முள்ளி வாய்க்கால் சம்பவங்களைக் கூட அறிந்து தன்னிலை இழந்து தவித் தான். இந்த நிலைதான் அவனுக்கு இன்றும் ஏற்பட்டது. எவரும் ஆறுதல் கூற முடியும் தனக்கு வந்தால் தான் புரிந்துகொள்ளமுடி யும். இவ்வாறான சோகங்களைத் தாங்குவது சுலபமான விடயமல்ல.

மூன்று குழந்தைகளையும் வைத்துப் பராமரிப்பது பெரும் கஸ்டம்தான். நண்பர்கள் பலர் சேர்ந்து அவனது நிலைபற்றி விவாதிப்பார்கள் என்னுடனும் பேசினார்கள். அவனுக்கு அப்படி யென்ன வயது இன்னொரு திருமணம் பற்றி யோசித்தனர். இது தொடர்பாக என்னையே அவனிடம் பேசச்சொன்னார்கள்.

"பணம், வசதி, புகழ் என எது இருந்தாலும் வாழ்க்கைத்துணை இல்லாமல் வாழ்வது பெரும் சிரமந்தான் உனக்காக இல்லா விட்டாலும் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும். ஒரு திருமணம் செய்துகொள்" என்று விரிவாகப் பேசினேன்.

"பிள்ளைகளை வளர்ப்பதும், பக்கத்துணையாக இருப்பதுமே எனக்குப் பெரும் ஆறுதல். இந்த வாழ்க்கையே போதும் எனக்கு. இனியொரு மனைவி வேண்டும் என்ற எண்ணமேயில்லை. அவ் வாறு நான் செய்தால் எனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நான் செய்யும் துரோகமாகவே இருக்கும். மனைவியின் நினைவு களுடனே வாழந்துவிட்டு போகிறேன்" இவ்வாறு தனது பக்கத்து நியாயங்களை கூறினான். மனைவி இருக்கும்போதே இன்னொரு

பெண்ணை நினைத்து வாழ்பவர்கள் மத்தியில் நண்பனின் உயர்ந்த எண்ணம் மேலும் ஒருபடி அவனை என்னிடம் உயர்த்திக்காட்டியது. என்னால் அவனது வார்த்தைகளை மீறிப் பேசமுடியவில்லை.

"உனது நிலைப்பாட்டை புரிந்துகொள்கிறேன் எப்பொழுது வேண்டுமானாலும் இது தொடர்பாக பேசலாம்." என்று கூறி இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி போட்டேன். இன்று பல வருடங்களாகியும் தனது உறுதிப்பாட்டிலிருந்து அவன் விலக வேயில்லை.

மண்டபத்தில் இருந்தவர்கள் பரபரப்பானார்கள். எல்லோரும் வாசலையே பார்க்கத் தொடங்கினார்கள். பூப்புனித நீராட்டு விழா நாயகி அழகாக அலங்கரிக்கப்பட்டு பூங்கொத்து கைகளில் ஏந்தி முன்னுக்குவர நண்பனும் அவனது இரண்டுபிள்ளைகளும் மற்றும் உறவினர்களும் அருகருகே வந்தனர் "பூ ஒன்று பூங்கொத்துடன் பவனி வருகிறது" என்று எனது சின்னமகள் புதுக்கவிதை ஒன்று என் காதுகளில் மெல்லிய குரலில் சொன்னாள். ஆனந்தக் கண்ணீரா? அல்லது அவனது மனைவியின் நினைப்பால் வெளியான சோக உணர்வா? என புரிந்து கொள்ள முடியாமல் கட்டியணைத்து முத்த மிட்டு விடைபெற்றேன்.

வீட்டுக்கு வரும் வழியில் அவனின் வாழ்க்கை, பண்புகள், சிறப்புகள் பற்றியெல்லாம் எனது பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் கூறினேன். பிள்ளைகள் வளர்ந்துவிட்ட பின்னரும் இன்னமும் தாலாட்டு பாடிக்கொண்டிருக்கிறாள்.

"பிள்ளைகள்
பெரியவர்களானாலும்
பெற்றோர்களுக்கு குழந்தைகள்தானே
அதனால்
பெற்றவர்கள் இருக்கும்வரை
குழந்தைகளுக்கு
தாலாட்டு பாடவேண்டும்" எனது சின்னமகள் மீண்டும் ஒரு புதுக்கவிதை எழுதினாள்.

■



சகோதரர் துரைசிங்கம் நாடறிந்த பத்திரிகையாளர். எழுத்தாளர். பன்முகத்திறன் கொண்ட ஊடகவியலாளர் 'ஈழநாடு' பத்திரிகையில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி தன்னை ஒரு முழுமையான பத்திரிகையாளனாக நிலை நிறுத்திக்கொண்டவர்.

மூத்த பத்திரிகையாளர்களான பெருமாள். கே.ஜி. மகாதேவா. அமரர் சசிபாரதி (சபாரத்தினம்). குகநாதன் போன்றோர்களுடன் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். மிகவும் நெருக்கடிமிக்க சூழலில் யாழ்ப்பாணத்தில் போர்ச்சூழல் இறுக்கமடைந்திருந்த வேளைகளில் சமூகப் பொறுப்புமிக்க ஒரு ஊடகவியலாளனாக அவர் ஆற்றிய பணி வெறுமனே தொழில்சார் கடமைப் பொறுப்பாக அடையாளப் படுத்தி விடமுடியாது. சமூகக் கடமையாகவும் அது முக்கியத்துவம் கொண்டது.

"ஏசுவார்கள் எரிப்பார்கள்
உண்மையை எழுதுங்கள்
உண்மையாய் எழுதுங்கள்"

என யோகர் சுவாமிகள் ஈழநாடு பத்திரிகைக்கு உபதேசித்த கருத்திற்கமைய சகோதரர் துரைசிங்கம் அவர்களும் தனது துறைசார் பணியை அர்ப்பணிப்புடன் செய்தவர்.

பத்திரிகையாளர் ஒரு படைப்பாளியாகவும் இருப்பது ஒரு சிலருக்கே கிடைக்கும் கலைப் பேறாகும்.

'உயிரி' என்ற இத்தொகுதி துரைசிங்கம் அவர்களுள் உறைந்து உயிர்த்து நிற்கும் மண் வாசனை மிக்க படைப்பாற்றலின் வெளிப்பாடு. இத்தொகுப்பினூடாக அவர்தம் சமூகம் சார்ந்த பார்வையும் அதன் கருத்தியல் வெளிப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளமை ஒரு வரலாற்று கடமையாகவும் அர்த்தம் கொள்கிறது. அவர்தம் எழுத்துப்பணி காலத் தேவையை நிறைவு செய்ய தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

- ராதேயன்

ISBN 978-955-41686-0-2
9 789554 168602 >

*Noble Printers, Jaffna.*